விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஆவணி 28 புதன்கிழமை (14.09.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 269

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# மனித உரிமை ஆணையத்திற்கு அறிக்கையை அனுப்பினார் பான் கீ மூன்

## இலங்கைக்கு காத்திருக்கிறது ஆபத்து

(ஜெனிவா)

வன்னி யுத்தத்தின் இறுதி நாட்களில் மேற்கொள்ளப்பட்ட யுத்த மீறல்கள் மற்றும் மனிதத்திற்கு எதிரான நடவடிக்கைகள் குறித்து ஐ.நா.நிபுணர் குழுவால் கடந்த ஏப்ரல் மாதம் வெளியிடப்பட்ட அறிக்கை, ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனால் தற்போது ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)



## நல்லூரில் காணாமல் போன சிறுமி இருபாலையில் கண்டுபிடிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆலய தீர்த்தோற்சவத்தின் போது காணாமல் போனதாகக் கூறப்பட்ட இருபாலையைச் சேர்ந்த சிறுமி அழுது கொண்டிருந்த நிலையில் கோப்பாய் தெற்கில் இருந்து நேற்று மாலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சிறுமி கடந்த 29ம் திகதி நல்லூர் ஆலயத்தின் தீர்த்தோற்சவத்திற்குச் சென்றிருந்த போது காணாமல் போனதாக யாழ். மனித உரிமை ஆணைக்குழு மற்றும் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

சாதாரண பிள்ளைகளைப் போன்று இல்லாமல் (19ஆம் பக்கம் பார்க்க)

## பிளேக்கின் வருகைக்கு எதிராக யாழில் நேற்று ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

தெற்கு மற்றும் மத்திய ஆசிய நடவடிக்கைகள் தொடர்பான அமெரிக்கத் துணை ராஜாங்கச் செயலர் ரொபேர்ட் ஓ பிளேக் தலைமையில் 5 பேர்கொண்ட அமெரிக்க பிரதிநிதிகள் குழுவொன்று நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்திருந்தது.

இந்தக் குழுவினர் யாழ்.சிவில் சமூகப் பிரதிநிதிகளுடன் யாழ்ப்பாணம் 4ஆம் குறுக்குத் தெருவிலுள்ள அமெரிக்கன் தகவல் கூடத்தில் பிற்பகல் 1.30 மணியளவில் கலந்துரையாடவுள்ளனர் என ஏற்கெனவே தகவல் வெளியானதையடுத்து அப்பகுதியில் கூடியவர்கள் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணிவரை இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இதையடுத்து பிளேக் தலைமையில் வந்தக் குழுவினர் அங்கு இடம்பெற இருந்த சந்திப்பை நிறுத்தினர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் எதிர்ப்காட்டும் வகையில்,

அதில் தீர்வுக்கு வழிசெய்தால் வரவேற்போம் எங்கள் (20ஆம் பக்கம் பார்க்க)

## மீள் குடியேற்றம் ஏன் தாமதம் பிளேக் கேட்டாரே கேள்வி

(யாழ்ப்பாணம்)

தெற்கு மற்றும் மத்திய ஆசிய நடவடிக்கைகள் தொடர்பான அமெரிக்க துணை இராஜாங்க செயலாளர் ரொபேர்ட் ஓ பிளேக் தலைமையில் யாழ்ப்பாணம் வருகை தந்த அமெரிக்க பிரதிநிதிகள் குழுவினர் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கத்துடன் நேற்று முற்பகல் 11 மணியளவில் மாவட்ட செயலகத்தில் விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்டத்தின் தற்போதைய நிலைவரம் தொடர்பாக கேட்டறிந்ததோடு மீள்குடியேற்றம் தாமதமடைவதற்கு என்ன காரணம் எனவும் அமெரிக்க பிரதிநிதிகளால் கேள்வி எழுப்பப்பட்டதாக கலந்துரையாடல் முடிவடைந்த பின்பு பத்திரிகையாளர் சந்திப்பின் போது மேலதிக அரசாங்க அதிபர் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

மீள்குடியேற்றம் தாமதமடைவதற்கு பல்வேறு காரணங்கள் இருந்தாலும் முக்கியமாக 30 வருடமாக யுத்தம் இடம்பெற்ற பல பிரதேசங்களில் இன்னும் முழுமையாக மிதிவெடிகள் அகற்றப்படவில்லை.

அத்தோடு இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின் கீழ் (20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் கைதிகள் மீது சிறையில் தாக்குதல்

(கொழும்பு)

கொழும்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் மீது பாதாள உலகக் குழுவினர் நேற்று தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதில் 3 தமிழ் அரசியல் கைதிகள் படுகாயமடைந்துள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் (20ஆம் பக்கம் பார்க்க)



ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையின் கூட்ட தொடரில் பங்குபற்றுவதற்காக ஜெனிவா சென்றுள்ள அமைச்சர் மஹிந்த சமரசிங்க தலைமையிலான இலங்கை தூதுக்குழுவினர் நேற்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளனர். இச்சந்திப்பில் அமைச்சர்களான நிமால் சிறிபால டி சில்வா மற்றும் அனுரபிரியதர்ஷன யாப்பா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ந-5)

## புலமைப்பரிசில் பரீட்சை முடிவு இவ்வாரத்தில்

(கொழும்பு)

தரம் 5 புலமை பரிசில் பரீட்சை பெறுபேறுகள் இந்த வாரத்திற்குள் வெளியிடப்படும் என கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

வரலாற்றில் முதல் தடவையாக 20 நாட்களில் புலமை பரிசில் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகளை நிறைவு செய்ய முடிந்துள்ளதாக அமைச்சர் புகழ் பாடியுள்ளார்.

பத்ரமுல்லை கல்வி அமைச்சில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய (19ஆம் பக்கம் பார்க்க)




புத்தம் புதிய டிசைன்களில் வீட்டு உபகரணங்களைப் பெற்றுக்கொள்ள..

நவீன் செரமிக்

No.212, Palaly Rd, Jaffna. 021 222 0033 / 021 222 0044

No.05, Stanley Rd, Jaffna. 021 222 4777 / 021 222 4888

Metro Engineering (Pvt) LTD

## ஐ.நா.நிபுணர்குழு அறிக்கை நிகழ்ச்சி நிரலில் சேர்கிறது

(கொழும்பு)

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பான விவகாரத்தை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் நிகழ்ச்சி நிரலில் சேர்ப்பதற்கான நடவடிக்கையை ஐரோப்பிய ஒன்றியம் மேற்கொள்ளவுள்ளதாக ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

ஆனாலும் அடுத்த ஆண்டுவரை இந்த அறிக்கை தொடர்பான எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட வாய்ப்பில்லை என்று மேற்குலக இராஜதந்திரி ஒருவர் ரொய்ட்டரிடம் கூறியுள்ளார்.

அதேவேளை ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் (20ஆம் பக்கம் பார்க்க)

## மர்ம மனிதன் வந்தால் நீங்கள் அழைக்க வேண்டியது

(யாழ்ப்பாணம்)

மர்ம மனிதன் நடமாட்டம் மற்றும் குற்றச் செயல்கள் தொடர்பில் பொலிஸாருக்கு உடனடியாக தகவல்களை வழங்குவதற்கான தொலைபேசி இலக்கங்களை வடக்கு மாகாண (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வர்த்தகப் பெருமக்களே...

வியாபாரத்தைப் பதிவு செய்தல்

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

VTL மெனேஜ்மெண்ட்
கொழும்பு-03
0729994777
0117902938


## பெயர் மாற்ற அறிவித்தல்

செல்வா நகர் கிளிநொச்சியைச் சேர்ந்த மோசஸ் அருளப்பு நந்தினி ஆகிய நான் (14.09.2011) இன்று முதல் எனது பெயரை விஜயசேகர் மேரி என பெயர் மாற்றம் செய்துள்ளேன் என்பதை இத்தால் இலங்கை ஜனநாயக சோசலிஷ குடியரசு மக்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

இப்படிக்கு:
விஜயசேகர் மேரி
(6134)

# யாழ்.வேம்படிக்கு புதிய அதிபர்

யாழ்.வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலையின் புதிய அதிபராக திருமதி ராஜினிதேவி முத்துக் குமாரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இப்பாடசாலையின் ஆசிரியராக கடமையாற்றி இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III போட்டிப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டு பின்னர் இப்பாடசாலையின் பிரதி அதிபராக கடமையாற்றியவர். அத்துடன் இவர் இப்பாடசாலையின் பழைய மாணவி என்பதும் குறிப்பிடத்தக்கது. நேற்று இவர் பதவியேற்றுள்ளார்(நு)

## தேடுகின்றேன் அன்ராவை....

### அமரர் ரேனுகா பிள்ளைநாயகம்

(வட்டாரம் 5, புங்குடுதீவு)



மண்ணில்: 01.03.1980

விண்ணில்: 14.03.2011

அன்ரா....
சாமிகிட்ட போனதென்று – என்
அம்மா சொல்லி வச்சா – அந்த
சாமியிடம் கேட்டுவிட்டேன்
அன்ரா காணலையாம் எங்கு போனீர்
தத்தித் தத்தி நடந்த போது
பார்த்துப் பார்த்து ரசித்தீரே – நான்
பாடசாலை போகும் போது
பார்க்கலையே எங்கு போனீர்
அன்ரா நீங்க இல்லையென்று – எனக்கு
**Happy Birthday** இல்லையாம்
புது உடுப்பும் இல்லையாம்
அன்ரா நீங்க வந்தெனக்கு
வாங்கித்தர மாட்டீரோ!

கோண்டாவில்
14.09.2011

விபுல் லஜித் (மகன்)
(சி-4431)

## வீதிப் பெயர் மாற்றக் கோரிக்கை

வலி கிழக்கு பிரதேச சபையின் அச்சுவேலி உப அலுவலக எல்லைப் பிரிவில் வட்டாரம் 2இல் அமைந்துள்ள பத்தமேனி விநாயகர் வீதியினை செல்லமுத்து வீதி எனப் பெயர் மாற்றம் செய்து தருமாறு அப்பகுதி பொதுமக்களால் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இக் கோரிக்கைக்கு ஆட்சேபனை அல்லது அபிப்பிராயங்கள் ஏதும் இருப்பின் எதிர்வரும் செப்டம்பர் 30ஆம் திகதிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ அறியத்தரலாம். அத்துடன் எழுத்து மூலம் தமது அபிப்பிராயங்களை அறிவிக்க விரும்புவோர் தவிசாளர், வலி கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அ.உதயகுமார்,
தவிசாளர்
வலி கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
(சி-4428)

## விபத்தில் இருவர் காயம்

மோட்டார் சைக்கிளும்–துவிச் சக்கர வண்டியும் மோதி விபத்துக்குள்ளானதில் முதியவரும், இளைஞனும் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.ஆஸ்பத்திரி வீதி செலான் வங்கிக்கு முன்னால் நேற்று இவ் விபத்துச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மேற்படி விபத்தில் யாழ்ப்பாணம் றக்கா வீதியைச் சேர்ந்த நி.மனோகரன்(வயது 62), மயிலங்காட்டைச் சேர்ந்த எம்.யோசுவா (வயது 24) ஆகியோரே காயப்பட்டவர்களாவர்.(நு-4)

## ஆலய உதவியாளர் தேவை

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலின் ஆலய வேலைகளை கவனிப்பதற்கு உதவியாளர் தேவை. கொடுப்பனவு நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். ச.பாலபரணம், புகையிரத நிலைய வீதி, கொக்குவில் என்னும் முகவரிக்கு மாலை 3.00 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரை மேல் உள்ள முகவரிக்கு தொடர்பு கொள்ளவும். *தொலைபேசி இலக்கம் :0757610010*

தலைவர்
ச.பாலபரணம்

கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்
(6133)

## கூறுவிலை விற்பனை

### இலங்கைப் போக்குவரத்துச் சபை (வடக்கு),கோண்டாவில்

இலங்கைப் போக்குவரத்துச் சபை (வடக்கு) பிராந்தியத்தின் கீழ் உள்ள கோண்டாவில், வவுனியா மற்றும் மன்னார் சாலைகளின் பேருந்துகளில் இருந்து கழிக்கப்பட்ட பின்வரும் பொருட்கள் கூறுவிலை விற்பனைக்காக விடப்பட்டுள்ளது. இப் பொருட்களின் விபரம் கீழே தொகுதிவாரியாக தரப்பட்டுள்ளன.

| தொகுதி இல. | விபரம் |
|---|---|
| 01 | கழிக்கப்பட்ட வில்லுத்தகடுகள் |
| 02 | கழிக்கப்பட்ட அலுமீனியம் |
| 03 | கழிக்கப்பட்ட இரும்பு |
| 04 | கழிக்கப்பட்ட வாகன உதிரிப்பாகம் |
| 05 | கழிக்கப்பட்ட பித்தளை |

மேலே கூறப்பட்ட பொருட்களை கொள்வனவு செய்ய விரும்புவோர் பலாலி வீதியில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்துச் சபை (வடக்கு) கோண்டாவில் தலைமைக் காரியாலயத்தின் வேலை நாட்களில் (சனி/ஞாயிறு தவிர்ந்த) காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை பார்வையிட முடியும். மேலும் மீளளிக்காத வைப்புத் தொகையாக 2,500/-யும் மீளளிக்கக்கூடிய வைப்புத்தொகையாக 50,000/-யும் எமது பிராந்திய முகாமையாளர் (நிதி) அவர்களிடம் செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக் கொள்ளவேண்டும்.

தங்களது கூறு விலைக்கோரிக்கைகளை 2011.09.23 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக **தலைவர், கூறுவிலைச் சபை, இ.போ.ச. (வட), பலாலி வீதி, கோண்டாவில்** எனும் முகவரியிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். பொருட்கள் பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்கப்பட மாட்டாது என்பதனை கருத்திற்கொள்ளவும்.

பொருட்களின் பெறுமதியின் 25% ற்குரிய பணத்தினை உடன் செலுத்துவதுடன் மிகுதிப் பணம் ஒரு வார காலத்திற்குள் செலுத்தப்பட்டு இக்காலப் பகுதிக்குள் பொருட்கள் சாலை வளவினுள் இருந்து எடுத்துச் செல்லப்பட வேண்டும் என்பதனையும் கருத்திற் கொள்ள வேண்டும்.

தலைவர்
கூறுவிலைச்சபை ,
இ.போ.ச (வட)
கோண்டாவில்.

(சி-4430)

உ
சிவமயம்

புளியங்கூடலை பிறப்பிடமாகவும் சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த

### அமரர் திருமதி சத்தியபாமா சோமசுந்தரகுருக்கள்

அவர்களின்

## வருஷாப்திய அழைப்பு

(ஓராண்டு நினைவு)



நிகழும் கர வருடம் ஆவணி மாதம் அபரபட்ச துதியை கூடிய நாளில் இன்று (14.09.2011) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் சிரார்த்த கிரியைகளிலும் மதிய போசனத்திலும் உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

முருகமூர்த்தி வீதி,
சங்கானை.

இங்ஙனம்
சிவஸ்ரீ சி. சோமசுந்தரக்குருக்கள்
குடும்பத்தினர்
(6139)


**UNI மற்றும் Nottingham College of London கல்லூரிகள் வழங்கும் A/L 2011 பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான**

ele

**பல்வேறு சர்வதேச கற்கை நெறிகள் தொடர்பான மாபெரும் இலவச வழிகாட்டல் கருத்தரங்கும் தொழிற்பயிற்சியும் !!!**

Unitec

**காலம் - 16/09/2011 (வெள்ளிக்கிழமை)**
**நேரம் - காலை 10.30 - 12.30 மணிவரை**
**இடம் - நாவலர் கலாச்சார மண்டபம்**

வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் உடனடி அனுமதியும் அன்றய தினம் வழங்கப்படவுள்ளதால் பெற்றோரும் விரும்பின் பங்குபற்றலாம்!!!

முக்கிய குறிப்பு !!! நீங்களும் இக் கருத்தரங்கில் பங்குபற்றி அதிஷ்டசாலி ஆகுங்கள்!!

இக் கருத்தரங்கில் கலந்து கொள்ளும் மாணவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்டு ரூபா 60000/= பெறுமதியான *Pentium - 04* கணினி ஒன்று எம்மால் இலவசமாக வழங்கப்படும். ஆகையால் தவறாது அனைத்து மாணவர்களும் கலந்து அதிஷ்டசாலி ஆகுங்கள்!

Advanced Diploma in ICT , HND, B.Sc (Hons), Mobile Phone Repairing, Hacking & IT Security, Multimedia கற்கை நெறிகள் பற்றிய பூரண விளக்கங்கள் மற்றும் அன்றய தினம் அனைத்து கற்கை நெறிகளுக்கும் புலமைப் பரிசில்களும் வழங்கப்படும்!!!

இக் கருத்தரங்கில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பிரதிநிதிகள் கலந்து கொள்ள உள்ளதால் தற்போது A/L பீட்சைக்கு தேற்றி அடுத்து எத்தகய கற்கைநெறிகளை நீங்கள் கற்று உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை இலகுவில் பெற்றுக் கொள்ளலாம் போன்ற விடயங்கள் ஆராயப்பட உள்ளதால் தவறாது அனைத்து மாணவர்களும் பங்கு பற்றி பயன் பெற்றுக் கொள்ளவும்.

!!! இக் கருத்தரங்கில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படும் !!! இவ் அரிய சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள்!! மேலும் பல கணினி உபகரணங்களும் பரிசாக வழங்கப்படும்!!

மேலதிக விபரங்களுக்கு:- UNI - ICT Campus (Pvt) Ltd, No :- 83, Palaly Road, Kantharmadam, Jaffna. T.P :- 021 321 6433 / 0777 110 862

(எமது நிறுவனமானது உலகில் உள்ள 40 ற்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்கள் மற்றும் அரச உயர் கல்லூரிகளால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகும்)

- Conditions for Apply -

## இன்று ஒரு தகவல்

# அறிந்ததும் அறியாததும்!

ஒஸ்பென்ஸ்கி என்ற ஒரு பெரிய சிந்தனையாளர் ரஷ்யாவில் இருந்தார். இவர் நிறைய புத்தகங்களை எழுதியுள்ளார்.

உலகின் மிகச் சிறந்த மூன்று புத்தகங்களில் ஒன்று இவர் எழுதிய புத்தகம் எனக் கூறப்படுகின்றது.

இவர் ஒரு பெயர் பெற்ற எழுத்தாளர் ஆவார்.

அக்காலத்திலே குருத்ஜீஃப் என்று ஒரு பெரியவர் மிகவும் எளிமையான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தார்.

அப்பொழுது அந்த பெரியவரைத் தேடி எழுத்தாளர் வந்தார். "ஐயா... உங்களிடம் சில கேள்விகள் கேட்டு விளக்கம் பெற்றுப் போகலாமென்று வந்துள்ளேன்" என்றார்.

இதற்கு அந்தப் பெரியவர் உடனே என்ன செய்தார் தெரியுமா? ஒரு வெற்றுக்காகிதத்தை எடுத்து அந்த எழுத்தாளரிடம் கொடுத்தார். இதை வைத்திருங்கள்... நாங்கள் இரண்டு பேரும் பேசுவதற்கு முதல் நீங்கள் ஒரு காரியம் செய்யவேண்டும் என்று சொன்னார்.

அப்பொழுது "என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள்!" என்று எழுத்தாளர் கேட்டார்.

இந்தக் காகிதத்திலே... உங்களுக்கு தெரிந்ததெல்லாம் என்ன? தெரியாததெல்லாம் என்ன? என்ற பட்டியலை எழுதிக்கொண்டு வாருங்கள்! அதற்குப் பின்னர் உங்களுக்குத் தெரியாத விடயங்களைப் பற்றி நாங்கள் இரண்டு பேரும் உரையாடலாம்! ஏனென்றால் உங்களுக்குத் தெரிந்ததைப் பற்றி நாங்கள் பேசுவதால் எதுவித பிரயோசனமுமில்லை. தெரியாததைப் பற்றிப் பேசினால் தான் அது உங்களுக்கு உபயோகமாக இருக்கும் என்றார்.

இவர் இவ்வாறு கூறியது அந்த எழுத்தாளருக்கு சிறிது தர்ம சங்கடமாக இருந்தது.

நான் எவ்வளவு பெயர் பெற்ற சிந்தனையாளர்... என்னைப் போய் இவர் இப்படி எழுதச் சொல்கின்றாரே என்று நினைத்தார். இருந்தாலும் அந்தப் பெரியவர் மீது இவருக்கு மரியாதை அதிகம். அதனாலே அவர் கொடுத்த காகிதத்தை வாங்கிக் கொண்டு தனியாக ஓர் இடத்திலே போய் அமர்ந்தார். அதன் பின்னர் யோசிக்க ஆரம்பித்தார்.

கடவுளை எனக்குத் தெரியுமா? என்று முதலிலே யோசித்தார். "கடவுளைப் பற்றித்தான் எனக்குத் தெரியுமே தவிர கடவுளைத் தெரியாது!" என்பது புரிந்தது.

அதனாலே தனக்குத் தெரிந்த விடயம் 'கடவுள்' அவராலே குறிப்பிட முடியவில்லை. சரி அடுத்ததாக 'ஆத்மா'வைப்பற்றி சிந்தித்தார்.

ஆத்மாவைப் பற்றித்தான் நமக்குத் தெரியுமே தவிர ஆத்மா நமக்குத் தெரிந்த விடயமாக இருக்கவில்லை... என்பது புரிந்தது. அதனாலே ஆத்மாவையும் தெரிந்த பட்டியலிலே சேர்த்துக் கொள்ள முடியவில்லை!

இப்படி ஒவ்வொன்றாக அவர் யோசித்து யோசித்து எதுவுமே எனக்குத் தெரியவில்லை என்பது எனக்குத் தெளிவாகின்றது.

உடனே எழுந்து அந்தப் பெரியவரிடம் சென்றார். "ஐயா! உங்களை வந்து சந்திக்கிறவரை எவ்வளவோ விடயங்கள் எனக்குத் தெரிந்துள்ளதாக நினைத்தேன். அதனாலே உங்களிடம் நிறைய கேள்விகள் கேட்க வேண்டும் என்ற ஆர்வத்தோடு வந்தேன். ஆனால், நீங்கள் கேட்ட ஒரு கேள்விக்கு விடை காண முயன்ற போது எனக்கு எதுவுமே தெரியவில்லை என்பதைப் புரிந்து கொண்டேன்! என்றார்.

அப்படியென்றால் உலகப்புகழ் பெற்ற இவ்வளவு புத்தகங்களை உங்களாலே எப்படி எழுத முடிந்தது? என்று கேட்டார் பெரியவர்.

ஐயா! இப்பொழுதுதான் எனக்குப் புரிகின்றது!... எனக்குத் தெளிவில்லாத பல விடயங்களையும் நான் எழுதியிருக்கிறேன். அவையெல்லாம் வெறும் வார்த்தைக் குவியல்கள் என்பதை இப்போது நான் உணர்கிறேன். வார்த்தைகளே அறிவு என்கிற மயக்கத்திலிருந்து இப்பொழுது நான் விடுபட்டுவிட்டேன். அறிவுத் துறையிலே நான் ஒரு பூச்சியம் என்பது புரிந்து விட்டது என்றார் எழுத்தாளர்.

அப்பொழுது பெரியவர் சொன்னார்;

"இப்பொழுதுதான் உங்களுக்கு உண்மையான அறிவு ஏற்பட ஆரம்பித்துள்ளது! எப்பொழுது ஒரு மனிதன் தன்னுடைய அறியாமையை உணர ஆரம்பிக்கிறானோ அப்போதுதான் அறிவின் தொடக்கத்திலே அடியெடுத்து வைத்தவனாக அவன் ஆகிறான்!" என்றார்.

அதற்குப் பின் ஒஸ்பென்ஸ்கி என்ற அந்த சிந்தனையாளர் புத்தகம் எதுவும் எழுதவில்லை என்று சொல்கின்றார்கள். நம்முடைய அறியாமை எனக்குப் புரிய ஆரம்பித்து விட்டது. நம்முடைய அறிவு வளர ஆரம்பித்து விட்டது என்று அர்த்தம். ஆனால், அது நமக்குப் புரியவில்லை... அதுதான் சிக்கல்!

ஒரு நண்பர் கூறினார்:

"சேர் நான் எப்பொழுது வீட்டைப் பூட்டிவிட்டு வெளியூர் சென்றாலும் திருடன் பூட்டை உடைத்துவிடுகின்றான்... அதனாலே இப்பொழுது புத்திசாலித்தனமாக ஒரு காரியம் செய்துவிட்டு உங்களுடைய ஊருக்கு வந்திருக்கின்றேன்!" என்றார்.

அப்பொழுது அவர் அந்த நண்பரைப் பார்த்து "என்ன செய்து விட்டு வந்துள்ளீர்கள்?" என்று கேட்டார்.

அதற்கு அந்த நண்பர் வீட்டைப் பூட்டாமலே வந்துவிட்டேன்! என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பம் கோரல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு வலயக்கல்வி அலுவலகத்தில் ஆரம்பக்கல்வி, தமிழ், ஆங்கிலம், நடனம், விவசாயம், மனையியல், வர்த்தகம், இரண்டாம் மொழி (சிங்களம்), சங்கீதம் ஆகிய பாடங்களுக்கான பதினொரு சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கு இலங்கை ஆசிரியசேவை வகு ப்பு-I அல்லது 2-I இனைச் சேர்ந்த பின்வரும் தகைமைகளை கொண்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்க முடியும்.

குறிப்பிட்ட பாடத்தினை (அல்லது அப்பாடம் சார்ந்த ஏற்புடைய பாடத்துறை) ஒரு பாடமாகக் கொண்டு பட்டம் பெற்றிருப்பதோடு விண்ணப்பிக்கும் பாடங்களில் விண்ணப்பதாரி 7 வருடங்களுக்கு குறையாத கற்பித்தல் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் பட்டப்பின் கல்வி டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருப்பவராகவும் இருத்தல் வேண்டும்.

கல்விமாணி பட்டதாரிகளுக்கு பட்டப்பின் கல்வி டிப்ளோமா சான்றிதழ் தகைமையிலிருந்து விலக்களிக்கப்படும் அல்லது விண்ணப்பிக்கும் பாடத்துறையில் அரசினர் ஆசிரிய கலாசாலையில் அல்லது தேசிய கல்வி நிறுவகத்தில் ஆசிரியப்பயிற்சி பெற்றிருப்பதோடு விண்ணப்ப முடிவுத்திகதியன்று குறித்த பாடத்தில் பயிற்றப்பட்ட ஆசிரியராகவும் பத்து வருடங்களுக்கு குறையாது தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை கற்பித்தல் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

பயிற்றப்பட்ட ஆசிரியராக இருந்து பட்டம் பெற்றவர்களுக்குப் பயிற்சித் துறையும் பட்டமும் அக்குறிப்பிட்ட பாடத்தைச் சார்ந்ததாக இருக்குமிடத்து பட்டப்பின் கல்வி டிப்ளோமா சான்றிதழ் தகைமையிலிருந்து விலக்களிக்கப்படும்.

விண்ணப்பிக்க விரும்புவோர்கள் மாதிரி விண்ணப்பப்படிவங்களை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று முப்பிரதிகளில் பூர்த்தி செய்து எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்பாக உரிய முறைப்படி வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும். 22.09.2011ற்குப் பின்னர் அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது. மேலதிக விபரங்களை முல்லைத்தீவு வலயக்கல்வி அலுவலக விளம்பரப்பலகையில் பார்வையிடலாமென முல்லை வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ண குமார் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

# கிழக்கு மாகாணத்திலேயே அதிகளவான புற்றுநோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

இலங்கையில் அதிகளவிலான புற்றுநோயாளர்கள் கிழக்கு மாகாணத்திலேயே இனங்காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

எனினும், இந்த எண்ணிக்கையைச் சரியாக அறிந்து கொள்வதில் பிரச்சினைகள் காணப்படுவதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்கமைய கிழக்கு மாகாணத்திலுள்ள புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை மற்றும் அதற்கான காரணத்தைக் கண்டறிவதற்கான விசேட விசாரணைகளை நடத்துமாறு சுகாதார அமைச்சினால் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மட்டக்களப்பு வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவின் நிர்மாணப் பணிகளும் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு உள்ளிட்ட பகுதிகளில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் பதுளை, அம்பாறை மற்றும் கண்டி வைத்தியசாலைகளுக்கு சிகிச்சைகளுக்காக செல்ல வேண்டிய நிலை காணப்படுவதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 30 | 70 |
| உருளைக்கிழங்கு | 105 | 170 | 90 |
| பச்சைமிளகாய் | 100 | 130 | 80 |
| தக்காளி | 40 | 60 | 30 |
| மரவள்ளிக் கிழங்கு | 35 | 40 | 40 |
| கோவா | 40 | 60 | 50 |
| கரட் | 50 | 80 | 70 |
| பூசணி | 25 | 50 | 25 |
| புடோல் | 30 | 40 | 30 |
| வாழைக்காய் | 40 | 30 | 30 |
| சின்ன வெங்காயம் | 90 | 60 | 100 |
| பெரிய வெங்காயம் | 65 | 80 | 80 |
| பாகற்காய் | 80 | 120 | 110 |
| வெண்டிக்காய் | 50 | 50 | 60 |
| கருணைக் கிழங்கு | -- | 140 | 100 |
| பயற்றங்காய் | 50 | 80 | 80 |
| லீக்ஸ் | 50 | 60 | 50 |
| பீற்றூட் | 15 | 20 | 20 |
| கறிமிளகாய் | 40 | 40 | 40 |
| முருங்கைக்காய் | 80 | 120 | 150 |
| போஞ்சி | -- | 130 | 90 |
| கத்தரிதம்புள்ள | 50 | 20 | 60 |
| கீரை - 1 பிடி | 8-10 | 20 | 20 |
| தேசிக்காய் | 150 | 200 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 30 | 30 |

# இராசி பலன்

14.09.2011
(ஆவணி 28, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு
துதியை முன்னிரவு 6.52 மணிவரை
உத்தரட்டாதி முற்பகல் 10.23 மணிவரை
இராகுகாலம் 12.03-1.33 மணிவரை
சுபநேரம் 4.33-6.03 மணிவரை

**மேடம்** தேகாரோக்கியத்தில் கவனம் தேவை, அலைச்சல்கள் அதிகரித்தாலும் சிறு ஆதாயமும் கிடைக்கலாம், பொழுதுபோக்கு விடயங்களில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்** செல்வாக்கு மேலோங்கும் நாள், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பயண வாய்ப்புக்கள் கை கூடுவதற்கான அறிகுறி தோன்றும், பொருட் சேர்க்கையுண்டு.

**மிதுனம்** மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை அமையும், அரசு வழி அனுகூலமுண்டு, தொல்லை கொடுத்தவர்கள் மனம் மாறி தொழில் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்குவர்.

**கடகம்** மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், பூர்வீகச் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வழக்குகள் சுமுகமாக முடியும், கிடைகுமோ கிடைக்காதோ என நினைத்த பொருள் கிடைக்கலாம்.

**சிங்கம்** வாகன பழுதுச் செலவுகள் அதிகரிக்கலாம், நாவில் கவனம் செலுத்தினால் நாணய பாதிப்பிலிருந்து விடுபடலாம், போசன சுகமுண்டு, கௌரவக்குறைவான நாள்.

**கன்னி** சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், வாழ்க்கைத் துணை வழியே வசந்தம் வந்து சேரும், புதிய தொழில் தொடங்க திட்டம் தீட்டுவீர்கள், திருமண முயற்சி கைகூடலாம்.

**துலாம்** நல்ல செய்திகள் நாடி வரும் நாள், விருந்தினர் வருகையுண்டு, நல்லவர்களின் நட்பு விரிவடையும், வெளியூர்த் தொடர்புகள் நன்மையளிக்கும், அதிகாரிகள் அனுசரணையாக நடந்து கொள்வர்.

**விருச்சிகம்** சுப செய்திகள் வந்து சேரும் நாள், பணத்தேவைகள் பூர்த்தியாகும், பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் நடைபெறலாம், சொத்துக்களால் நன்மையுண்டு.

**தனுசு** மனதில் இனம்புரியாத சந்தோசம் குடி கொள்ளும், சகோதர வழியில் ஏற்பட்ட சச்சரவுகள் அகலும், தொழிலில் எடுத்த முயற்சி வெற்றி பெறும், பிரயாண சுகமுண்டு.

**மகரம்** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் நாள், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரும், பெண் வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும், தேவைகள் பூர்த்தியாகும்.

**கும்பம்** பயணங்களால் பலன் கிடைக்கும், ஆரோக்கியம் சீராகும், மதியம் மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறலாம், கொள்கைப் பிடிப்பை கொஞ்சம் தளர்த்திக் கொள்வீர்கள்.

**மீனம்** பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறும் நாள், குடும்பத்தினரிடம் முன்கோபத்தைக் குறைப்பது நல்லது, பயணத்தால் திடீர் மாற்றம் செய்யும் சூழ்நிலை அமையலாம், போசன சுகமுண்டு.

வளவன்

# தமிழ் மக்கள் தங்கள் உரிமைக்காக குரலெழுப்ப முடியாத நிலையிலுள்ளனர்

## அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் பிளேக்கிடம் எடுத்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

தெற்கு மற்றும் மத்திய ஆசிய நடவடிக்கைகள் தொடர்பான அமெரிக்க துணை இராஜாங்கச் செயலாளர் றொபேர்ட் ஓ பிளேச் தலைமையிலான குழுவினர் நேற்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தனர்.

இந்தக் குழுவினர் யாழ்ப்பாணம் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் பிரதிநிதிகளை சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தக் கலந்துரையாடலின் போது பல்வேறு விடயங்கள் குறித்து கலந்தாலோசிக்கப்பட்டன.

இதில் அண்மைக்காலமாக யாழ். குடாநாட்டு மக்களின் இயல்பு நிலையை பாதிக்கும் வகையில் மர்ம மனிதன் அச்சுறுத்தல் நிலவுவதாகவும் அது தொடர்பாக அரசாங்கம் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என அரசசார்பற்ற இணையத்தின் பிரதிநிதிகளால் சுட்டிக்காட்டப்பட்டது.

உளவியல் ரீதியாக மக்களை பாதிக்கும் வகையில் இந்த மர்மமனிதன் அச்சுறுத்தல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் தங்கள் உரிமைக்காக குரலெழுப்ப முடியாத நிலையில் உள்ளனர். தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதன் மூலமே இந்த நிலை மாற்றப்படும்.

யாழ். குடாநாட்டில் 45 வீதமானவர்கள் தொழில் வாய்ப்பின்றி வாழ்ந்து வருகின்றனர்.

எங்களுடைய பிரதேசத்தில் மொழி, மதம், கலாசாரம் போன்றவற்றை பாதுகாப்பதற்கு ஒரு கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும். இடம்பெயர்ந்த மக்கள் மீளவும் அவர்களது சொந்த இடங்களுக்கு குடியமர்த்தப்படவில்லை. அதற்கான வழிவகைகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும்.

தமிழர்கள் பரம்பரையாக வாழ்ந்த நிலங்கள் சிங்கள நிறுவனங்களுக்கு தாரைவார்க்கப்படுகிறது. இவை தடுத்து நிறுத்தப்பட வேண்டும் எனப் பலரும் தமது கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இது தவிர ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையில் நீதியான நியாயமான உண்மைகள் குறிப்பிடப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தனர்.

பிரதிநிதிகளின் வேண்டுகோளையும் கருத்துக்களையும் அடுத்து இங்கு கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பாக நிச்சயம் தமது அரசாங்கத்திடம் தெரிவிப்பதாக அவர் கூறினார். (ஸ்ரீ-6)




## வேலணைப் பிரதேச சபைக்குட்பட்ட மூன்று குளங்கள் புனரமைப்பு

(வேலணை)

வேலணைப் பிரதேச சபைக்குட்பட்ட மூன்று குளங்கள் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா ஆகியோரின் ஒழுங்கமைப்பில் கிளிநொச்சி இராணுவ முகாமில் உள்ள பொறியியற் பிரிவைச் சேர்ந்த இராணுவத்தினரின் கனரக வாகனத்தின் மூலம் புனரமைப்பு செய்யப்பட்டு வருவதாக வேலணைப் பிரதேசசபை தவிசாளர் சி.சிவராஜா தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் தெரிவிக்கையில், அதிசய வைரவர் கோவிலடிக்குளம், வேலணைப் பெருங்குளம், செட்டிப்புலத்திலுள்ள வெட்டுக் குளம் ஆகிய குளங்களே புனரமைப்பு செய்யப்பட்டு வருவதாகவும் இப்புனரமைப்பு வேலைகள் கடந்த 11 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இக்குளங்கள் ஆழமாக்கப்பட்டு சுற்றிவர உள்ள அணைக் கட்டுக்கள் அகலமாக்கப்பட்டு பலப்படுத்தப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

அத்தோடு மேற்குறித்த பிரதேசசபையினால் அராலிப்பகுதியில் உள்ள இடிவிழுந்த குண்டு எனப்படும் சிறு நீர்த்தேக்கம் கால்நடைகளின் நீர்ப்பாவனைக்காக அண்மையில் ஆழமாக்கப்பட்டது எனவும் தெரிவித்தார். (ஸ்ரீ-3)

## பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு ஒட்சிசன் நிரப்பு இயந்திரம் கையளிப்பு

(கரவெட்டி)



வடமாகாண சுகாதார அமைச்சினால் ஒட்சிசன் நிரப்பும் இயந்திரமொன்று பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரனின் முயற்சியின் பயனாக இவ் வைத்தியசாலைக்கு ஒட்சிசன் நிரப்பும் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி யாழ். போதனா வைத்தியசாலைக்கு ஒரு ஒட்சிசன் நிரப்பும் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது. இதனால் இதுவரை காலமும் நிலவி வந்த ஒட்சிசனின் தேவையை ஓரளவு பூர்த்தி செய்ய முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஸ்ரீ-12-24)

## சந்நிதி தேர்த்திருவிழாவில் நகைகளை களவாடியவருக்கு விளக்கமறியல்

(கரவெட்டி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய தேர்த்திருவிழாவில் நகைகளைக் களவாடிய சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

செல்வச்சந்நிதி தேர்த்திருவிழாவில் மக்களின் நகைகளைத் திருடிய குற்றச்சாட்டில் புத்தளத்தைச் சேர்ந்த நபரொருவர் வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

குறித்த நபரை நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் மன்றில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிபதி குறித்த நபரை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ஸ்ரீ-12-24)

## விவசாய அபிவிருத்திக் கடன் தொடர்பான கருத்தரங்கு

(நல்லூர்)

மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் முகமாக விவசாய அபிவிருத்திக் கடன் சம்பந்தமான .விளக்கவுரை கருத்தரங்கு ஒன்றை மக்கள் வங்கியின் சுன்னாகம் மற்றும் கோப்பாய் கிளைகள் இணைந்து நடத்தவுள்ளன.

இதற்கமைய நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு அளவெட்டி மக்கள் வங்கி கிளையிலும் பிற்பகல் 2 மணிக்கு நீர்வேலி வாழைக்குலைச் சங்க மண்டபத்திலும் பிற்பகல் 4 மணிக்கு அச்செழு போயிட்டி மண்டபத்திலும் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கினை மக்கள் வங்கியின் உயர் அதிகாரிகள், கடன் உத்தியோகத்தர்கள் இணைந்து நடத்தவுள்ளனர்.

இதில் விவசாயிகளுக்கான கால போகக் கடன், வீட்டுத் தோட்டக்கடன், வறுமை ஒழிப்பு கடன் மற்றும் ஏனைய அபிவிருத்திக் கடன் திட்டங்கள் சம்பந்தமாகவும் பயனாளிகள் தெரிவும் நடைபெறவுள்ளதால் அனைவரையும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு சுன்னாகம் மற்றும் கோப்பாய் மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர்கள் கேட்டுள்ளனர். (ஸ்ரீ-12-134)

## கொழும்பு முதியோர்தின நிகழ்வில் யாழ். முதியவர்கள்

(நல்லூர்)

யாழ். மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்தும் ஒவ்வொரு முதியோர்கள் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி கொழும்பு நாடாளுமன்ற விளையாட்டரங்கில் நடைபெறும் முதியோர் தின நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்தும் ஒவ்வொரு முதியோரை அனுப்பி வைக்குமாறு முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் பணிப்பாளர் திருமதி ஜெ.கிருஸ்ணமூர்த்தி அறிவித்துள்ளார்.

அத்துடன் நிகழ்வில் பங்கு பற்றும் ஒவ்வொரு முதியோருக்கும் போக்குவரத்து செலவாக 2 ஆயிரம் ரூபா வழங்கப்படுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-12-134)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)



அராலி கிழக்கு மெஞ்ஞான வைரவ கோவில் அலங்கார உற்சவ திருவிழா கடந்த 6 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் 108 சங்கு வைத்து சங்காபிஷேகம் நடைபெற்று மாலை நேர தீபாராதனை பூசையுடன் பூர்த்தியாகும்.

இத்திருவிழாவின் போது யாழ். போதனா வைத்தியசாலை முன்னாள் பிரதம மேற்பார்வையாளர் கு.கைலாசம்பிள்ளையின் சொற்பொழிவு நடைபெறும்.

எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சங்காபிஷேக பூர்த்தித் திருவிழாவன்று கு.கைலாசபிள்ளை பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படவுள்ளார் என ஆலய தர்மகர்த்தா சபைச் செயலாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)




வடமாகாண தொழிற்றுறை திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. இதில் வடமாகாண தொழிற்றுறை திணைக்கள பணிப்பாளர் கே.சிவகரன் உரையாற்றுவதையும் வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி விஜயலக்சுமி ரமேஸ் உள்ளிட்ட அதிகாரிகள் அமர்ந்திருப்பதையும் கலந்து கொண்ட திணைக்கள உத்தியோகத்தர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)


பூநகரிப் பிரதேச கலாசாரப் பேரவையின் கலாசார விழாவும் 'பூந்துணர்' சஞ்சிகை வெளியீட்டு விழாவும் முழங்காவில் மகாவித்தியாலய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுதையும், பூந்துணர் சஞ்சிகையின் சிறப்புப் பிரதியை வடமாகாண பிரதிப் பிரதம செயலாளர் இராஜநாயகம், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனுக்கு வழங்குவதையும், கலை நிகழ்வுகள் இடம்பெறுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பூநகரி செய்தியாளர்)

# முன்னேஸ்வரம் பத்ரகாளியம்மன் கோவிலில் மிருகபலியைத் தடுத்தார் மேர்வின் சில்வா

முன்னேஸ்வரம் பத்ரகாளியம்மன் கோவிலில் நேற்று இடம்பெறவிருந்த மிருக பலிப் பூஜையை அமைச்சர் மேர்வின் சில்வா தடுத்து நிறுத்தியுள்ளார்.

முன்னேஸ்வரம் பத்ரகாளியம்மன் கோவிலில் வருடாந்த உற்சவத்தின்போது நூற்றுக் கணக்கான ஆடுகள். கோழிகள் பலிகொடுக்கப் படுவது வழக்கமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் நேற்று நடைபெறவிருந்த மிருகபலி பூஜை நடைபெறவிருந்த மிருகபலி பூசை நடைபெறவிருந்த நிலையில் அமைச்சர் மேர்வின் சில்வா சுமார் 50 பேர் கொண்ட குழுவொன்றுடன் அவ்விடத்திற்கு வந்து மிருகங்கள் பலிகொடுக்கப்படுவதை தடுத்தார்.

அமைச்சருடன் வந்தவர்கள் பலிகொடுக்கப்படவிருந்த மிருகங்களை வாகனங்களில் ஏற்றிச் சென்று சிலாபம் பொலிஸ் நிலையத்தில் அவற்றை ஒப்படைத்தனர். ஆலயத்தில் நடைபெறும் பூஜை நடவடிக்கைகளுக்கு தாம் எந்த இடையூறும் செய்யவில்லை எனவும் மிருகங்களை பலிகொடுப்பதற்கு மாத்திரமே தான் எதிர்ப்பு தெரிவிப்பதாகவும் அமைச்சர் மேர்வின் சில்வா கூறினார்.

இது மத ரீதியான பிரச்சினை அல்ல. மிருகங்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கையே இது. களனியிலும் இத்தகைய நடவடிக்கைகளை நான் தடுத்து நிறுத்தினேன். இப்போது நாட்டின் ஏனைய பகுதிகளில் நடைபெறும் மிருக பலிகளையும் தடுப்பதற்கு தீர்மானித்துள்ளேன் என அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்தார். முன்னேஸ்வரம் பத்திர காளி அம்மன் கோவிலில் நடைபெறவுள்ள மிருகபலி வேள்வியை தடுக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# காலி முகத்திடலில் உணவுப் பொருட்கள் விற்பனையை மேம்படுத்த நடவடிக்கை

காலி முகத்திடலில் உணவுப் பொருட்கள், விற்பனையை மேம்படுத்துவதற்கு கொழும்பு மாநகரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

காலி முகத்திடலில் உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் அனைத்து வியாபாரிகளுக்கும் விசேட பயிற்சிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக மாநகர சபையின் பிரதம சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் பிரதீப் காரியவசம் குறிப்பிட்டார்.

தற்போது காலி முகத்திடலில் சுமார் 100 வியாபாரிகள் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

காலி முகத்திடலில் வர்த்தகத்தில் ஈடுபடுவர்களுக்கு கடந்தவாரம் பொது சுகாதார அதிகாரிகளால் விசேட பயிற்சி செயலமர்வொன்று நடத்தப்பட்டதாக அவர் கூறினார்.

அத்துடன் வர்த்தகர்களிடம் உணவுப் பாதுகாப்பு தொடர்பில் போதியளவு தெளிவு காணப்படுகிறதா என்பதைக் கண்டறிய விசேட பரீட்சைகளையும் நடத்தவுள்ளதாக பிரதான சுகாதார வைத்திய அதிகாரி குறிப்பிட்டார்.

குறித்த பரீட்சையில் சித்தியடைபவர்களுக்கு விசேட சான்றிதழும் வியாபார அனுமதி பத்திரமும் வழங்கப்பட உள்ளதாகவும் பிரதீப் காரியவசம் மேலும் சுட்டிக்காட்டினார். (ஸ்ரீ-2)

# கே.பியை நல்லவராகவும் தியவதன நிலமேயை கொடியவராகவும் காட்டுவதே அரசின் புதிய சிந்தனை

## ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

பௌத்தர்களின் புனித ஸ்தலமான ஸ்ரீ தலதாமாளிகையை தகர்க்க முயற்சித்த கே.பி நல்லவராகவும் தலதாமாளிகையை 20 வருடங்களாகப் பாதுகாத்து வந்த தியவதன நிலமே ஐக்கிய தேசியக்கட்சியில் போட்டியிடுவதால், அவரை கொடியவராகவும் காட்டுவதே அரசின் புதிய சிந்தனையாக மாறி இருப்பதாக எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கண்டி ஸ்ரீ புஸ்பதான மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கண்டி மாநகர சபைத் தேர்தலில் போட்டியிடும் ஐ.தே.க.வின் வேட்பாளர்களை ஆதரித்து இடம்பெற்ற கூட்டத்தில் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது,

குமரன் பத்மநாதனை நல்லவராகக் கூறும் அரசு கண்டி மாநகரசபைக்குப் போட்டியிடும் முன்னாள் தியவதன நிலமே நிரஞ்சன் விஜேரத்னாவை கொடியவராக்கி தோல்வியடையச் செய்ய முயற்சிக்கிறது. நிரஞ்சன் விஜேரத்னா தனது பதவி காலத்தில் 2500 இலட்ச ரூபாவைப் பாதுகாத்து தலதாமாளிகையின் கணக்கில் சேமித்திருந்தார்.

வெற்றியும் தோல்வியும் பொதுமக்கள் கையிலே உள்ளது. வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்குகளை அளிப்பதிலேயே வெற்றியும் தோல்வியும் தங்கியுள்ளது. எதிர்வரும் மாநகரசபை மற்றும் நகர சபைத் தேர்தல்களில் ஐ.தே.கட்சியை ஆதரிக்க மக்கள் முடிவு செய்து விட்டார்கள்.

ஆனால் அதை வேறு வகையில் முறியடிக்க அரசு முயற்சிக்கிறது. விருப்பு வாக்குகளுக்குப் போட்டியிட வேண்டாம். கட்சியை வெற்றிபெறச் செய்தால் விருப்பு வாக்குளை நாம் பகிர்ந்து கொள்ளமுடியும் என்றார். (ஸ்ரீ-2)


31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 1938.01.14

மறைவு 2011.08.15

அமரர்

வல்லிபுரம் கந்தசாமி

குருநாதர் ஹாட்வெயர் உரிமையாளர்



*மறைந்ததோ முப்பத்தொறாம் நாள்*
*மறக்கவும் முடியுமா?*
*குறைவிலாது எம்மைக் காத்த*
*குலவிளக்கே! ஏன் எம்மை விட்டு*
*மறைந்தீர்?*
*உம் முகத்தை இனி எப்போ காண்போம்?*
*உம் ஆத்மா சாந்தி அடைய*
*இறைவனை பிரார்த்திக்கின்றோம்.*
*ஓம் சாந்தி ! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

கடந்த 15.08.2011 அன்று இறைபதம் அடைந்த எங்கள் அன்புத்தந்தையின் மரணச் சடங்கின் போது எமக்கு உதவி செய்து, உறுதுணையும் நின்று மற்றும் பல வழிகளிலும் எமக்கு உதவி செய்து கண்ணீர் அஞ்சலி, தொலைபேசி, தந்திகள் மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் எம்முடன் துயர் பகிர்ந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

உம் பிரிவால் துயருற்றிரும்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

குருநாதர் ஹாட்வெயர்,
VVT றோட், உடுப்பிட்டி.
T.P.: 021 226 4607, 077 3655590

(6136)


# தபால் உத்தியோகத்தர் பதவி வெற்றிடத்தை நிரப்ப நடவடிக்கை

தபால் உத்தியோகத்தர் பதவி வெற்றிடத்தை நிரப்ப தபால் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய, இப்பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கான விண்ணப்பங்களை தகைமை உடைய 18 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்ட இலங்கை பிரஜைகளிடமிருந்து தபால் தலைமையகம் கோரியுள்ளது.

நிரந்தரமானதும் ஓய்வூதியமுடைய தபால் சேவை உத்தியோகத்தர் வகுப்புக்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்போர் க.பொ.த. சாதாரண தரத்தில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆறுபாடங்களில் சித்தியடைந்திருப்பதோடு அவற்றில் தாய்மொழி மற்றும் கணிதம் அடங்கலாக 4 பாடங்களில் திறமைச் சித்தியை பெற்றிருக்க வேண்டும். அத்துடன் க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்திருப்பதோடு கணனி கற்றைநெறியையும் கற்றிருக்க வேண்டியது மேலதிக தகைமையாக கருதப்படும்.

திறந்த போட்டிப் பரீட்சையானது நுண்ணறிவு மற்றும் மொழித்திறமையும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களைக் கொண்டிருக்கும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவத்தினை தபால் தலைமையகத்தினால் கோரப்பட்டுள்ள நிபந்தனைக்கு அமைய தயாரித்து பூரணப்படுத்தி பரீட்சைக் கட்டணமான ஆயிரம் ரூபாவுக்கான காசுக்கட்டளையையும் இணைத்து இம் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னதாக தபால் மா அதிபர் தபால் தலைமையகம், இலக்கம் 310, டி. ஆர். விஜேய வர்தன மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-4)

# வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு காணிகளை வழங்கும்போது வெளிப்படைத்தன்மை பேணப்படுவதில்லை

## ஜே.வி.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு காணிகளை வழங்கும் நடவடிக்கைகளின்போது வெளிப்படைத்தன்மை பேணப்படுவதில்லை என ஜே.வி.பி.குற்றம் சுமத்தியுள்ளது.

ஏற்றுக்கொள்ளப்பட்ட விலைமனுக்கோரல் நடைமுறைகளுக்கு புறம்பான வகையில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் காணிகள் இவ்வாறு வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு விற்பனை செய்யப்படுவதாக ஜே.வி.பி.பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அமைச்சர்களின் தனிப்பட்ட காணிகள் இவ்வாறு விற்பனை செய்யப்பட்டால் அது குறித்து எவரும் கேள்வி எழுப்பமாட்டார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும், அரசாங்கத்தினால் விற்பனை செய்யப்படும் காணிகள் இந்த நாட்டின் எதிர்காலத் தலைமுறைக்குச் சொந்தமானவை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, தங்களுக்கு விருப்பமானவர்களுக்கு இந்தக் காணிகளை விற்பனை செய்ய எவருக்கும் உரிமை கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, கற்பிட்டி குச்சவெளி போன்ற பிரதேசங்களில் உள்ள காணிகள் மட்டுமன்றி கொழும்பில் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த காணிகளும் இவ்வாறு விற்பனை செய்யப்பட்டு வருவதாக ஐக்கிய தேசியக்கட்சியின் தேசிய அமைப்பாளர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்தக் கொடுக்கல்-வாங்கல்களில் வெளிப்படைத்தன்மை குறித்து பாரிய சிக்கல் நிலைமை நீடித்து வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். இந்தச் சம்பவங்கள் குறித்து பாராளுமன்றில் கேள்வி எழுப்பப்பட்டதாகவும் காணிகள் சுய விருப்பின் அடிப்படையில் விற்பனை செய்யப்பட்டதாக அமைச்சர்கள் ஒப்புக்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பகிரங்கமான முறையில் நாட்டில் ஊழல் மோசடி இடம்பெற்று வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதேவேளை, சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் நோக்கில் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு காணி விநியோகம் செய்யும் நடவடிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறைகளுக்கு புறம்பாகவே விநியோகம் செய்யப்பட்டது என பிரதி பொருளாதார அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன கடந்த வாரம் பாராளுமன்றில் ஒப்புக் கொண்டுள்ளார்.

அரசாங்கத்தின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ற பொருளாதாரப் பின்னணியைக் கொண்டிராதவர்கள் விலை மனுக்கோருவதாகவும் இதனால் அரசாங்கமே முதலீட்டாளர்களை தெரிவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# விவசாயக் கடனுக்கான விண்ணப்பம் விநியோகம்

(நல்லூர்)

விவசாயக் கடன் பெறுவோருக்கான விண்ணப்பப்படிவங்கள் இலங்கை வங்கி கோப்பாய் கிளையில் வழங்கப்பட்டு வருகின்றது.

இவ் விண்ணப்பப்படிவம் பெற விரும்புவோர் கோப்பாய் இலங்கை வங்கியில் பெற்றுக் கொள்ளுமாறு முகாமையாளர் ம.தவபாலன் தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-12-134)

# இலங்கை கடற்படையினருக்கு அவுஸ்திரேலியா பாராட்டு

(கொழும்பு)

சட்டவிரோத குடியேற்ற முயற்சிகளைத் தடுக்க இலங்கை கையாளும் நடவடிக்கைகளுக்கு அவுஸ்திரேலியா பாராட்டுத் தெரிவித்துள்ளது.

இலங்கையர்கள் 44 பேர் சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவுக்குச் செல்ல முயன்ற போது அந்த முயற்சி இலங்கை கடற்படையினரால் முறியடிக்கப்பட்டது.

இது குறித்து அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் கெத்தி குளுக்மன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் இலங்கையின்நடவடிக்கைகளை வரவேற்பதுடன் கடற்படை வீரர்களுக்கு பாராட்டுகளும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

இலங்கை பொலிஸ் மற்றும் கடற்படையினர் இணைந்து சட்டவிரோத ஆட்கடத்தல் முறியடிக்கப்பட்ட நிகழ்வை அவுஸ்திரேலியா வரவேற்கிறது. கடந்த 2009 ஆம் ஆண்டு நவம்பர் முதல் இதுவரை எந்தவொரு படகும் சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவை வந்தடையவில்லை.

ஆட்கடத்தல்காரர்கள் பணம் சம்பாதிப்பதற்காக தம்மாலான பொய்களைக் கூறி மக்களை ஏமாற்றுகிறார்கள். மக்களும் இதனை நம்பி தமது பணத்தை இழந்து விடுகிறார்கள். இவ் ஆட்கடத்தல்காரர்கள் இலாபத்தை மாத்திரமே குறியாகக் கொண்டு செயற்படுகிறார்கள். இதுபோன்ற பல சந்தர்ப்பங்களில் படகுகளை நம்பி மக்கள் தமது உயிர்களையே இழந்துள்ளனர்.

மக்கள் தமது பணத்தையும் வாழ்வையும் ஆட்கடத்தல்காரர்களின் கைகளில் ஒப்படைக்கிறார்கள் என்றும் உயர்ஸ்தானிகர் கூறியுள்ளார்.

ஆட்கடத்தலினால் ஏற்படக்கூடிய பாரதூரமான விளைவுகளை விளக்கும் வகையில் அவுஸ்திரேலியாவும் இலங்கையும் இணைந்து பல்வேறு விழிப்புணர்வுகைள முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# பறவைக்காய்ச்சலை தடுக்க விசேட செயற்றிட்டம் ஆரம்பம்

(கொழும்பு)

பறவைக்காய்ச்சல் வைரஸ் நாட்டிற்குள் பரவுவதை தடுப்பதற்காக விசேட செயற்றிட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை கோழிப்பண்ணைகள் சுற்றுலாப்பறவைகளை கண்காணிப்பதற்கு மாவட்டமட்டத்தில் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தற்போது மீண்டும் ஆசிய வலய நாடுகள் சிலவற்றில் பறவைக்காய்ச்சல் பரவியுள்ளமை தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளன.

பரிசோதனை மேற்கொள்ளப்படாத கால்நடை உற்பத்தி மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் நாட்டிற்குள் கொண்டு வருவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடும் சோதனைகளின் பின்னரே பொருட்கள் அனுமதிக்கப்படும். அத்துடன் சுற்றுலாப்பறவைகள் பயணிக்கும் மார்க்கங்கள் மற்றும் அவற்றின் தங்குமிடங்கள் தொடர்பில் உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(ஸ்ரீ-2)

# முல்லைத்தீவிலுள்ள குளங்களின் நீர்ப்பாசன கட்டுமான வேலைகள் ஆரம்பம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மடவாளசிங்கம்,விசுவமடு, உடையார்கட்டு ஆகிய குளங்களின் நீர்ப்பாசனகட்டு மான வேலைகள் நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளில் வடமாகாண நீர்ப்பாசனத் திணைக்களம் ஈடுபட்டுள்ளது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான அவசரகால கருத்திட்டத்தின் கீழ் இந்த வேலைகள் நடைபெறவுள்ளன.

இந்தத் திட்டத்திற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி, கடன் வழங்க முன்வந்துள்ளது என்று திட்டப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-12)

# அரசாங்கத்திடம் எதிர்கால இலக்குகள் எதுவும் இல்லை

## ரவிகருணாநாயக்க எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்திடம் அதிகாரம் உள்ள போதிலும் எவ்வித எதிர்கால இலக்குகள் எதுவும் இல்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

கிருலப்பனை பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தம்மிடம் திட்டமொன்று உள்ள போதிலும் அதனை செயற்படுத்துவதற்கு அதிகாரம் மாத்திரமே இல்லையென அவர் குறிப்பிட்டார்.


ஆனாலும், அரசாங்கத்திடம் அதிகாரம் உள்ள போதிலும் எதிர்கால இலக்குகள் எதுவும் இல்லையென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)


# புலோப்பளை கிழக்கு மக்களுக்கு வாழ்வாதார உதவிகள்


(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட புலோப்பளை கிழக்கு மக்களுக்கு புலோப்பளை கிழக்கு மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தினூடாக வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 10.00 மணிக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக மண்டபத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் ரி.முகுந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முகமாக ஒரு குடும்பத்திற்கு 20 ஆயிரம் ரூபாவீதம் 20 குடும்பத்திற்கு இவ் உதவிகள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3)







அல்வாய் வடக்கு இளங்கோ சனசமூக நிலையத்தின் 79 ஆம் ஆண்டு நிறைவையொட்டிய முத்தமிழ் விழா அல்வாய் சிறிலங்கா வித்தியாலயத்தின் ஜெயபாலன் அரங்கில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கலாமணி மங்கல விளக்கேற்றுவதையும் பருத்தித்துறை பிரதேச செயலாளர் இ.வரதீஸ்வரன் உரையாற்றுவதையும் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம்.

# குற்ற விசாரணைப்பிரிவின் உயரதிகாரி ஒருவர் இலஞ்சம் கோரியதாக பெண்ணொருவர் முறைப்பாடு

(கொழும்பு)

குற்ற விசாரணைப் பிரிவின் உயரதிகாரி அநுர டி சில்வா இலஞ்சம் கோரியதாக பெண் ஒருவர் நீதிமன்றில் முறைப்பாடு செய்துள்ளார்.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் வெள்ளைக் கொடி வழக்கு தொடர்பான விசாரணைகளை பொலிஸ் பரிசோதகர் அநுர டி சில்வா மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

காணிப்பிணக்கு ஒன்றைத் தீர்ப்பதாகத் தெரிவித்து, குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒரு பகுதி காணியை இலஞ்சமாக கோரியதாக குறித்த பெண் முறைப்பாடு செய்துள்ளார்.

பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யாது நேரடியாக அவர் நீதிமன்றில் இந்த முறைப்பாட்டை செய்துள்ளார்.

சட்டத்தரணி ஒருவரின் ஊடாக சத்தியக் கடதாசி ஒன்றை சமர்ப்பித்து இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.


அதிகாரத்தைப் பிரயோகம் செய்து தம் மீது போலிக் குற்றச்சாட்டு சுமத்துவதாக குறித்த உயரதிகாரி தம்மை அச்சுறுத்தியதாக முறைப்பாடு செய்துள்ளார்.

காணிப் பிணக்கு தொடர்பான வழக்கிலிருந்து தம்மை விடுவிப்பதாகவும் அதற்கு பிரதி உபகாரமாக 15 பேர்ச்சஸ் காணியில் ஒரு பகுதியை தமக்கு வழங்குமாறும் பொலிஸ் பரிசோதகர் அநுர டி சில்வா தம்மிடம் கோரியதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மோசடியான முறையில் தம்மிடம் வாக்குமூலமொன்றை குறித்த அதிகாரி பெற்றுக்கொண்டதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# பிரபாகரனைவிட அதிக அழிவை ஏற்படுத்தியுள்ளது அரசாங்கம்

## பொன்சேகா சாடல்



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை விடவும் இந்த அரசாங்கமே நாட்டுக்கு அதிகளவில் அழிவை ஏற்படுத்தியுள்ளதாக முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா குற்றம் சுமத்தியுள்ளார்.

ஊழல் அரசியல்வாதிகள் கடந்த ஜென்மங்களிலிருந்தே ஊழல் மோசடிகளில் ஈடுபட்டுள்ளனர்.

நாட்டின் சிரேஷ்ட பிரஜைகளிடமிருந்து பழிவாங்கும் நோக்கில் அவர்கள் சிறைகளில் அடைக்கப்படுகின்றனர்.

14 அரச நிறுவனங்களை அழிப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. நாட்டின் விலைமதிப்பற்ற சொத்துக்களில் ஒன்றான சிங்கராஜா வனப் பகுதியை கூறுபோட முயற்சிக்கப்படுகின்றது.

இவ்வாறான அழிவுகளை பிரபாகரன் கூட மேற்கொள்ளவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

30 மாத கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டமை தொடர்பில் சரத் பொன்சேகாவினால் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனு தொடர்பான விசாரணைகளில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளதாக சிங்கள இணைய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# வடக்கில் இராணுவ முகாம்களை அமைப்பதற்காக சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு நட்டஈடு

## அரசாங்கம் அறிவிப்பு

வடக்கு-கிழக்கில் இராணுவ முகாம்களை அமைப்பதற்காக சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு நட்டஈடு வழங்கப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இராணுவ முகாம்களை அமைப்பதற்காக வடக்கு- கிழக்கு வாழ் தமிழ்மக்களிடம் காணிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்காக நட்டஈடு வழங்கப்படும் என காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் தனி ஈழமொன்றை உருவாக்கிக் கொள்ள போராட்டம் நடத்திய காலத்தில் அவ் அமைப்புக்கு தமக்குச் சொந்தக் காணிகளை வழங்கி தமிழ் மக்கள் உதவியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 1985 மற்றும் 1987ஆம் ஆண்டு காரைநகர் கடற்படை முகாம் விஸ்தரிப்பு பணிகளின்போது 78 ஏக்கர் தனியார் காணி சுவீகரிக்கப்பட்டது.

கடந்த 25 ஆண்டுகளாக குறித்த காணி உரிமையாளர்களுக்கு நட்டஈடு வழங்கப்படுவதில்லை.

அண்மையில் குறித்த காணி உரிமையாளர்களுக்கு நட்டஈடு வழங்கப்பட்டதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட பயணிகளில் புலி உறுப்பினர்களும் உள்ளடக்கம்

## சிங்கள ஊடகம் தெரிவிப்பு

சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவிற்கு செல்ல முற்பட்ட படகுப் பயணிகளில் முன்னாள் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் சிலரும் உள்ளடங்குவதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ரோலர் படகு ஒன்றின்மூலம் சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட 44பேர்அடங்கிய கும்பல் ஒன்றை கல்முனை கடற்பரப்பில் வைத்து கடற்படையினர் கைது செய்திருந்தனர்.

கைது செய்யப்பட்ட நபர்களில் முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் சிலர் இருப்பதாக விசாரணைகளின்மூலம் தெரியவந்துள்ளது.

படகு பயணிகளிடம் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தி வருவதாகவும் படகுப் பயணிகள் கொழும்பிற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட நபர்களிடம் புலனாய்வுப் பிரிவினர் தொடர்ந்து விசாரணை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வர்த்தகர்களைக் கண்டுபிடிக்கும் நோக்கில் விசாரணை நடத்தப்பட்டு வருவதாக புலனாய்வுப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

# சவேந்திர சில்வாவை கண்காணிக்கும் விசேட புலனாய்வு அதிகாரிகள்

## சிங்கள இணையம் தகவல்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான பிரதி வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவின் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சை சேர்ந்த விசேட புலனாய்வு அதிகாரிகள் அமெரிக்கா சென்றுள்ளதாக சிங்கள இணைய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் மூன்று புலனாய்வு அதிகாரிகள் இவ்வாறு அமெரிக்கா சென்றுள்ளனர்.

அதில் இருவர் ஜனாதிபதியின் நெருங்கிய குடும்ப உறுப்பினர்களின் பாதுகாப்பு தொடர்பான கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வர்.

மற்றைய அதிகாரி சவேந்திர சில்வாவின் நடவடிக்கை குறித்து கண்காணித்து அறிக்கை சமர்ப்பிப்பார் என அந்த இணைய ஊடகத்தில் குறிப்பிட்டுள்ளது.

போர் இடம்பெற்ற காலத்தில் புலிகளிடமிருந்து மீட்கப்பட்ட பெருந்தொகையான தங்க ஆபரணங்களை சவேந்திரசில்வா பதுக்கி வைத்து தற்போது அவற்றை பணமாக மாற்றிக் கொண்டுள்ளார் எனவும் இதன் காரணமாக அரசாங்கத்தின் உயர் மட்டத்தினருக்கும் சவேந்திரவிற்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் பாரியளவில் முதலீடுகளை மேற்கொள்ளவதற்கு சவேந்திரசில்வா முயற்சி செய்து வருவதாகவும் அந்த இணைய ஊடகத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# உலக பொருளாதார நெருக்கடியின் போது வர்த்தக வங்கிகளை அரசு பாதுகாத்தது

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

உலக பொருளாதார நெருக்கடியின் மத்தியில் வர்த்தக வங்கிகளை பாதுகாக்க அரசாங்கம் முன்னிலையில் உள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று இடம்பெற்ற கூட்டுறவு சங்கங்களில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனை குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மற்றும் பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டுள்ளன. அதேவேளை, இதில் கலந்து கொண்ட அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க தனியார் பல்கலைக்கழகங்களின் ஊடாக சுதந்திரமான கல்வி விஸ்தரிக்கப்படும் என குறிப்பிட்டார். (ஸ்ரீ-4)

# சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்கு சட்டம் கடுமையாக்கப்படுவது அவசியம்

## சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தலைவர் தெரிவிப்பு

சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுவோருக்கு அதிகபட்ச தண்டனையைப் பெற்றுக் கொடுப்பதற்கான சட்ட வரைவுகளை அரசிடம் முன்வைப்பதற்கான திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகச் செயற்பாடுகள் பல்வேறு வடிவங்களில் இடம்பெற்று வருகின்றன. இந் நடவடிக்கைகளை இல்லாமல் செய்வதற்கும் சிறுவர் துஷ்பிரயோக நடவடிக்கைகளைக் குறைப்பதற்கும் சட்டம் கடுமையாக்கப்படுவது அவசியமாகும். இவற்றைக் கருத்திற் கொண்டே இந்த சட்ட வரைபு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வருடம் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான 4 ஆயிரம் முறைப்பாடுகள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பாடசாலைகளில் பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்களை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை நிறுவியுள்ளது. இக் குழுவானது அதிக எண்ணிக்கையான மாணவர் உறுப்பினர்களையும் குறைந்த எண்ணிக்கையான ஆசிரியர்களையும் பெற்றோரையும் கொண்டதாக அமைந்துள்ளது. (ஸ்ரீ-4)

# இலங்கையின் பாற்பண்ணைகளை மேம்படுத்த அவுஸ்திரேலியா, நெதர்லாந்து உதவி

(கொழும்பு)

இலங்கையின் பாற்பண்ணை உற்பத்திகளை மேம்படுத்துவதற்கு அவுஸ்திரேலியாவும் நெதர்லாந்தும் முன்வந்துள்ளன.

இதன்போது 12 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலிடப்படவுள்ளதாக அந்த நாடுகளின் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சுக்கள் நேற்று முன்தினம் அறிக்கை வெளியிட்டுள்ளன.

இரண்டு சட்ட செயற்றிட்டங்களுக்கு அமைய அவுஸ்திரேலியாவில் இருந்து 4 ஆயிரத்து 500 கறவை பசுக்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளன.

இதனடிப்படையில் இலங்கையில் உள்ள பாற்பண்ணைகளின் உற்பத்தி நடவடிக்கைகளை அதிகரிக்க முடியும் என நம்பப்படுகிறது.

இதன்படி பொபத்தலாவ பாற்பண்ணைக்காக 2 ஆயிரம் கறவை பசுக்கள் கையளிக்கப்படவுள்ள நிலையில், ஆயிரத்து 500 பசுக்கள் நிக்கவரட்டிய மற்றும் சிறிக்கபாத்த பாற்பண்ணைக்களுக்காக வழங்கப்படவுள்ளன.

இலங்கையின் நிதியமைச்சின் செயலாளருக்கும் அவுஸ்திரேலிய மற்றும் நெதர்லாந்து நாடுகளின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான ஒப்பந்த கைச்சாத்தின் அடிப்படையிலேயே இந்த மேம்பாட்டு நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

இதேவேளை, இரண்டாம் கட்ட மேம்பாட்டு பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-4)

# தமிழர் விடுதலைக்கூட்டணியின் வருடாந்த பேராளர் மாநாடு

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக்கூட்டணியின் வருடாந்த பேராளர் மாநாடு எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நல்லூர் கந்தன் வடக்கு வீதியில் அமைந்துள்ள நடராஜா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் நடைபெறுமென தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி அறிவித்துள்ளார்.

இம்மாநாட்டு நிகழ்ச்சிகளில் ஒன்றாக அமரர் அமிர்தலிங்கத்தின் வரலாற்றுப் பதிவான **வரலாற்றின் மனிதன்** புத்தகம் வெளியிடப்படுவதோடு மறைந்த தலைவர்களின் சிறு வரலாற்றுக் குறிப்புகளுடன் அவர்களின் ஞாபகார்த்தமாக மலர் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது.

அத்துடன் தமிழரசுக்கட்சி தமிழ்க் காங்கிரஸ் கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய மூன்று கட்சிகள் இணைந்தே தமிழர் விடுதலைக்கூட்டணி உதயமானது. எனவே ஒவ்வொரு தேர்தல் தொகுதிகளிலும் இருந்தும் தமிழரசுக் கட்சி மற்றும் தமிழ் காங்கிரஸ் கட்சிகளின் மூத்த உறுப்பினர் ஒருவர் வீதம் தெரிவு செய்யப்பட்டு மாநாட்டு மேடையில் கௌரவிக்கப்பட இருக்கின்றார்கள்.

அத்துடன் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் இரு முக்கிய மூத்த பிரமுகர்களும் இம்மாநாட்டில் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இம்மாநாட்டு நிகழ்ச்சிகளில் பல்வேறு கட்சிகளின் தலைவர்களும் முக்கிய பிரமுகர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

காலை நிகழ்ச்சிகள் யாவும் தந்தை செல்வா அரங்கிலும் மாலை நிகழ்ச்சிகள் அனைத்தும் அமரர் அமிர்தலிங்கம் அரங்கிலும் நடைபெறும்.

எனவே இம்மாநாட்டை சிறந்த முறையில் நடத்தி முடிக்க ஆக்கபூர்வமான ஆலோசனைகளும் கருத்துகளும் வரவேற்கப்படுவதாக தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் அறித்துள்ளார்.

அத்துடன் கட்சியின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இல-57/48, ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-2-4)

# விவசாய காணிகள் சிரமதானம் மூலம் துப்புரவாக்கப்பட்டன



(பூநகரி)

பூநகரி கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள 19 கமக்கார அமைப்புகளும் மானிய உரத்தைப் பெறுவதற்காக தமது எல்லைக்குட்பட்ட விவசாய அபிவிருத்தி வேலைகளை சிரமதான முறையில் செய்யவேண்டுமென கமநலச்சேவை அலுவலரால் பணிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மூன்று ஏக்கருக்கு மேல் நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயி 3 நாட்கள் சிரமதானப் பணி செய்திருக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய மட்டுவில் நாடு கமக்கார அமைப்பில் சிரமதானம் இடம்பெறுவதைப் படத்தில் காணலாம். (ஸ்ரீ-84)

# சிறுவர் இல்லத்தை சேர்ந்த சிறுவன் உயிரிழந்தமை தொடர்பில் விசாரணை

நிட்டம்புவ பகுதியிலுள்ள சிறுவர் இல்லத்தில் ஏற்பட்ட தீயினால் சிறுவன் ஒருவன் உயிரிழந்த சம்பவத்துடன் தொடர்புடைய குறித்த சிறுவர் இல்லம் பதிவு செய்யப்படாத ஒன்று என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேல் மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் சரத் அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது உரிய தரத்தை கொண்டிராத சிறுவர் இல்லம் என முதற்கட்ட விசாரணைகளின் ஊடாக அறியக்கிடைத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

அதன் பிரகாரம் இங்கு தங்கவைக்கப்பட்டுள்ள 14 சிறுவர்கள் குறித்து கவனம் செலுத்தப்படவுள்ளது.

இதேவேளை இந்த மரணம் தொடர்பில் சிறுவர் நிலையத்திலுள்ள மூன்று சிறுவர்கள் உள்ளிட்ட ஐவரிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தீயினால் எரிந்து உயிரிழந்த சிறுவனின் சடலம் தற்போது வதுபிடிவல வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சடலம் தொடர்பான நீதிவான் விசாரணைகள் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

குறித்த சிறுவர் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள ஏனைய சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பில் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை நடவடிக்கை எடுக்கவுள்ளதாக பொலிஸார் கூறினர்.

தமது சகோதரனுடன் விளையாடிக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் ஏற்பட்ட தீயினால் ஆறு வயதான ரமேஷ் டில்ஷான் என்ற சிறுவன் துரதிர்ஷ்டவசமாக உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# நீதிமன்றத்தால் அபராதம்

(கிளிநொச்சி)

ஸ்கந்தபுரத்தை சேர்ந்த நபரொருவர் 14 போத்தல்கள் கோடாவும் அதன் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் உபகரணமும் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெ. சிவகுமார் குறித்த நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு 60 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் 7 மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

* * * * * *

(கிளிநொச்சி)

தர்மபுரத்தைச் சேர்ந்த நபரொருவர் 13 போத்தல்கள் கோடாவை தன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றையதினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெ. சிவகுமார் குறித்த நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 40 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் 5மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-3)

# இலங்கை யாத்திரிகர்களுக்கு இடையூறு ஏற்படாவண்ணம் இந்தியா நடவடிக்கை

(கொழும்பு)

இந்தியாவில் உள்ள பௌத்த தலங்களுக்கு பயணம் மேற்கொள்ளும் இலங்கையர்களுக்கு எதிர்வரும் காலங்களில் எந்த இடையூறுகளும் ஏற்பட இடமளிக்க போவதில்லை என. இந்திய அரசாங்கத்தின் சார்பில் உறுதியளிப்பதாக இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே காந்த, மல்வத்து மற்றும் அஸ்கிரிய மாநாயக்க தேரர்களிடம் உறுதியளித்துள்ளார்.

இந்தியாவில் உள்ள பௌத்த தலங்களுக்கு செல்லும் யாத்திரிகர்களுக்கு வசதிகளை செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார். கண்டியில் மாநாயக்க தேரர்களை சந்தித்து ஆசிபெற்ற போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# இலங்கை, இந்திய கடற்படையினர் திருமலையில் கூட்டு இராணுவப்பயிற்சி

(கொழும்பு)

இலங்கை மற்றும் இந்திய கடற்படையினரின் கூட்டு இராணுவ பயிற்சிகள் எதிர்வரும் 23 ஆம் திகதி திருகோணமலை கடற்பரப்பில் நடத்தப்படவுள்ளதாக இலங்கை கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் சோமதிலக்க திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை-இந்திய கடற்படையினருக்கு இடையில் காணப்படும் நட்புறவுகளை வெளிப்படுத்தும் வகையில் இந்த பயிற்சிகள் நடத்தப்படவுள்ளன.

இந்தியாவின் போர்க்கப்பல்கள், தாக்குதல் படகுகள் இந்த பயிற்சிகளில் கலந்து கொள்ளவுள்ளன.

அதேவேளை, இரண்டு நாடுகளின் கடற்படையினரின் பயிற்சிகள், பராமரிப்பு, தகவல் பரிமாற்றம் உள்ளிட்ட பல வேலைத் திட்டங்கள் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் எனவும் சோமதிலக்க திஸாநாயக்க மேலும் கூறியுள்ளார். (ஸ்ரீ-4)

# சைகை நெறி வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

கைதடி நவீல்ட் செவிப்புலன், விழிப்புலன் இழந்தோர் பாடசாலையில் சைகைநெறி வகுப்புக்கள் எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. எனவே மேற்படி பாடசாலையில் கல்வி கற்கும் அனைத்து மாணவர்களின் பெற்றோர்களும் கலந்து கொள்ளுமாறு பாடசாலை அதிபர் வி.எஸ்.மகேந்திரன் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# மேலுமொரு தொகுதி வாகன இலக்க தகடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் மோட்டார் போக்குவரத்துக் கிளையில் விண்ணப்பித்தவர்களுக்கான வாகன இலக்கத் தகடுகளின் (வடமாகாணம்) ஒரு தொகுதி கிடைக்கப்பெற்றுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

வாகன உரிமையாளர்கள் அலுவலக நேரத்தில் வாகனப் பதிவு சான்றிதழின் மூலப் பிரதி, அதன் புகைப்படப்பிரதி, தேசிய அடையாள அட்டை, பழைய இலக்கத்தகடுகள் (பழைய பதிவேடுகளுக்கு மாத்திரம்) ஆகிய ஆவணங்களுடன் நேரில் சமுகமளித்து இலக்கத் தகட்டினைப் பெற்றுக் கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

வாகன இலக்கத் தகடுகளின் விபரம் வருமாறு,

HS-8002,JW-5709,GK-8318, KD-8258,QB-4419,KC-5751,HY-4210,HW-1451,QM-9633,GR-8428, KC-0451,HN-7858,PA-0192,JF-3650,PZ-0215,QG-1860,GA-0218, QM-7232,KA-7769,GL-8065,HP-2988, LD-7531, HB-5729, HH-9676,HI-3764,GF-2433,HA-1347, HZ-1495,HJ-1206, KA-0891, JY-6838, PB-4131,LA-0933,GC-7387, LG-2313,JL-5632,GL-3992,HF-9399,GP-1234,JA-7588,GO-7076, QG-4484, KC-0366,JT-6029,HX-8169,KC-3255,HW-1752,QD-7987, JA-5433, GD-6800,KF-1786,KB-9007,GG-3790,QE-9598-JH-0937, HA-7305, GO-7198,JZ-0089,JI-9511,GG-8836,HM-5167,HR-9330, QE-6283, GU-4310, KT-1985,KC-0771,QH-9150,QK-7357,HO-0303, QK-7008, JJ-0301,HW-9406,JD-8851, GR-5204,HM-8516,KC-8349, KB-2156, JN-9298,QG-2672,QH-3508. (ஸ்ரீ-2)

# மற்றொரு கோணம்

## உங்கள் அன்பு, ஆனந்தமெல்லாம் தானியங்கியாக இருக்கவேண்டும்



ஆன்மீகம் 41

**கேள்விகளே எழாத இதயம் என்பது மூடத்தனத்தின் முழுமையா? தெளிந்த நிலையையா?**

முட்டாள் தனத்திற்கும் ஞானோதயத்திற்கும் வித்தியாசம் என்று பார்த்தால் மிகவும் குறைவுதான். முட்டாளின் மனதிலும் கேள்விகள் எழாது. ஞானோதயம் அடைந்தவருக்கும் கேள்விகள் எழாது. ஆனால் இரண்டும் முற்றிலும் வேறு வேறு உலகங்கள். இரண்டுக்கும் மத்தியில் இருப்பவர்களுக்குத்தான் கேள்விகளும் போராட்டங்களும் அதிகம். ஏனென்றால் அவர்களால் முட்டாள்தனத்திலேயே இருக்கவும் முடியவில்லை, ஞானோதயத்தை அவர்கள் இன்னும் எட்டவும் இல்லை. முட்டாள்த்தனம் ஒரு கரை என்றால் ஞானோதயம் இன்னொரு கரை. இரண்டுக்கும் மத்தியில் நீங்கள் பயணம் செய்து கொண்டிருக்கிறீர்கள் என்றால் அது மிகவும் நல்ல விடயம்.

**நீங்கள் எந்த ஆன்மீகப் புத்தகத்தையும் படித்ததில்லை என்கிறீர்கள், உங்கள் புத்தகங்களை உலகமே படிக்கிறது. இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

என்னுடைய புத்தகங்கள் ஆன்மீகப் போதனைகள் அல்ல. ஆன்மீகம் என்று நீங்கள் கருதிக்கொண்டிருக்கிற அபத்தங்களையெல்லாம் உங்கள் மனங்களிலிருந்து அகற்றுவதற்காகத்தான் அவை வெளியிடப்படுகின்றன. அவற்றில் உபதேசங்கள் எதுவும் இருக்காது. எனவே ஆன்மீகப் புத்தகம் என்று நீங்கள் புரிந்து கொண்டிருக்கிற புத்தகங்களுக்கும் இவற்றிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

**பிறரிடம் அன்பாய் இருப்பதால் காலப்போக்கில் ஏமாற்றமும் விரக்தியும் வருகிறது எனவே அன்பு அனாவசியம்தானே?**

அன்பு என்பது மற்றொருவருடன் தொடர்புடைய விடயமல்ல. நமது உணர்ச்சியை இனிமையான நிலையில் வைத்திருந்தால் அதை அன்பு என்கிறோம். இதற்கு இன்னொருவரின் உதவி தேவையில்லை. ஆனால், தற்போது இன்னொருவரின் உதவியை உபயோகப்படுத்தி, இன்னொருவரை தூண்டுகோலாக்கி அன்பை உணர்வதால் இன்னொருவர் இருந்தால் மட்டுமே அன்பை உணர முடியும் என்ற தவறான கருத்து மனிதனின் மனதில் வந்து விட்டது. தற்போது உங்களருகே நீங்கள் மிகவும்நேசிக்கும் ஒரு மனிதர் அமர்ந்திருக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அவர்மீதான அன்பை நீங்கள் உங்களுக்குள் உணருகிறீர்கள். சற்று நேரத்தில் அவர் எழுந்து சிறிது தூரம் சென்றுவிட்டால், இப்போதும் நீங்கள் இருக்குமிடத்திலிருந்தே அவர் மீது அன்பாய் இருக்க முடியும். அவர் 10 மைல் தூரம் சென்றிருந்தாலும் உங்களுக்குள் அன்பை உணர முடியும். அவர் இல்லாமல் போய்விட்டாலும் கூட அவரை நினைத்து உங்களுக்குள் நீங்கள் அன்பாய் இருக்க முடியும்.

எனவே, அன்பு என்பது உங்களுடைய தன்மை. ஆனால், அந்தத் தன்மை உங்களுக்குள் திறந்து கொள்ள மற்றொருவரை ஒரு சாவியாக, ஒரு தூண்டுதலாக உபயோகப்படுத்தியிருக்கிறீர்கள். அப்படியானால் உங்களுக்குள் உள்ள அன்பை வேறொருவர் தள்ளிவிட்டு இயக்க வேண்டியுள்ளது. முன்காலத்தில் நீங்கள் ஒரு கார் வாங்கினால் அவற்றோடு இரண்டு வேலையாட் களையும் நியமித்தாக வேண்டும். ஏனென்றால் அவர்கள் காரைத் தள்ளிவிட்டால்தான் அது ஓடத் தொடங்கும். ஆனால் இப்பொழுதெல்லாம் கார்கள் தானியங்கியாகிவிட்டன.

அதே போல உங்கள் அன்பு, ஆனந்தமெல்லாம் தானியங்கியாக இருக்க வேண்டும். இந்தத் தன்மைகளை நமக்குள்ளேயே உருவாக்கிக் கொள்ளும்போது யார் இருந்தாலும் இல்லையென்றாலும் நாம் நம்முள் அன்பாய் இருக்க முடியும்.இன்னொரு மனிதன் இருந்தால் அவரோடு பகிர்ந்து கொள்ளலாம், இல்லை யென்றாலும் நம்முள் நாம் அன்பாக இருக்க முடியும்.

தற்போது அன்பு என்றால் மற்றவரை எப்படி உபயோகப்படுத்துவது என்றாகிவிட்டது. யாரோடு அன்பாயிருக்கிறீர்களோ அவர் நீங்கள் விரும்பும் விதமாக இருக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்பு வந்து விட்டது. இது அன்பல்ல. வியாபாரம்.

தேவையானதைப் பெற்றுக் கொள்ள காதல், அன்பு போன்றவை மக்களுக்கு ஒரு மந்திரமாகி விட்டது. அலிபாபா கதையை நீங்கள் கேட்டிருக்கலாம். அதில் "திறந்திடு சிசே" என்றால் ஒரு கதவு திறக்கும் அதே போல "நான் உன்னை காதலிக்கிறேன்" என்பதும் ஆகிவிட்டது. எங்கள் தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள இது ஒரு திறவுகோல் ஆகிவிட்டது. உங்கள் தேவை உடல் நிலையில் இருக்கலாம், மனநிலையில் இருக்கலாம், உணர்ச்சி நிலையில் இருக்கலாம். ஆனால் அவற்றை நிறைவேற்றிக் கொள்ளவே அன்பை உபயோகப்படுத்தியிருக்கிறீர்கள். யார் இருந்தாலும், இல்லையென்றாலும் மனிதன் என்றாலும் மரம் என்றாலும் விலங்கு என்றாலும் கண்களை மூடி அமர்ந் திருந்தாலும் நம் உணர்ச்சி நிலை ஒருஇனிமையான தன்மையில் இருக்குமானால் அதுதான் அன்பின் நிலை. (தொடரும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்

# மட்டக்களப்பு, திருகோணமலை வரலாறு தொடர்பான கர்ண பரம்பரைக் கதைகள்

இவ்வாறு "மட் மான்மியத்"தில் ஏகப்பட்ட குளறுபடிகள் உள்ளன. கால முரண்பாடுகள் பெயர் மாறாட்டம், நம்ப முடியாத சம்பவங்கள் எனப்பல குறைபாடுகள் இதில் உள்ளன. ஏனைய வரலாற்று நூல்களுடன் சரிபார்த்து ஏற்றுக் கொள்ளக் கூடிய உண்மைகளை மட்டுமே வரலாறு என்ற வகையில் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் அத்தகைய ஒரு ஆய்வுப்பணியை க. தங்கேஸ்வரி செய்துள்ளார். இவர் ஒரு தொல்லியல் பட்டதாரி. களனிப் பல்கலைக்கழகத்தில் தொல்லியல் சிறப்புப் பட்டம் பெற்றவர். இவர் எழுதிய "குளக் கோட்டன் தரிசனம்", "மாகோன் வரலாறு" ஆகிய நூல்கள் உண்மையான வரலாற்றுத் தகவல்களைத் தருகின்றன.

"குளக்கோட்டன்" ஆய்வின் போது அவனுடன் சம்பந்தப்பட்ட வேறு சில கர்ணபரம்பரைக் கதை நூல்கள் பற்றியும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"கோணேசர் கல்வெட்டு, தெட்சண கைலாய புராணம் யாழ்ப்பாண வைபவமாலை, கைலாய மாலை, வையா பாடல், திருக்கோணாசல வைபவம், திருக்கரைசைப் புராணம், திருக்கோணாசலப் புராணம், கோணமாமலை அந்தாதி முதலியன அவ்வாறான நூல்ககளுட் சிலவாகும். இந்நூல்களின் சில கற்பிதங்களையும் அவர் எடுத்துக் கூறியுள்ளார். அவ்விபரம் வருமாறு,

1.கோணேசர் கல்வெட்டு- (கி.பி 1400) எழுதியவர் கவிராஜ வரோதையர்.

இந்நூலில் பின்வரும் விபரம் இடம்பெறுகிறது.

"குளக்கோட்டன் உன்னரசுகிரியில் (திருக்கோயில்) ஆட்சிபுரிந்த ஆடக சௌந்திரியை மணம் புரிந்து திருக்கோணமலை முதல் திருக்கோயில் வரை திருப்பணிகள் செய்தான். ஆடக சௌந்தரியின் உதவியுடன் கந்தளாய்க் குளத்தைக்கட்டினான். கோணேசர் கோவில் நடைமுறைக்காக வயல்களை நிவந்தமாக வழங்கினான். தென்னிந்தியாவிலிருந்து தொழும்பர்களைத் தருவித்து குடியமர்த்தினான்."

இதில் வரும் ஆடக சௌந்தரி

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

திருமணம் திருக்கோயில்வரை திருப்பணி புரிந்தது.ஆடக சௌந்தரியின் உதவியுடன் கந்தளாய்க் குளத்தைக் கட்டியது போன்ற குறிப்புக்களுக்கு வரலாற்று ஆதாரம் இல்லை.

ஆடக சௌந்தரி உதவியுடன் கந்தளாய்க் குளத்தைக்கட்டினான் என்பது அவளுடைய பூதப்படைகள் என்ற மற்றொரு கற்பனையை ஆதாரமாகக் கொண்டே எழுதப்பட்டிருக்க வேண்டும். இத்துடன் இணைந்த வேறுசில கற்பனைகளும் உள்ளன. ஆடக சௌந்தரி குளக்கோட்டன் மேல் படையெடுத்தாள். குளக்கோட்டன் அப்படையெடுப்பை முறியடித்தான். பின்னர் இருவரும் திருமணம் முடித்தனர் எனும் கதையில் கற்பனை எல்லைமீறி விட்டதையே இக்குறிப்புகள் எடுத்துக்காட்டுகின்றன.

2. தெட்சண கைலாயபுரம்- (கி.பி.1400) எழுதியவர் பண்டிதராசர்.

இந்நூல் கூறும்விபரம் வருமாறு:

வரராம தேவன் (சோழமன்னன்) மச்சேந்திர புராணத்தில் கூறப்படும் கோணேசர் ஆலயத்தின் பெருமைகளைக் கேள்வியற்று ஈழம் வந்து திருக்கோணமலைச்சிகரத்தில் தூபியுடன் கோயில் இயற்றி பூசை விழா முதலியன நடாத்தி திருப்பணிக்குக் கொண்டுவந்த பொன்னைக் கிணற்றில் அடைத்துவைத்து மகனுக்கு அறிவிக்கும் படி தூது அனுப்பிப் பரகதியடைந்தான். பின் அவன் மகன் குளக்கோட்டன் இலங்கைக்கு வந்து திருப்பணிசெய்தான். இது ஒரு அபத்தமான கதை.

இக்கதை எவ்வித வரலாற்று ஆதாரங்களும் அற்ற கற்பனைக் கதையாகும். குளக்கோட்டனின் உண்மை வரலாறு வேறுவிதமாக அமைந்துள்ளது.

3. திருகோணமலை வைபவம்- (கி.பி.1889) எழுதியவர் வே. அகிலேச பிள்ளை. இந்நூல் கூறும் விபரம் வருமாறு,

சோழ மண்டலத்தை ஆட்சிசெய்த மனுநீதிகண்டசோழன் வம்சத்தவனாகிய வரராமதேவன் திருக்கோணமலைக்கு வந்து திருப்பணி கள் செய்தான். இவன் திரும்பிச் செல்லும்போது அதிக திரவியங்களைச் சேர்த்து வைத்துவிட்டுச் சென்றான்.

பின்னால் இவனுக்கு ஒரு புத்திரன் பிறந்தான். இவனுக்கு நெற்றியில் ஒரு கொம்பு காணப்பட்டது. எனவே இவன் குளக்கோட்டன் என அழைக்கப்பட்டான். இவன் பிற்காலத்தில் தனது தந்தையின் திரவியங்கள் பற்றிய விபரம் அறிந்து திருகோணமலைக்கு வந்து சேர்ந்தான்.

இஃதிவ்வாறாக கலிங்க தேசத்தில் அசோக சுந்தரன் தம்பதிகளுக்கு பிறந்த ஒரு குழந்தை சீவிமுடித்த குழலோடும் பற்களோடும் பிறந்தது. சோதிடர் சொற்படி இக்குழந்தை பேழையில் வைக்கப்பட்டுக் கடலில்

02
அன்பு மணி

விடப்பட்டது. இக்குழந்தை உன்னரசுகிரியை (திருக்கோவில்) ஆண்ட மனு நேய கயவாகு மன்னனால் கண்டெடுக்கப்பட்டது. இக்குழந்தை வளர்ந்ததும் ஆடக சௌந்தரி என்னும் பெயருடன் உன்னரசுகிரியில் வளர்ந்தது. குளக்கோட் டன் ஆடக சௌந்திரியைத் திருமணம் செய்தான். எனவே அவன் திருப்பணி உன்னகிரியிலும் இடம் பெற்றது.

இதுவும் "மட். மான்மியத்"தை ஒட்டிய ஒருகற்பனைக் கதைதான். ஆனால், குளக்கோட்டனுக்கு நெற்றியில் கொம்பு வைத்ததை இந்நூலாசிரியரின் மேலதிக சரடு என[illegible] கொள்ளலாம்.

(தொடரும்)

# சந்திராஷ்டமம் என்றால் என்ன?

இராசிபலன் எழுதும் ஜோதிடர்கள் சந்திராஷ்டம நாளைக் குறிப்பிட்டு எச்ச ரிக்கை விடுவதுண்டு. நாம் இராசிபலன் எழுதும் போதும் சந்திராஷ்டமம் உஷார் என்று தான் எழுதுகின்றோம். இதன் உண்மை தெரிந்தவர்கள் சிலரேயாவர். தெரியாதவர்கள் தாம் அதிகம். சந்திராஷ்டமம் உஷார் என்று எழுதுகிறானே என்ன நடக்குமோ? என்று சிலர் பயப்படவும் செய்கிறார்கள்.

அஷ்டமம் என்றால் எட்டு என்று பொருள். சந்திராஷ்டமம் என்றால் எட்டில் சந்திரன் என்பதாகும். அதாவது ஒருவர் பிறந்த இராசியிலிருந்து ஒவ்வொரு இராசியாகக் கடந்து சந்திரன் எட்டாமிடம் வரும் போது சந்திராஷ்டமம் என்று ஜோதிடர்கள் குறிப்பிடுகிறார்கள்.

பொதுவாக எட்டு என்கிற எண்ணே சில கஷ்டங்களை ஏற்படுத்தும் என்கிற நம்பிக்கை எல்லோரிடமும் நிலவி வருகின்றது.

எட்டாம் பிறப்பு எட்டிப் பார்த்த வீடு குட்டிச்சுவரு என்று எட்டாம் பிறவியாக பிறந்த பெண்ணைச் சொல்லுவார்கள். ஆண் மட்டும் என்ன வாழ்ந்தது! எட்டாம் பிறவியாக பிறந்த கிருஷ்ணன் (பகவான்) தன் மாமனைக் கொன்று தன் குலத்தையே நாசம் செய்து விட்டான்.

பௌர்ணமி, அமாவாசைக்குப் பின் னர் வரும் எட்டாம் நாளை அஷ்டமி என்று சொல்லுவார்கள். இந்தநாள் எந்த வேலைக்கும் உதவாது என்று ஒதுக்கித் தள்ளுகிறோம்.

முஸ்லிம்களுக்கு எட்டும் பதினெட்டும் மூன்றும் பதின்மூன்றும் ஆகாது என்று கூறுகிறார்கள். ஆகவே எட்டு என்கிற எண் மிகப் பொல்லாதது என்று உணர்கின்றோம்.

இதுபோலவே,

ஜோதிடத்திலும் எட்டாமிடம் பெற்ற கோட்கள் கொடுபலன்கள் தாம் ஏற்படுத்துமென்று சுருதியின் மூலம் கண்டறிகின்றோம். ஆகவே சந்திரன் ஜென்ம இராசியைவிட்டு நகர்ந்து ஒவ்வொரு இராசிக்கும் போகும் போது ஒவ்வொரு விதமான பலன் ஏற்படும் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். எட்டாமிடம் பெற்றுவிட்டால் ஏதாவது தொந்தரவுகள் ஏற்படக்கூடும் என்கிற வகையில் சந்திராஷ்டமம் உஷார் என்றே குறிப்பிடுகி றோம்.

நமது அச்சக கம்போசிங் செக்ஷனில் நான் நுழைந்தவுடன் சில கம்பாசிடர்கள் ஆவலுடன் சந்திராஷ்டமம் என்றால் என்ன சேர்? என்று ஒரு கேள்வியைப் போட்டார் கள்.

நியாயமான கேள்விதான். சந்திராஷ் டமம் உஷார்! உஷார்! என்றுபலமுறை கம்போஸ் செய்தவர்களாயிற்றே. இந்த சந்தேகம் எழாமலிருக்குமா?

சந்திராஷ்டமம் உஷார் என்று குறிப்பிடும் நாளில் நின்றபடி பொத்தென்று விழுவோமோ அல்லது எங்காவது மோதிக் கொள்ளுவோமோ? என்ன தான் இது என்று கேட்டுக் தெரிந்து கொள்ள ஆர்வமுண்டாவது இயற்கை. இவர்களைப் போல பல வாசகர்களும் இதைத் தெரிந்து கொள்ளத் துடிக்கிறார்கள் என்று எனக்குத் தெரியும். ஆனால் கம்பாசிடர்களின் கேள்வி இக்கட்டுரைக்குத் தூண்டுகோலாக அமைந்தது.

ஆரம்பத்தில் நான் சொல்லிய விளக்கம் போதுமானதல்ல என்றுஎண்ணுகிறேன்.

| | | | |
|---|---|---|---|
| ரேவதி உத்திராட்டாதி பூரட்டாதி 4 | அஸ்வினி பரணி கிருத்திகை 1 | கிருத்திகை 2,3,4 ரோகிணி மிருக சீருஷம் 1,2 | மிருக சீருஷம் 3,4 திருவாதிரை புனர்பூசம் 1,2,3 |
| பூரட்டாதி 1, 2, 3 சதயம் அவிட்டம் 3,4 | இந்த ராசியில் 27 நட்சத்திரங்களும் ராசி ஒன்றிற்கு 2¼ வீதம் அடங்கி இருக்கின்றன | | புனர்பூசம் 4, பூசம் ஆயில்யம் |
| அவிட்டம் 1,2 திருவோணம் உத்திராடம் 2,3,4 | | | மகம், பூரம் உத்திரம் 1 |
| மூலம் பூராடம் உத்திராடம் 1 | விசாகம் 4 அனுஷம் கேட்டை | சித்திரை 3,4 சுவாதி விசாகம் 1,2,3 | உத்திரம் 2,3,4 அஸ்தம் சித்திரை 1,2 |

## ஜோதிடக் களம்



### விளக்கம்

கோட்கள் வருடக் கோட்களென்றும் மாதக் கோட்களென்றும் தினக்கோட்க ளென்றும் பிரிக்கப்படுகின்றன. வருடக் கோட்கள் என்பவை குரு, சனி, இராகு, கேது முதலியனவாகும். இவர்களைக் கொண்டு தான் வருடப் பலன் ஏற்படுத்த வேண்டும்.

மாதக் கோட்கள் என்பவை சூரியன், சுக்ரன், செவ்வாய், புதன் முதலியவாகும். இவர்களைப் கொண்டு தான் மாதப் பலன்களை ஏற்படுத்த வேண்டும்.

தினக்கோள் என்பது சந்திரன் ஒருவனேயாகும். சந்திரனைக் கொண்டுதான் தினப் பலன் ஏற்படுத்த வேண்டும். 27 நட்சத்திரங்களும் 12 இராசியில் அடங்கி இருக்கின்றன. அதாவது ஒரு இராசிக்கு இரண்டே கால் நட்சத்திரம் வீதம் அடங்கி இருக்கும்.

நீங்கள் ஏதாவது ஒரு நட்சத்திரத்தில் பிறந்திருப்பீர்கள். அந்த நட்சத்திரம் இருக்கும் இராசி முதல் ஒரு நாளுக்கு ஒரு நட்சத்திரம் வீதம் சந்திரன் கடந்து எட்டாவது இராசியைப் பிடிக்கும் போது தான் சந்திராஷ்டமம் ஏற்படும்.

உதாரணமாக நீங்கள் அத்த நட்சத்திரம் கன்னி இராசியில் பிறந்ததாக வைத்துக் கொள்ளுங்கள். அது முதல் சந்திரன் ஒவ்வொரு இராசியாக கடந்து மேட இராசியைப் பிடிக்கும் போது சந்திராஷ்டமம் ஏற்படும் என்பது தெளிவு. இது போலவே மற்ற இராசிகளுக்குமாகும். கீழே காணும் இராசிக் கட்டத்திலிருந்து இதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

சந்திரன் தினக்கோளாகையால் தான் கடந்துசெல்லும் ஒவ்வொரு இராசிக்கும் ஒவ்வொரு விதமான பலன் ஏற்படுத்தும். இதைக் கொண்டுதான் ஜோதிடர்கள் வாரப் பலனும் தினப் பலனும் எழுது றார்கள்.

ஜென்ம இராசியில் சந்திரன் நின்றால்– சுகம், இரண்டில் நின்றால் நஷ்டம்.மூன்றில் நின்றால்– பொருள் வரவு இலாபம்.நான்கில் நின்றால் வியாதி, தோஷம்

ஐந்தில் நின்றால் –துயரச் செய்தி, காரிய பங்கம், ஆறில் நின்றால் – சத்ரு ஜெயம், பொருள் வரவு, ஏழில் நின்றால்– கடன் வாங்குவர். சமமான பலன் . எட்டில் நின்றால் –விரோதம்,இடைஞ்சல் , கஷ்டம், ஒன்பதில் நின்றால் பொருள் சேதம், தாமதப் பலன் பத்தில் நின்றால் பொருள் சேரும், நன்மையுண்டு. பதினொன்றில் நின்றால் கடன் கிடைக்கும், நூதனப் பொருள் சேர்க்கை. பன்னிரெண்டில் நின்றால் நஷ்டமேற்படும்.

இதன்படி எட்டாமிடச் சந்திரன் பலனைப் பார்த்தீர்களா? விரோதம், கஷ்டம், பொருட் சேதம் இடைஞ்சல், நஷ்டம்.

எனவே குறிப்பிடும் நாளில் சந்திரன் எட்டாமிடம் வரும் போது உஷார் என்று எச்சரிக்கிறார்கள். அப்படிச் செய்வதால் நீங்கள் எச்சரிக்கையாயிருந்து திருப்தியற்ற பலனாக ஏற்படா வண்ணம் பார்த் துக் கொள்ளலாமல்லவா?

*தேய்பிறையில் பிறந்தவர்களுக்கும் இரவில் பிறந்தவர்களுக்கும் எட்டாமிடச் சந்திரனால் எந்த கெடுதலும் ஏற்படாது என்று சிலர் கூறுகின்றார்கள்.

## மிருகங்களை பலியிடுவதனை தடுக்கக்கோரிய மனுவை நீதிமன்றம் மீண்டும் நிராகரிப்பு

சிலாபம் முன்னேஸ்வரம் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய வருடாந்த திருவிழாவை முன்னிட்டு நடைபெறும் மிருகங்களை பலியிடும் நிகழ்வினை தடுக்கும் நோக்கில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை நீதிமன்றம் மீண்டும் நிராகரித்துள்ளது.

மிருகங்களை பலியிடுவதனை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் அதனை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரி மேன்முறையீடு நீதிமன்றில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது.

எனினும் குறித்த மதச் சடங்கினை தடை செய்யும் வகையில் இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கமுடியாது என மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

நூற்றாண்டு காலமாக நடைபெற்று வரும் மதச் சடங்கு ஒன்றினை திடீரென தடை செய்ய கோருவதனை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் இந்தப் பிரச்சினை அரசியல் சாசனத்துடன் தொடர்புடையது எனவும் நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது. மேன்முறையீட்டு நீதிவான்களான டபிள்யூ.எல்.ரஞ்சித் சில்வா, நலீன் ஜே.பெரேரா ஆகியோர் இந்த மனுவினை பரிசீலனை செய்தனர். மிருகங்களை பலியிடும் நிகழ்வு நேற்றைய தினம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி சீ.ஆர். டி. சில்வாவும் ஆலய பரிபாலன சபையினர் சார்பில் சட்டத்தரணி சிறிநாத் பெரேராவும் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர்.

குறித்த மனு மீதான விசாரணைகளை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 14 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பதாக நீதிமன்றம் அறிவித்துள்ளது.

பௌத்த மதகுருமாரைக் கொண்ட குழுவொன்றினால் குறித்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதே வேளை குறித்த சமய நிகழ்வினை தடை செய்யுமாறு கடந்த 29 ஆம் திகதியும் நீதிமன்றில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது. (ஸ்ரீ-2)

## இம்மாதத்தில் 496 டெங்கு நோயாளர்கள் பதிவு

(கொழும்பு)

இந்த மாதத்தின் கடந்த 12 தினங்களில் 496 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த காலப் பகுதியில் கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் 193 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் ஆய்வுப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 17 ஆயிரத்து 621 பேர் டெங்கு நோயால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவிலான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அத்துடன் கம்பஹா மாவட்டத்தில் 2 ஆயிரத்து 708 டெங்கு நோயாளர்களும் களுத்துறை மாவட்டத்தில் 933 டெங்கு நோயாளர்களும் பதிவாகியுள்ளனர்.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் நாட்டில் 126 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் ஆய்வுப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## மனித உரிமை விவகாரங்கள் குறித்து பொலிசாருக்கு பயிற்சி

மனித உரிமை விவகாரங்கள் குறித்து பொலிசாருக்கு விசேட பயிற்சி அளிக்கப் படவுள்ளது. அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டுள்ள நிலையில் சாதாரண சட்டங்களின் கீழ் பொதுமக்களின் மனித உரிமைகளை எவ்வாறு பாதுகாப்பது என்பது தொடர்பில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழு பயிற்சிகளை வழங்கவுள்ளது.

தலைநகருக்கு வெளியில் கடமையாற்றி வரும் பெரும்பான்மையான பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மனித உரிமை விவகாரங்கள் பற்றி போதியளவு விளக்கம் கிடையாது என இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவின் செயலாளர் நிமால் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

கண்டி,அனுராதபுரம் போன்ற மாவட்டங்களைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஏற்கனவே பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டுள்ள நிலையில் கைதுகளை எவ்வாறு மேற்கொள்வது என்பது தொடர்பில் பொலிசாருக்கு விசேட பயிற்சி அளிக்கப்பட உள்ளதாக தெரிவித்துள்ளார்.வழக்கு விசாரணையின்றி நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் தொடர்பிலான தரவுகளும் திரட்டப்பட உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பொலிசார் உரிய முறையில் விசாரணைகளை நடத்தாத காரணத்தினால் பலர் நீண்ட காலம் சிறைகளில் காலத்தை கழிக்க நேரிட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

மனித உரிமை மீறல் தொடர்பான சகல முறைப்பாடுகளையும் துரித கதியில் விசாரணை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)





முல்லைத்தீவு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை புதிய வகுப்பறை கட்டடத் திறப்புவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், 591 படைப் பிரிவின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் அகல மல்லே ஆகியோர் இணைந்து நாடா வெட்டி கட்டடத்தினை திறந்து வைப்பதையும் மாணவர்களின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

### சம்பள பாகுபாட்டை தீர்க்கக் கோரி

## ஆசிரியர் சேவை தொழிற்சங்கங்கள் விரைவில் தொழிற்சங்க நடவடிக்கை

சம்பள பாகுபாடு மற்றும் தமது ஏனைய பிரச்சினைகளை தீர்ப்பதற்கு கல்வித்துறை அதிகாரிகள் தவறியமைக்கு எதிராக ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் 9 தொழிற்சங்கங்கள் இணைந்து தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளன.

இலங்கை ஆசிரியர் சேவை ஒன்றியம், சுதந்திர இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கை கல்விச் சேவை ஒன்றியம், பிரிவேனா ஆசிரியர் சேவை ஒன்றியம், பயிற்றப்பட்ட ஆசிரிய உத்தியோகத்தர்கள் சங்கம், இலங்கை பாடசாலை அதிபர்கள் சேவை ஒன்றியம், தேசிய அதிபர்கள் சேவை ஒன்றியம், அகில இலங்கை தேசிய கல்விச் சேவை ஒன்றியம் ஆகியனவே இவ்வாறு தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொள்ள தீர்மானித்துள்ளன.

இவற்றைத் தவிர இன்னும் பல ஆசிரியர் சேவை தொழிற்சங்கங்கள் விரைவில் இணைந்து கொள்ளவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சேவை ஒன்றியத்தின் தலைவர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார். ஒன்றிணைந்த போராட்டத்திற்காக பல்வேறு தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடல்கள் நடைபெறுவதாகவும் அவர் கூறினார்.

சம்பள உயர்வுக்கான கோரிக்கைகள் தொடர்பான பி.சி. பெரேரா ஆணைக்குழுவின் சிபாரிசுகள் க டந்த 14 வருடங்களாக அதிகாரிகளால் அமுல்படுத்தப்படாமல் உள்ளதால் திகதியொன்றை அறிவிக்காமல் தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ள தாம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தரம் ஒன்றை சேர்ந்த ஆசிரியர் 36 ஆயிரத்து 777 ரூபாவை மாதாந்த சம்பளமாக பெற வேண்டும். எனினும் 25 ஆயிரத்து 515 ரூபா சம்பளத்தை ஏற்றுக் கொள்ள தொழிற்சங்கங்கள் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். தற்போது தரம் ஒன்றைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு 21 ஆயிரத்து 515 ரூபா சம்பளமே வழங்கப்படுவதாகவும் அவர் கூறினார். (ஸ்ரீ-4-2)

## சுற்றிவளைப்புக்களின் மூலம் 52 கோடிக்கும் மேல் அபராதம்

### நுகர்வோர் அதிகாரசபை தெரிவிப்பு

(கொழும்பு)

இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களின் மூலம் 52 கோடிக்கும் மேற்பட்ட தொகை அபராதமாகப் பெறப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் மூலம் மூவாயிரத்துக்கும் மேற்பட்டோர் இனங்காணப்பட்டதாக அதிகாரசபையின் தலைவர் றூமி மர்சூக் குறிப்பிட்டுள்ளார்.

விலைகளை காட்சிப்படுத்தாமை, காலாவதியான பொருட்களை விற்பனை செய்தமை மற்றும் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்தமை உட்பட நுகர்வோரின் பணத்தை மோசடிசெய்த நபர்களிடமிருந்து இந்த அபராதத் தொகை அறவிடப்பட்டதாக அவர் மேலும் கூறினார். (ஸ்ரீ-2)

## நெல்லை ஏற்றுமதி செய்ய அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

அரச களஞ்சியசாலைகளில் வைக்கப்பட்டுள்ள 18 ஆயிரம் மெற்றிக் தொன் நெல்லை ஏற்றுமதி செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

குறித்த நெல் தொகை அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தில் பாதிக்கப்படும் அச்சுறுத்தலை எதிர்நோக்கி இருந்ததாக கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சின் செயலாளர் சுனில் எஸ். சிறிசேன குறிப்பிட்டார்.

அரச களஞ்சியசாலைகளில் வைக்கப்பட்டுள்ள நெல்லை ஏற்றுமதி செய்வதற்கு தரகர் ஒருவரை இனங்காண்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

பெரும்போகத்தின் போது கொள்வனவு செய்யப்பட்ட நெல்லை களஞ்சியப்படுத்துவதற்கு களஞ்சியசாலை கட்டடத் தொகுதிகளை வெற்றிடமாக்குவதே இதன் நோக்கம் என அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, பெரும்போகத்தின் போது 43 ஆயிரத்து 852 மெற்றிக்தொன் நெல்லை நெல் விற்பனை சபையிடம் இருந்து கொள்வனவு செய்ததாக கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சின் செயலாளர் சுனில் எஸ். சிறிசேன மேலும் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

## பஸ்கட்டணங்களுக்கான முற்கொடுப்பனவு அட்டையை அறிமுகப்படுத்துவதில் சிக்கல்

பஸ் கட்டணங்களுக்காக முற்கொடுப்பனவு அட்டைகளை அறிமுகப்படுத்துவதில் தனியார் போக்குவரத்து அமைச்சு போதிய ஆதரவளிக்காமை குறித்து தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் அதிருப்தி தெரிவித்துள்ளது.

அமைச்சின் ஆதரவின்றி இத்திட்டத்தை முழுமையாக அமுல்படுத்த முடியாது எனவும் அச்சங்கம் கூறியுள்ளது.

தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் 10 ஆவது வருட நிறைவை முன்னிட்டு எதிர்வரும் 24 ஆம் திகதி முற்கொடுப்பனவு அட்டை திட்டத்தை பரீட்சார்த்தமாக அமுல்படுத்த இச்சங்கம் தீர்மானித்தது.

எனினும் இதற்கு அமைச்சு போதிய ஆதரவு வழங்கவில்லை என அச்சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன தெரிவித்தார்.

இத்திட்டத்தை மத்திய வங்கி அங்கீகரித்துள்ளதாகவும் போக்குவரத்து அதிகாரிகளும் ஆதரவளித்தால் இத்திட்டத்தை தனியார் பஸ் உரிமையாளர்கள் வெற்றிகரமாக அமுல்படுத்த முடியும் எனவும் அவர் கூறினார்.

இலங்கையில் 20 ஆயிரத்து 500 பஸ்கள் இயங்குவதாகவும் அவைகளில் 15 ஆயிரம் பஸ்கள் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு சொந்தமானவை எனவும் கெமுனு விஜேரட்ன தெரிவித்தார். (ஸ்ரீ-2)




★1752- கிரிகோரியன் நாட்காட்டியை பிரித்தானியா ஏற்றுக் கொண்டது. இதன்படி புதிய நாட்காட்டியில் 11 நாட்களை அது இழந்தது. முன்னைய நாள் செப்டெம்பர் 2 ஆகும்.

★1812- நெப்போலியனின் படைகள் மொஸ்கோவினுள் நுழைந்தன.

★1886- தட்டச்சுப் பொறியின் நாடா கண்டு பிடிக்கப்பட்டது.

★1917- ரஷ்யா அதிகாரபூர்வமாகக் குடியரசானது.

★1954- சோவியத் ஒன்றியம் அணுவாயுதச் சோதனையை மேற்கொண்டது.

★1959- சோவியத்தின் லூனா 2 விண்கலம் சந்திரனில் மோதியது. சந்திரனில் இறங்கிய மனிதனால் அமைக்கப்பட்ட முதலாவது விண்கலம் இதுவாகும்.

★1960- எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் கூட்டமைப்பு (ஒபெக்) உருவாக்கப்பட்டது.

★1982- லெபனானின் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பசீர் ஜெமாயெல் படுகொலை செய்யப்பட்டார்.

★1999- கிரிபட்டி, நெளரு, டொங்கா ஆகியன ஐ.நா. அவையில் இணைந்தன.

★2003- சுவீடனில் இடம்பெற்ற மக்கள் வாக்கெடுப்பில் யூரோ நாணயத்தை ஏற்றுக் கொள்ளும் தீர்மானம் நிராகரிக்கப்பட்டது.

★2005- நடிகர் விஜயகாந்த் தேசிய முற்போக்கு திராவிடக் கழகம் என்ற புதிய அரசியற் கட்சியை ஆரம்பித்தார்.

**பிறப்புக்கள்**

★1939- சோ. பத்மநாதன், ஈழத்து எழுத்தாளர்

★1965- டிமித்ரி மெட்வடேவ், ரஷ்யாவின் மூன்றாவது ஜனாதிபதி

**இறப்பு**


★1901- வில்லியம் மக்கின்லி, ஐக்கிய அமெரிக்காவின் 25 ஆவது ஜனாதிபதி (பி.1843)



1853- இலங்கையின் தேசியத் தலைவர் சேர்பொன்.அருணாசலத்தின் ஜனன தினம் இன்றாகும். (இ.1924)

# நவீன எண் சோதிடம்

45




## கல்வி கேள்வியில் சிறந்து விளங்கும் இவர்கள் கண்ணியம் மிக்கவர்கள்

### உடல் எண் 5 உயிர் எண் 7

5,14,23 போன்ற தேதியில் பிறந்து, பிறந்த தேதி, மாதம், வருடம் இம்மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகி உயிர் எண் 7 வருமேயானால் இவர்கள் புதன், கேது ஆதிக்கத்தில் பிறந்தவர்களாகவும், கண்ணியம் மிக்கவர்களாகவும் காட்சியளிப்பர். எப்போதும் எளிமையான ஆடையில் தூய்மையாகத் தோன்றுவர். சிறந்த சிந்தனா சக்தி படைத்த இவர்களுக்குத் தனிமையில் கற்பனைகள் தோன்றிய வண்ணமிருக்கும். எப்போதும் சுறுசுறுப்புடன் விளங்கும் இவர்கள் சில நேரங்களில் தனிமையில் இருந்து வருந்துவர். தன் மனதில் இருப்பதையெல்லாம் வெளியிடாது மனம் புழுங்குவர்.

கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கும் இவர்களுக்குப் பெயர் பொருத்தமாக அமைந்துவிட்டால் உத்தியோகம், தொழில் போன்றவற்றால் உயர் இடம் வகிப்பர். ஆனால், பெயர் பொருத்தமின்றி அமைந்துவிட்டால் குழப்பம் மிகுந்த வாழ்க்கையில் சிக்கித் தவிப்பர். இதனால் இவர்கள் தன் பிறந்த தேதிக்குப் பொருத்தமானதாக பெயரை மாற்றி அமைத்துக் கொள்வது அவசியம் இவர்களின் மனம் நேர்மையற்ற காரி

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|
| A | B | C | D | E | U | O | F |
| I | K | G | M | H | V | Z | P |
| J | R | L | T | N | W | | |
| Q | | S | | X | | | |
| Y | | | | | | | |

யங்களை வெறுப்பதால் எப்போதும் உண்மையானவைகளையே விரும்பும். கடவுள் நம்பிக்கை கொண்ட இவர்களுக்குப் புனித யாத்திரை செல்வதில் அதிக ஆர்வம் இருக்கும். தான் செய்கின்ற சிறு தவற்றைக் கூட தனிமையில் இருந்து எண்ணி வருந்துவர். இவர்களுக்கு பல்வேறு நண்பர்கள் இருப்பினும் எல்லோரிடமும் நிரந்தரமாக பழக்கம் வைத்துக் கொள்ள மாட்டார். இவர்களுடைய முன் கோபத்தை கண்டு எல்லோரும் அஞ்சி ஒதுங்குவர். இவர்கள் மனம் மலைப்பிரதேசங்களையும் நீர்த்தேங்கங்களையும், நீர் வீழ்ச்சிகளையும், இயற்கைக் காட்சிகளையும் கண்டு ரசிக்க கூடியது. இதனால் சிலர் கவிஞர்களாகக் கூட மாறுவதுண்டு. எந்த ஒரு பொருளையும் பார்த்தவுடனே அதைப்பற்றி ஆராய்ச்சியில் இறங்கிவிடுவர்.

தைரியசாலி போல் காட்சியளிக்கும் இவர்கள் உள்ளூற பயந்தாங் கொள்ளி. ஒவ்வொரு செயலும் ஆண்டவனால் நிர்ணயிக்கப்பட்டது. நாமென்ன செய்வது என்று சில நேர்களில் வேதாந்தம் போசுவர். குறுக்குக் கேள்வி கேட்பதிலும், வேதாந்தம் பேசுவதிலும் அதிக நாட்டம் கொண்டவராக இருப்பதனால், சிலருக்கு இவர்களைப் பார்த்தவுடன் வெறுப்பு ஏற்படும். ஆனால் இவர்கள் பிறருக்கு தீங்கு நினைக்காதவர்கள். சமயோசிதமாகப் பேசத் தெரியாதவர்கள். பெயர் பொருத்தமானதாக அமைந்துவிட்டால் ஏராளமான ஐசுவரியங்களையும் சம்பாதிப்பதோடு, தன்னைச் சார்ந்தவர்களையும் உயர்ந்த நிலைக்குக் கொண்டு வரவும் பாடுபடுவர்.

சட்டம், சமயம், இலக்கியம், மொழி, இசை, நாட்டியம் போன்ற கலைகளில் அதிக நாட்டமுடையவர்களாதலால் இவைகளை பற்றி ஆராயவும் தொடங்குவர். அழகான வீடு, கட்டுவதிலும், வீட்டைச் சுற்றி தோட்டம் போடுவதிலும், வீட்டைத் தூய்மையாக வைத்துக் கொள்வதிலும் மிகுந்த ஆர்வம் உள்ளவர்களாக இருப்பர். தன்னால் முடிந்தவரை பிறருக்கு உதவி செய்ய முன்வருவர். ஆனால் இந்த உதவியைச் செய்தால் எந்தச் சிக்கலிலும் மாட்டிக் கொள்ளுவோமோ என தன் மனதிற்குள் குழம்பிக் கொள்வர். இந்த எண்ணிக்கையில் பிறந்தவர்களுக்குப் பெயர் பொருத்தமானதாக அமைந்து விடுமேயானால் சோதனைகள் எல்லாம் குறைந்து பல வீரதீரச் செயல்களைச் செய்வர். சமுதாயத்தில்

எண் கணித நிபுணர்
கலாநிதி ஆர்.ஐ.துரைமுருகர் D.LIT

பெரிய மனிதர்களாக வாழ்வர். ஆனால், பெயர் பொருத்தமின்றி இருக்குமேயானால் எவ்வளவு முன்னேற்றம் அடைந்தாலும் ஒரு குழப்பவாதியாகவே வாழ்வர். இதனால் பெயர் பொருத்தமான தாக அமையவேண்டியது அவசியம்.

**தொழில்**

எழுத்தாலும், பேச்சாலும் பொருளீட்டுவர். கமிஷன், கான்ட்ராக்ட், ஏஜென்சீஸ், வாகனம், மெட்டல், இரும்பு போன்றவைகளினாலும் முன்னேற்றம் அடையும் பாக்கியம் உண்டு. பச்சை நிறப் பொருட்களும் இவர்களுக்கு நற்பலனைத் தரக்கூடியவைகளே.

**நோய்**

இந்த எண்ணிக்கைக்காரர்களுக்கு மனக்குழப்பம், வாயு சம்பந்தப்பட்ட கோளாறுகள், கண், காது, நோய் போன்றவைகள் வந்து நீங்கும்.

**பெயர் அமைக்கும் முறை**

புதன், கேது, ஆதிக்கத்தில் பிறந்த இவர்களுக்கு புதன், சுக்கிரன் ஆதிக்கமான 14, 23,32, 41,50,59,77,15,24,33,42, 51,60,69 போன்ற எண்களில் பெயரை அமைப்பது சிறப்பாகும்.

**பின்பற்ற வேண்டியவை**

யோகமான எண்- 5,2,6

யோகமான தேதிகள்- 5,14,23, 2,11,20,29,6,15,24

யோகமான மோதிரக்கல்-வைரம், ஜிர்கான்,

யோகமான நிறம்- சாம்பல் நிறம், பச்சை, வெளிர் நீலம், வெளிர் மஞ்சல்

ஆகாத நிறம்- சிவப்பு மட்டும்


ஆகாத தேதிகள்- 9,18,27

* * *

## பெயர் எண்களின் பலன்

**29 எண் பலன்**

இந்த எண்ணைப் பெயரில் உடையவர்கள் வம்புக்காரர்களாக மாறிவிடுவர். அடுத்தவர்கள் செய்யும் செயல்கள் இவர்களுக்கு தவறாகவே தென்படும். பிறரை நம்புவதே இல்லை. இவர்களுடைய குடும்ப வாழ்க்கை ஒரு குழப்பம் மிகுந்த வாழ்க்கையாகத் தான் இருக்கும். எல்லா மனிதர்களும் ஏமாற்றுக்காரர்கள் என்று கூறுவர். பிறரைக் கடுமையாக எதிர்ப்பர். எதிரி பலமாகி விட்டால் நயந்து செல்வர். இப்படிப்பட்ட இவர்களுக்கு பிறரால் துன்பங்களும் நேரிடுகிறது. இதனால் இந்த எண் விரும்பத் தக்கதல்ல. ஆனால் 7,16,25 தேதியில் பிறந்தவர்களுக்கு மட்டுமே மேற்கூறிப்பிட்ட பலன்கள் குறைய வாய்ப்பு உண்டு. 9,18,27 போன்ற தேதியில் பிறந்தவர்கள் இந்த எண் வருகின்ற மாதிரி பெயர் வைத்திருந்தால் பெண்களால் ஏற்பட்ட குழப்பத்தினால் தற்கொலை செய்ய முயல்வர்.



**30 எண் பலன்**

இந்த எண் பெயராகவோ, வியாபார விலாசமாககோ வந்தால் வருமானம் அவ்வளவு சிறப்பாக இருக்காது. பல்வேறு நல்ல சந்தர்ப்பங்களை (வருமானம் வரக்கூடிய சூழ்நிலை இருந்தும்) பயன்படுத்தாதுவிட்டு விடுவர். பிறருக்காக உதவி செய்யும் மனப்பான்மை கொண்ட இவர்கள் தன்மனத்திருப்திக்காக பிறர் செய்யமுடியாத காரியங்களைச் செய்வர். மற்றவர்களை எளிதில் புரிந்துக் கொள்ளும் திறமை இவர்களிடம் வந்துவிடும். இதனால் இந்த எண் சுமாரான நன்மை அளிப்பவவையே!

**31 எண் பலன்**

இந்த எண்ணைப் பெயரில் உடையவர்கள் பிறர் கட்டுப்பாட்டின் கீழ் வரமாட்டார்கள். எல்லா விதமான விடயங்களையும் சேகரித்து வைத்திருப்பர். சிறிய காரியங்களையும் கூட மிகைப்படுத்திப் பேசுவர். சம்பாத்தியததில் ஊக்கம் இல்லாத இவர்கள் எல்லாம் தனக்கு இருப்பதாக நினைத்துக் கொண்டு வாழ்வர். போராடி வெற்றி பெற்று அதற்கான பயன் பெறாமல் இருந்து விடுவர். முன்வாழ்கையில் ஓரளவு நன்மை அடைந்தபோதிலும் தனது இடைப்பட்ட வயதில் திடீரென்று நோயாலோ அல்லது தொழிலாலோ பொருளை இழக்கின்றனர். ஆனால் இந்த எண்ணுக்கு பொருத்தமான தேதியில் பிறந்த 1,10,19, 28,6,15,24, நபர்கள் மட்டும் தனக்கு வரும் கெடுதலை உணர்ந்து தப்பித்துக் கொள்வர். இந்த எண்ணில் பெயரை வைத்திருப்பவர்கள் நல்ல எண்களில் பொருத்தமாக மாற்றி வைத்துக் கொள்ளவும்.

(தொடரும்)

# மகளின் திருமண வைபவத்தில் கலந்துகொள்ள அனுமதி கோரும் கைதி

(கொழும்பு)

மேல்நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டியவை கொலை செய்த குற்றச்சாட்டில் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள மொஹமட் நியாஸ் நௌபர் தனது மகளின் திருமண வைபவத்தில் கலந்துகொள்ள நீதிமன்றத்தின் அனுமதிகோரி தனது சட்டத்தரணிக் கூடாக மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

மேல் நீதிமன்றத்தில் நடைபெறும் மற்றொரு வழக்கை விசாரிக்கும் மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷவிடம் இக்கோரிக்கையை நௌபர் முன்வைத்துள்ளார்.

1999 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கொழும்பு புதுக்கடையில் மொஹமட் பாருக் என்பவரை கொலை செய்வதற்காக சட்டவிரோதமாக கூடியமை தொடர்பாக மொஹமட் நியாஸ் நௌபர் சட்டமா அதிபரினால் குற்றம் சுமத்தப்பட்டுள்ளார்.

இந்நிலையில் மொஹமட் நியாஸ் நௌபர் தனது மகளின் திருமணத்தில் கலந்து கொள்வதற்கு அனுமதி கோரி சட்டத்தரணி ரவீந்திர சில்வாமூலம் மனுவை சமர்ப்பித்துள்ளார். இம்மனுவை ஆதரித்து வாதாடிய சட்டத்தரணி நிஹால் குணசிங்க மனிதாபிமான அடிப்படையில் நௌபர் இக்கோரிக்கையை விடுப்பதாக கூறினார்.

தற்போது நௌபர் போகம்பரை சிறையில் உள்ளதாகவும் அவரின் மகளுக்கு இஸ்லாமிய விதிமுறைகளின் படி திருமணம் நடைபெறவுள்ளதாகவும் சட்டத்தரணி நிஹால் குணசிங்க கூறினார். சம்பிரதாயங்களின்படி மணமகள் அவரின் தந்தையினால் மணமகனிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். எனவே நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ள திருமண வைபத்தில் கலந்து கொள்ள அவரை அனுமதிக்குமாறும் சட்டத்தரணி ஜயசிங்க நிஹால் கோரினார்.

சட்டமா அதிபர் சார்பாக ஆஜரான அரச சட்டத்தரணி துஷார குமாரகே குற்றஞ்சாட்டப்பட்ட நபர் நீதிபதி சரத் அம்பேபிட்டியவை கொலை செய்தவர் எனக் கூறியதுடன் இது தொடர்பாக நீதிமன்றமே தீர்மானத்தை மேற்கொள்ளுமாறும் கோரினார். இந்நிலையில் சிறைச்சாலை விதிமுறைகளின்படி செயற்பட்டு அதற்கேற்ப நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவிட்ட நீதிபதி சுனில் ராஜபக்ஷ குற்றஞ்சாட்டப்பட்ட இந்நபர் அவரது மகளின் திருமண வைபத்தில் கலந்து கொள்வதற்கான சாத்தியம் குறித்து ஆராயுமாறும் உத்தரவிட்டார். (ஶ்ரீ-2)

# சிறைச்சாலைகளை புனர்வாழ்வு முகாம்களாக மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

சிறைச்சாலைகள் என்ற பெயர் மாற்றம் செய்யப்பட்டு புனர்வாழ்வு முகாம்கள் என மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அறநெறிகளை பாதுகாக்கும் சமூகத்தினுள் சிறைச்சாலைகளை மூடிவிட முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாத்தறை சனத் ஜெயசூரிய மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற 11 தேசிய சிறைச்சாலைகள் தின நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெலிக்கடை சிறைச்சாலையில் எழுதப்பட்டுள்ள சிறைக்கைதிகளும் மனிதர்கள் என்ற வாசகத்தை அடிக்கடி காண்பதாகவும் அதன் உண்மைத் தன்மையை தாம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் உணர்ந்து கொண்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சிறையில் இருந்த போது தமது தாயாரின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்கும் அன்றைய ஆட்சியாளர் தமக்கு தடையேற்படுத்த முயற்சித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

பின்னர் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு திரும்பிய போது ஏனைய சிறைக்கைதிகள் தமக்கு அனுதாபங்களை தெரிவித்திருந்தமையையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நினைவு கூர்ந்தார். (ஶ்ரீ-4)

# கல்வி அதிகாரிகளுக்கு எதிராக முறைப்பாடு

(கொழும்பு)

2012 ஆம் ஆண்டுக்கான முதலாம் தர மாணவர்களை உள்வாங்கும் நடவடிக்கைகளின் போது சில அதிகாரிகள் முறைகேடாக செயற்படுவதாக முறைப்பாடு கிடைத்துள்ளதாகவும் அவர்கள் தொடர்பில் ஊழல் மற்றும் மோசடி ஆணைக்குழுவில் முறையிட முடியும் என கல்வியமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். இதேவேளை, அடுத்த வருடத்திற்கான பாடசாலை பாடப்புத்தகங்கள் பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் நாளை இடம்பெறும் என அமைச்சர் குறிப்பிட்டார். (ஶ்ரீ-4)

# ஐ.தே.கவுடன் இணைந்து செயற்படும் நோக்கமில்லை

## ஜே.வி.பி.தெரிவிப்பு

ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டு இணைந்து அரசாங்கத்தை கவிழ்க்கும் முயற்சிகளில் ஈடுபடப் போவதில்லை என ஜே.வி.பி.யின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியும் ஜே.வி.பி.யும் இணைந்து செயற்படவுள்ளதாக வெளியான செய்திகளில் எதுவித உண்மையும் கிடையாது.

வெளிநாடுகளுக்கு அடிபணிந்து கொள்ளையிடும் பொருளாதார முறைமையை ஐக்கிய தேசியக் கட்சியே நாட்டுக்கு அறிமுகம் செய்தது. ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் பாரியளவில் ஊழல் மோசடிகள் இடம்பெற்றதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

அவ்வாறான ஓர் கட்சியுடன் இணைந்து நாட்டை நல்லவழிப்படுத்தும் முயற்சிகளை மேற்கொள்ள முடியாது. மாற்று சமூகப் பொருளாதார முறைமையுடைய ஒரு ஆட்சியே தற்போது நாட்டுக்கு தேவைப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஶ்ரீ-2)

# ஆசிரியர்களுக்கான செயலமர்வு

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தமிழ்பாடம் கற்பிக்கும் அனைத்து தமிழ் பாட ஆசிரியர்களுக்குமான செயலமர்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8.30மணிக்கு மாங்குளம் ஆசிரியர் மூலவள பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இதில் ஆசிரியர்கள் வருகை தரும் போது 2 ஆம் தவணை தமிழ்பாட புள்ளிகள் மற்றும் க.பொ.த சாதாரண பரீட்சை எடுக்கவுள்ள மாணவர்களுக்கான அடைவு மட்டத்தை கூட்டுவதற்குரிய செயற்பாட்டு அறிக்கை என்பவற்றுடன் சமுகம் தருமாறு துணுக்காய் கல்வி வலய தமிழ்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கௌரிபுத்திரி கிருபாகரன் அறிவித்துள்ளார். (ஶ்ரீ-2-15)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## செருப்படை

**Botanical Name: Glinus lotoides**
**Family: Aiqoaceae**

ஓராண்டு வாழக்கூடிய தரையோடு படர்ந்து ஒட்டிவளரக் கூடிய செடி வகையாகும். செடியில் உரோம அமைப்புக்கள் காணப்படும். 3 அடி நீளமான தண்டுகள், அதிகளவான கிளைகள் விட்டுக் காணப்படும். இலைகள் எதிரிலை அடுக்கம் அல்லது போலியான ஒரே அச்சில் வட்டவடிவமான அமையப் பெற்றிருக்கும். சாம்பல்பூத்த பச்சைநிற இலைகள் காணப்படும். இலைகள் கோளவடிவில் அமைந்திருக்கும்.

பூக்கள் றோஸ் கலந்த வெண்ணிறம் அல்லது பச்சை நிறத்தில் காணப்படும். 5 வெட்டுக்களையுடைய கூடு வடிவப் பழங்கள், நிறைய விதைகளைக் கொண்டிருக்கும். இதில் இரு இனங்கள் உண்டு.

1.பெருஞ்செருப்படை

2.சிறுசெருப்படை


### பரம்பலும் இனவிருத்தியும்

விதைகள்மூலம் இனவிருத்தி செய்யலாம். சமவெளியான பிரதேசங்களில் மணற்பகுதிகளிலும் குளக்கரையோரங்களிலும் நீர்வற்றிய குளங்களிலும் வளர்கின்றது. உவர்மண் பிரதேசங்களில் இதன் பரம்பல் அதிகமாகும். வெயில் காலங்களில் தான் இச்செடியை கூடுதலாக காணக்கூடியதாக இருக்கும்.

### மருத்துவக் குணங்கள்

♦ இதன் இரு இனங்களான சிறுசெருப்படை, பெருஞ்செருப்படை ஆகிய இரண்டு இனங்களும் மருத்துவ குணமிக்கவை.

♦ இதன் மூலவேருடன் செடியை சேகரித்து முழுச்செடியையும் நன்கு கழுவி நிழலில் உலர்த்தி பொடித்து அரித்துவைத்துக் கொள்ளவும். இதில் ஒன்று தொடக்கம் இரண்டு கிராம் அளவு வெந்நீரில் தினம் 3வேளை சாப்பிட்டுவர வாதநோய்கள் தீரும். அல்லது இதன் முழுச்செடி ஒரு பங்கிற்கு 4 பங்கு நீர்விட்டு 1/4 பங்காக வற்றக்காய்ச்சி 30 தொடக்கம் 60 மில்லி அளவு காலை, மாலை குடிக்கக் கொடுக்க வாதநோய்கள் தீரும்.




♦ வேப்பப்பட்டைச்சாறு 2.5 மில்லி, பொன்னாங்காணிச் சாறு 5 மில்லி, செருப்படைச் சாறு 5 மில்லி கலந்து தேவையான அளவு தேனும் கலந்து கொடுக்க வரட்டு இருமல் நீங்கும்.

♦ சித்தர்கள் பெரும்பாலும் நீலநிறமலர்கள், கருமைநிறத்தண்டுகள், கருமைநிற இலைக் காம்பு உடைய கருமூலிகைகளை கற்பமாக பயன்படுத்தியுள்ளனர். கற்பமுறை எனில் உடல் கலங்களை அழிவிலிருந்து பாதுகாத்து நீண்டகாலம் இளமையாக வாழ்வதற்குரிய வழிமுறைச் சிகிச்சையாகும். அந்தவகையில் செருப்படையும் ஒரு கற்ப மூலிகையாகும். கருமூலிகைகள் கிடைக்காதவிடத்து சேராங்கொட்டைகளை (Semecarpusanacardium) பொடித்து உரமாக வைத்து கரு மூலிகைகளை பயிரிடும் முறையுமுண்டு.

♦ குன்மநோயிற்கு (வயிற்றுப்புண்) செருப்படை முழுச்செடியையும் சேகரித்து நன்கு கழுவி, அரைத்து 5 கிராம் அளவு எடுத்து மோரில் கலந்து தினமும் காலையில் அருந்த இந்நோய் தீரும்.

♦ செருப்படை இலை 5, தும்பை இலை 5, ஆடாதோடை இலை 3, துளசி இலை 10, தூதுவளை இலை 10 ஆகிய பத்து இலைகளை ஒன்று சேர்த்து இடித்து அதில் 5 கிராம் அதிமதுரத்தூள் சேர்த்து 300 மில்லி நீர்விட்டு 100மில்லியாக வற்றக் குடிநீர் காய்ச்சி தினமும் இருவேளை 50 மில்லிவீதம் குடிக்கக் கொடுக்க சளித்தொல்லை நீங்கும்.

♦ வாதநோய்களிற்கு வேர்க்கொம்பு, சீரகம், வெள்ளை மிளகு, செருப்படை முழுச்செடி (உலர்ந்தது) ஆகியவைகளை வகைக்கு ஒவ்வொன்றும் 5 கிராம் அளவு எடுத்து இடித்து தூள் செய்து தினசரி இருவேளை ஒன்று தொடக்கம் இரண்டு கிராம் அளவு 3 தொடக்கம் 5 நாட்கள்வரை சாப்பிட [illegible] நோய் தணியும்.

♦ செருப்படை [illegible] விளக்கெண்ணெய் அல்லது ஆமணக்கு நெய்விட்டு வதக்கி மூட்டுவலி, வீக்கம் முதலியவற்றில் வைத்துக்கட்ட இந்நோய் குணமாகும்.

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர் சித்த மருத்துவத்துறை
யாழ். பல்கலைக்கழகம் [illegible]

# சோமாலியாவில் பசி, பட்டினியால் தினமும் நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு

## ஐக்கிய நாடுகள் சபை தெரிவிப்பு



சோமாலியாவில் பசி மற்றும் பட்டினியால் தினமும் 100 இற்கும் மேற்பட்டோர் உயிரிழப்பதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

சோமாலியாவில் நிலவி வரும் கடுமையான பஞ்சத்தால் தினமும் உயிரிழப்போரில் பெண்கள் மற் றும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகம் இருப்பதாக கூறப்படுகின்றது.

இது குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான செயற்பாட்டாளர்கள் கருத்துத் தெரிவிக்கைகயில்,

சோமாலியாவில் 50 சதவீதமான மக்கள் பசி மற்றும் பட்டினியால் பாதிக்கப்பட்டுள்ளனர். சோமாலியாவின் ஆறு மண்டலங்களில் ஏற்பட்டுள்ள கடுமையான பஞ்சத்தால ஒரு நேர உணவு கூடக் கிடைக்காமல் ஆயிரக்கணக்கான மக்கள் தவித்து வருகின்றனர்.

இதில் தினமும் சுமார் 100 இற்குத் மேற்ட்ட மக்கள் உயிரிழந்து வருகின்றனர். பெண்களுக்கு சரியான உணவு கிடைக்காததால் பிறக்கும் போதே குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாடு கொண்டே பிறக்கின்றன.

இந்நிலையில் பட்டினியில் தவித்த ஆயிரக்கணக்கான மக்கள் கென்யாவுக்கு இடம் பெயர்ந்து வருகின்றனர். ஆனால் கென்யா எல்லைப் பகுதியில் வாழும் சிலர் உரிய தங்குமிடம், உணவு, குடிநீர் மற்றும் சுகாதார வசதிகள் இன்றி நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ளனர்.

அத்துடன் பட்டினி மற்றும் சுகாதார வசதிகள் இன்மையால் 75 சதவீதமானோர் வயிற்றுப்போக்கு மற்றும் வாந்திபேதி நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சோமாலியாவில் கடந்த மூன்று மாதங்களில் மட்டும் 30 ஆயிரம் மக்கள் இறந்துள்ளனர்.

சோமாலியாவின் தென்பகுதியில் வசிக்கும் முப்பது இலட்சம் மக்களின் நிலை கவலைக்கிடமாக உள்ளது எனத் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-4)

# குளோனிங் முறையில் பூனைகள் உருவாக்கம்

உலகில் முதன்முறையாக குளோனிங் முறையில் ஆடுகள் உருவாக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து தற்போது பூனைகள் உருவாகியுள்ளன. இந்த பூனைகள் மரபணு மாற்றப்பட்டுள்ளன. இவற்றில் உள்ள பெரும்பாலான மரபணு குரங்கில் இருந்து எடுத்துச் செலுத்தப்பட்டுள்ளது. அதற்கு டிரிம்ஷிப் என்று பெயர். இவை விலங்குகளை தாக்கும் எம்.ஜி.வி. எனப்படும் வைரஸ் தொற்று நோயில் இருந்து இவற்றை பாதுகாக்கும்.

குளோனிங் முறையில் 3 பூனைகள் பிறந்துள்ளன. அவை பச்சை நிறத்தில் உள்ளன. இந்த ஆராய்ச்சியின் மூலம் மனிதர்களை எயிட்ஸ் நோயில் இருந்து காப்பாற்றும் ஆராய்ச்சியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.

இந்த பூனைகளுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ள மரபணுக்களால் அவற்றுக்கு எப்.ஐ.வி. வைரஸ் நோய் தாக்கும் வாய்ப்பு இல்லை. அதுபோன்று எச்.ஐ.வி. வைரஸ் கிருமிகளில் இருந்து மனிதர்களை பாதுகாக்கவும் திட்டமிட்டுள்ளனர். அதற்கான ஆராய்ச்சி நடந்து வருகின்றது. (ஸ்ரீ-2)

# நைரோபியில் பெற்றோல் குழாய் வெடித்து 100பேர் உடல் கருகி பலி



கென்யா தலைநகர் நைரோபியில் பெற்றோல் குழாய் வெடித்ததில் ஏற்பட்ட தீ விபத்தில் நூற்றுக்கும் அதிகமானோர் உடல் கருகி உயிரிழந்தனர். நைரோபியின் மையப் பகுதியில் இருந்து விமான நிலையம் வரை பெற்றோல் குழாய் பாதிக்கப்பட்டுள்ளது.

இக்குழாய் லுங்கா லுங்கா என்ற தொழிற்சாலைப் பகுதி வழியாகச் செல்கிறது. இப்பகுதியில் சினாய் என்ற சேரிப்பகுதியும் உள்ளது. இங்கு நேற்று முன்தினம் திடீரென பெற்றோல் குழாய் வெடித்துத் தீப்பிடித்தது. அத்தீ பல இடங்களுக்கும் பரவ ஆரம்பித்தது. குழாய் வெடித்த இடத்தில் நின்றிருந்த பலர் தீயில் கருகிப்பலியாகினர்.

சினாய் பகுதியில் வெடிவிபத்து எற்பட்ட இடத்தில் பெற்றோல் குழாய் திறந்து கிடந்திருக்கிறது. அதில் இருந்து வெளியேறிய பெற்றோலைப் பிடிக்க அக்கம் பக்கத்து மக்கள் ஆர்வத்தில் கூடியுள்ளனர்.

அப்போது அக்குழாயில் சிகரெட் நெருப்புப் பொறி ஒன்று விழுந்ததால் வெடிவிபத்து நிகழ்ந்து இந்தக் கோர சம்பவம் நடந்திருக்கிறது என முதற்கட்ட விசாரணை அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இதுவரை 80 உடல்கள் மீட்கப்பட்ட நிலையில் மேலும் பலர் பலியாகியிருக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது. (ஸ்ரீ-4)

# லிபியாவில் இன்னும் 10 நாட்களில் இடைக்கால அரசு அமைக்கப்படும்

## பிரதமர் தெரிவிப்பு

இன்னும் 10 நாட்களில் லிபியாவில் இடைக்கால அரசு அமைக்கப்படும் என அந்நாட்டின் இடைக்கால பிரதமர் முகமது ஜிப்ரீல் தெரிவித்துள்ளார். இந்நிலையில் கடாபியின் மகன் சாடி அல் கடாபி அண்டை நாடான நைஜரில் தஞ்சம் புகுந்துள்ளார்.

லிபியாவில் முன்னாள் ஜனாதிபதி கடாபியை எதிர்த்து போராடிய எதிர்ப்பாளர்கள் வெற்றி பெற்ற பின் நாட்டின் கிழக்குப் பகுதியில் உள்ள பெங்காசியில் இயங்கி வரும் இடைக்கால அரசை தலைநகர் டிரிபோலிக்கு மாற்ற முயற்சி செய்தனர்.

இதன் முதல்படியாக இடைக்காலக் குழுத் தலைவர் முஸ்தபா ஜலில் கடந்த 10 ஆம் திகதி முதன் முறையாக டிரிபோலிக்கு வந்தார். தொடர்ந்து நேற்று முன்தினம் இடைக்கால பிரதமர் முகமது ஜிப்ரில் விடுத்த அறிக்கையில்,

இன்னும் 10 நாட்களில் இடைக்கால அரசு அமைக்கப்படும். டிரிபோலியின் அனைத்துப் பகுதி மக்களுக்கும் அதில் பிரதிநிதித்துவம் அளிக்கப்படும். தற்போது லிபியா எண்ணெய் உற்பத்தியை ஆரம்பித்துள்ளது.

இதற்கிடையில் பானி வாலித் நகரில் பதுங்கியிருந்ததாக கருதப்பட்ட கடாபியின் மற்றொரு மகன் சாடி அல் கடாபி நேற்று முன்தினம் அண்டை நாடான நைஜரில் தஞ்சம் புகுந்துள்ளார். இத்தகவலை நைஜர் நீதித்துறை அமைச்சர் உறுதிப்படுத்தியுள்ளார்.

அதேபோல் கடாபி ஆட்சியில் வெளிநாட்டு உளவுப் பிரிவின் தலைவராகச் செயற்பட்ட அபுஜாயித் டோர்டா கைது செய்யப்பட்டுள்ளார். இவர் 1990 இல் லிபியா பிரதமராகவும் 2003 இல் லிபியாவுக்கான ஐ.நா. தூதவராகவும் 2009 முதல் உளவுப் பிரிவின் தலைவராகவும் செயற்பட்டவர்.

இந்நிலையில் ஆபிரிக்காவின் மேற்குப் பகுதியில் உள்ள மிகச் சிறிய நாடான கினி பிசா கடாபி விரும்பினால் எங்கள் நாட்டுக்கு வரலாம் என அழைப்பு விடுத்துள்ளது. (ஸ்ரீ-4)






ஈரான் தலைநகர் தெஹ்ரானில் அந்நாட்டு ஜனாதிபதி முகமது அகமது நிஜாத்தை (வலது) பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசா கிலானி சந்தித்ததைப் படத்தில் காணலாம்

# 2011 ஆம் ஆண்டின் பிரபஞ்ச அழகியாக அங்கோலா அழகி லைலா தெரிவு

(சாபாவ்லோ)




2011 ஆம் ஆண்டிற்கான மிஸ் யுனிவர்ஸ் பட்டத்தை அங்கோலா நாட்டு அழகி லைலா லோபஸ் வென்றுள்ளார்.

பிரேசில் நாட்டில் சாபாவ்லோ நகரில் நடைபெற்ற பிரபஞ்ச அழகியை தெரிவு செய்வதற்கான இறுதிச்சுற்றுக்கு அவுஸ்திரேலியா, கோஸ்டாரிகா, பிரான்ஸ், உக்ரைன், போர்த்துக்கல், பனாமா, பிலிப்பைன்ஸ், அங்கோலா, சீனா, பிரேசில் ஆகிய 10 நாடுகளின் அழகிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

பின்னர் அவர்களிலிருந்து சீனா, அங்கோலா, பிலிப்பைன்ஸ், பிரேசில், உக்ரைன் ஆகிய 5 நாட்டு அழகிகள் தெரிவாகினர். அவர்களிடம் கேள்வி கேட்கப்பட்டது. அந்த பதிலின் அடிப்படையில் மிஸ் யுனிவர்ஸ் அழகி தெரிவு நடைபெற்றது.

இதில் அங்கோலா நாட்டு அழகி லைலா லோபஸ் வெற்றி பெற்று பட்டத்தை கைப்பற்றினார். இவருக்கு கடந்த ஆண்டு பட்டத்தை வென்ற மெக்சிக்கோ அழகி நவரத்தே மகுடம் சூட்டி வைத்தார்.

அத்துடன் உக்ரைன் நாட்டு அழகி ஒவிசியா 2 ஆவது இடத்தையும் பிரேசில் அழகி பிரிசிலா 3 ஆவது இடத்தையும் பிடித்தனர். பிலிப்பைன்ஸ் அழகி சுப்சுப் 4 ஆவது இடத்தையும் சீனா அழகி லூ 5 ஆவது இடத்தையும் பெற்றனர். இந்திய அழகி வாசுகி இறுதி சுற்றுக்கே வராமல் தோல்வியைத் தழுவினார்.

மிஸ் யூனிவர்ஸ் நடப்பாண்டின் 60 ஆவது ஆண்டை நிறைவு செய்துள்ளது. இந்த 60 ஆண்டு கால மிஸ் யுனிவர்ஸ் வரலாற்றில் இந்த ஆண்டு தான் சாதனை படைக்கும் வகையில் 89 நாட்டு அழகிகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## மும்பை குண்டுவெடிப்பு பயங்கரவாதி சிக்கினான்

மும்பை தொடர் குண்டுவெடிப்பில் தேடப்பட்ட பயங்கரவாதி ஒருவரை பயங்கரவாத தடுப்புப் படை பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

இவரை பொலிஸார் பலத்த பாதுகாப்புடன் மும்பை கொண்டு வருகின்றனர். கடந்த ஜூலையில் மக்கள் நடமாட்டம் உள்ள ஜாவேரி பஜார் ஒபேரா ஹவுஸ் மற்றும் தாதர் பகுதியில் தொடர் குண்டு வெடிப்பு சம்பவம் நடந்தது. இதில் 21 பேர் கொல்லப்பட்டனர். 100 இற்கும் மேற்பட்டோர் காயமுற்றனர். இந்த வழக்கில் முக்கிய தடயங்கள் எதுவும் கிடைக்காமல் பொலிஸார் திணறி வந்தனர். இரகசிய கமரா ஒன்று மட்டும் பெரும் துணையாக இருந்ததது. இந்த வழக்கில் தொடர்புடையதாக இந்தியன் முஜாகீதின் பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த முகம்மது அப்துல் ஷாக்கூர் (வயது 32), இவரது உறவுக்காரர் அயூப்ராஜா அமின் ஷாகின் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடம் துரித விசாரணை நடந்து வருகிறது.

இந்நிலையில் பொலிஸாரால் முக்கிய நபராக தேடப்பட்டு வந்த ஒருவர் நேற்று காலை குஜராத்தில் பதுங்கியிருந்த போது கைது செய்யப்பட்டான். (ஸ்ரீ-2)

# தயாநிதியிடம் விரைவில் விசாரணை; மத்திய புலனாய்வுத்துறை அறிவிப்பு

(புதுடில்லி)

ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில் நிகழ்ந்த முறைகேடு தொடர்பாக மேக்சிஸ் குரூப் நிறுவனத்தின் தலைமை அதிகாரி ரால்ப் மார்ஷலிடம் மத்திய புலனாய்வுத்துறை (சி.பி.ஐ) அதிகாரிகள் நேற்று முன்தினம் விசாரணை நடத்தினர்.

2ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில் நடந்த ஊழல் விவகாரம் விஸ்வரூபம் எடுத்ததை அடுத்து 2001 முதல் 2007 வரை நடந்த ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடுகள் தொடர்பாகவும் விசாரணை நடத்த உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. ஏர்செல் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் சிவசங்கரன் தனது நிறுவனத்தை மலேசியாவைச் சேர்ந்த மேக்சிஸ் நிறுவனத்துக்கு விற்பனை செய்யும்படி அப்போது தொலைத்தொடர்புத்துறை அமைச்சராக இருந்த தயாநிதி நெருக்கடி கொடுத்ததாக சி.பி.ஐ.யிடம் புகார் தெரிவித்திருந்தார்.



சிவசங்கரன் அளித்த புகாரில் என் நிறுவனத்துக்கு உரிமம் பெறுவதற்காக விண்ணப்பித்தபோது உரிமம் வழங்காமல் காலதாமதம் செய்தனர். ஏர்செல் நிறுவனத்தின் பங்குகளை மலேசியாவின் மேக்சிஸ் நிறுவனத்துக்கு விற்கும்படி நெருக்கடி கொடுத்தனர்.

இதைத் தொடர்ந்து ஏர்செல் நிறுவனத்தின் பங்குகள் மேக்சிஸ் நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட ஆறு மாதத்துக்குள் அந்த நிறுவனத்துக்கு உரிமம் வழங்கப்பட்டது என தெரிவித்திருந்தார். இந்த புகார் குறித்தும் சி.பி.ஐ. விசாரித்து வருகிறது.

இந்த வழக்குத் தொடர்பாக சி.பி.ஐ சார்பில் உச்ச நீதிமன்றில் விசாரணை நிலை அறிக்கை சமீபத்தில் தாக்கல் செய்யப்பட்டது. அதில் தயாநிதி பதவிக் காலத்தில் ஏர்செல் நிறுவனத்தின் புரோமோட்டருக்கு லெற்றர் ஒப் இன்டென்ட் வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டது என தெரிவிக்கப்பட்டு இருந்தது.

இதற்கிடையில் சி.பி.ஐ. மீது ஹசாரே குழுவைச் சேர்ந்த பிரசாந்த பூஷன் மனு ஒன்றை தாக்கல் செய்தார். அதில் தயாநிதி மீது உரிய வகையில் விசாரணை நடத்த உத்தரவிட வேண்டும் என தெரிவித்திருந்தார்.

இதைத் தொடர்ந்து சி.பி.ஐ. சார்பில் ஆஜரான வழக்கறிஞர் தயாநிதி மீதான விசாரணை தொடர்ந்து கொண்டு இருக்கிறது என தெரிவித்தார். இந்நிலையில் மேக்சிஸ் நிறுவனத்தின் போர்டு உறுப்பினரும் ஆஸ்ட்ரோ நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரியுமான ரால்ப் மார்ஷல் சி.பி.ஐ. அதிகாரிகள் முன் நேற்று முன்தினம் ஆஜராகி தன் மீதான புகார்கள் குறித்து விளக்கம் அளித்தார்.

தயாநிதி அமைச்சராக இருந்த போது மேக்சிஸ் நிறுவனத்துக்கு சலுகை காட்டப்பட்டதாகவும் அதற்கு பதிலாக மாறன் குடும்பத்துக்கு சொந்தமான சன் டி.வி.யில் மேக்சிஸ் நிறுவனம் சார்பில் முதலீடு செய்யப்பட்டதாகவும் கூறப்படும் புகார் குறித்து சி.பி.ஐ.அதிகாரிகள் ரால்ப் மார்ஷலிடம் விசாரித்தனர். இதைத் தொடர்ந்து இந்த புகார்கள் குறித்து தயாநிதியிடமும் விரைவில் விசாரணை நடத்தப் போவதாக சி.பி.ஐ. வட்டாரங்கள் தெரிவித்தன. (ஸ்ரீ-2)

# மு.க.அழகிரி கைது?



பரமக்குடியில் கடந்த 11 ஆம் திகதி ஏற்பட்ட கலவரத்தால் 7 பேர் உயிரிழந்துள்ளனர். 100 இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். இன்னும் 15 பேர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த மூன்று மாதங்களாக தமிழகம் முழுவதும் தி.மு.க.வினர் மீது அ.தி.மு.க. அரசு வழக்குப் பதிவு செய்து சிறையில் அடைத்தது. இந்நிலையில் கடந்த 11 ஆம் திகதி நடந்த கலவரத்தால் பொலிஸாரின் கவனமெல்லாம் கைது நடவடிக்கையை கைவிட்டு கலவர நடவடிக்கைக்கு சென்று விட்டதால் ஆளும்கட்சி மீது அதிருப்தி அலை உருவாகியுள்ளது. இந்நிலையில் ஆளும்கட்சி தரப்பில் கலவர விடயத்தை திசை திருப்புவதற்காக மத்திய அமைச்சர் மு.க.அழகிரி கைது நடவடிக்கை என செய்தியை பரவவிட்டு வதந்தி பரப்பப்பட்டுள்ளது.

இதனால் தென் மாவட்டங்களில் இருக்கும் தி.மு.க. பிரபலங்கள் எல்லாம் மு.க.அழகிரி ஆதரவாளர்களிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அண்ணன் கைது செய்தி என்பது உண்மைதானா என்று விசாரித்ததில் அப்படி ஒன்றும் இல்லை. அண்ணன் வீட்டில்தான் இருக்கிறார். இந்த வதந்தியை யாரும் நம்ப வேண்டாம் என மு.க.அழகிரி ஆதரவாளர்கள் தரப்பில் கூறப்பட்டது. (ஸ்ரீ-2)

# கடல் எல்லையை சுட்டிக்காட்டும் கருவியை கண்டுபிடித்த தமிழக மாணவர்களுக்கு தேசிய விருது

கடல் எல்லை தாண்டி மீன் பிடிப்பதால் ஏற்படும் பிரச்சினையைத் தவிர்க்க சென்னையைச் சேர்ந்த கல்லூரி மாணவர்களின் கண்டு பிடிப்புக்கு தேசிய அளவில் விருது கிடைத்துள்ளது.



கடல் எல்லை தாண்டி மீன்பிடிப்பதால் இந்திய மீனவர்கள் அடிக்கடி தாக்கப்படுவதும் மீன் வலைகள் அறுத்தெறியப்பட்டு சுட்டுக் கொல்லப்படுவதும் தொடர்கதையாகி வருகிறது. இதைத் தவிர்க்க சென்னை செயின்ட் ஜோசப் பொறியியல் கல்லூரி மாணவர்கள் நவீன் நெல்சன் இருதயராஜ், பிரின்சி பெர்பச் சுவா ஆகியோர் இணைந்து கடல் எல்லையை சுட்டிக்காட்டும் கருவியைக் கண்டுபிடித் துள்ளனர்.

இக்கருவி மூன்று பாகங்களைக் கொண்டது. முதல் பாகத்தில் எல்.சி.டி.திரையும் இரண்டாம் பாகத்தில் ஜி.பி.எஸ். அன்டனா மற்றும் ஜி.பி.எஸ் கருவியும் மூன்றாம் பாகத்தில் எரிபொருள் தடுப்பு கருவியும் உள்ளது.

ஜி.பி.எஸ். அன்டனா செயற்கைக்கோளில் இருந்து தகவல் பெற்று ஜி.பி.எஸ் டிவைசிற்கு அனுப்பும். அதிலுள்ள திரையின் மூலம் கடல் எல்லையில் பயணிக்கும் இடத்தை தெரிந்து கொள்ள முடியும். எல்.சி.டி. திரையில் மூன்று நிறங்கள் உள்ளன. இதில் மஞ்சள் நிறம் வந்தால் பாதுகாப்பான பகுதி. பச்சை நிறம் மீன்பிடிக்க தகுந்த பகுதி. சிவப்பு நிறம் வந்தால் ஆபத்தான பகுதி என்று அர்த்தம்.

சிவப்பு நிறம் வந்தால் அபாய ஒலி எழும். அபாய ஒலியை கேட்டதும் படகை மீன்பிடி பகுதி அல்லது பாதுகாப்பான பகுதிக்கு கொண்டு செல்ல வேண்டும். இல்லையென்றால் கடல் எல்லையை நெருங்குவதற்குள் என்ஜினுக்கு செல்லக் கூடிய எரிபொருளை கருவியின் மூன்றாம் பாகம் நிறுத்தி விடும். இதனால் குறிப்பிட்ட கடல் எல்லையை தாண்டவே முடியாது.

இக்கண்டுபிடிப்பு இந்தியன் நஷனல் அகடமி ஒப் என்ஜினியரிங் என்ற அமைப்பின் சார்பில் நடந்த அகில இந்திய அளவிலான பொறியியல் கல்லூரி மாணவர்களின் கண்டுபிடிப்புக்களுக்கான போட்டியில் சிறந்த கண்டுபிடிப்பு விருது பெற்றுள்ளது.

எதிர்வரும் ஒக்டோபரில் ஐதராபாத்தில் இப்பரிசு வழங்கப்படுகிறது. இது குறித்து விருது பெறும் மாணவர்கள் பத்திரிகைகளில் வந்த எங்கள் கண்டுபிடிப்பை பார்த்து ஆந்திர மாநில மீன் வளத்துறை எங்களை அழைத்துப் பேசியது.

ஆனால், தமிழர் நலனுக்காக நாங்கள் கண்டுபிடித்ததை யாருமே கண்டுகொள்ளாமல் இருப்பது மிகுந்த வேதனை அளிக்கிறது என்றனர். (ஸ்ரீ-2)

## பாரதச் செய்திகள்

# ஈழத்தமிழர்களின் வாழ்வுரிமையை மத்திய அரசு பெற்றுக் கொடுக்க வேண்டும்

## திராவிடர் கழகம் தீர்மானம் நிறைவேற்றம்

ஈழத்தமிழர்களின் வாழ்வுரிமையை மத்திய அரசு பெற்றுக்கொடுக்க வேண்டும் என திராவிடர் கழகம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

திருச்சியில் திராவிடர் கழக மாநில பொதுக் குழுக் கூட்டம் இடம்பெற்றது. திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி சிறப்பு விருந் தினராகக் கலந்துகொண்டு உரைநிகழ்த்தினார். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு,

அறிவியல் கண்ணோட்டத்துடன் சேது சமுத்திர கால்வாய் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். காவிரி நீர் பிரச்சினை, முல்லை பெரியாறு பிரச்சினை, பாலாற்றில் புதிய அணைகட்டுவது உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு மத்திய, மாநில அரசுகள் உடனடியாகத் தீர்வு காண வேண்டும்.

மத்திய அரசு உறுதியளித்தபடி ஈழத் தமிழர்கள் பிரச்சினையில் நேரடியாக தலையிட்டு அவர்களின் வாழ்வுரிமையைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். கச்சதீவில் தமிழக மீனவர்கள் மீன்பிடிக்கும் உரிமையைப் பெற்றுத்தர வேண்டும்.

மத்திய அரசு வேலைவாய்ப்பில் பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவீத இட ஒதுக்கீட்டை முறையாக அமுல்படுத்த வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (ஸ்ரீ-2)

# லோக்பால் வரம்புக்குள் நீதிபதிகள்; ஹசாரே குழுவினர் வலியுறுத்தல்

(புதுடில்லி)

நீதிபதிகளை விசாரிக்கும் அதிகாரம் லோக்பால் அமைப்புக்கு அளிக்கவேண்டும் என அன்னாஹசாரே குழுவில் உள்ளவர்கள் மீண்டும் வற்புறுத்தியுள்ளனர்.

ஊழலுக்கு எதிராகப் போராடி வரும் அன்னாஹசாரேயின் குழுவில் உள்ள பிரபல வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன் குறிப்பிடுகையில், ஊழல் செய்யும் நீதிபதிகளையும் விசாரிக்கும் அதிகாரம் லோக்பால் அமைப்புக்கு அளிக்கும்படி வற்புறுத்துகின்றோம்.

ஆனால், நீதிபதிகளை விசாரிப்பதற்குரிய தனி மசோதாவை கொண்டு வரப்போவதாக அரசு உறுதியளித்ததால் எங்கள் கோரிக்கையை வாபஸ் பெற்றோம். நீதித்துறை ஒழுங்கு மற்றும் பொறுப்பு மசோதா கடந்த ஆண்டு லோக்சபாவில் தாக்கல் செய்யப்பட்டது. ஆனால், இந்த மசோதா குறித்து நீதிபதிகளின் கருத்தைப் பாராளுமன்ற நிலைக் குழு விசாரிக்கவில்லை.

எனவே, எங்கள் வாக்குறுதியை நாங்கள் திரும்பப் பெற்றுக் கொள்கிறோம். லோக்பால் வரம்புக்குள் நீதிபதிகளையும் சேர்க்க வேண்டும் என மீண்டும் வற்புறுத்துகின்றோம் என்றார்.

முன்னாள் சட்டத்துறை அமைச்சரான சாந்திபூஷன் குறிப்பிடுகையில், நீதித்துறை ஒழுங்கு மற்றும் பொறுப்பு மசோதாவை என்ற போலி மசோதாவை காட்டி நாட்டை ஏமாற்றியுள்ளனர் என்றார். (ஸ்ரீ-2)

# அரசாங்கத்தின் மீன்பிடித்தடையால் மன்னார் மீனவர்கள் பெரும் பாதிப்பு

(கொழும்பு)

தென்பகுதியைச் சேர்ந்த மீனவர்களை வடபகுதிக் கடற்பரப்பில் மீன்பிடிக்க அனுமதிக்கும் அரசாங்கம் உள்ளூர் மீனவர்கள் அங்கு மீன்பிடியில் ஈடுபடுவதைத் தடுப்பதாக மன்னார் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

கற்பிட்டி மற்றும் புத்தளம் ஆகிய பிரதேசங்களிலிருந்து பெருங்கப்பல்களில் சென்று மன்னார் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடுவதை பாதுகாப்பு அமைச்சகம் அனுமதித்துள்ளது.

அதேவேளை, மீன்பிடியைப் பாரம்பரிய தொழிலாகக் கொண்டிருக்கும் உள்ளூர் மீனவர்கள் பாதுகாப்பு அமைச்சிடம் சிறப்பு அனுமதியைப் பெற்றே தொழிலில் ஈடுபட வேண்டியுள்ளது.

மன்னாரில் மீன்பிடியில் தடைகளை எதிர்கொண்டிருக்கும் 7800 குடும்பங்களைச் சேர்ந்த 31 ஆயிரம் மீனவத் தொழிலாளர்களின் நிலைமையை இலகுவாக்கும் வகையில் இழப்பீடு வழங்குமாறு அரசாங்கத்திடம் அவர்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. மாதாந்தம் 25 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டால் தாம் மீன்பிடித் தடை பற்றிக் கவலைகொள்ளப் போவதில்லை என மன்னாரைச் சேர்ந்த மீனவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் மீன்பிடித்தடையால் தமக்கு ஏற்பட்டுள்ள நிலைமைகளை விளக்கும் பொருட்டு தென்னிலங்கையைச் சேர்ந்த ஊடகவியலாளர்களை கடந்த சனியன்று மீனவர்கள் சந்தித்தனர். போரினால் பாதிக்கப்பட்ட மீனவக் குடும்பங்களுக்குரிய அடிப்படை வசதிகள் வழங்கப்படவில்லை எனவும் இச்சந்திப்பில் ஆதங்கம் வெளியிடப்பட்டுள்ளது.

தமது வேண்டுதல்களை நிறைவேற்ற அரசாங்கம் தவறுமானால் கடுமையான போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய நிலைக்குள் தாம் தள்ளப்படுவோம் எனவும் மீனவர்கள் கூறியுள்ளனர்.

மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாட்ன மேற்படி குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ளார். மேற்படி குற்றச்சாட்டுக்கள் தொடர்பான எவ்வித முறைப்பாடுகளும் தனக்குக் கிடைக்கப்பெறவில்லை எனத் தெரிவித்துள்ளார். தென்னிலங்கையைச் சேர்ந்த எந்தவொரு மீனவர்களும் வடபகுதியில் மீன்பிடிப்பதற்கு அனுமதிக்கபட்டாக பதிவு செய்யப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மன்னாரைச் சேர்ந்த மீனவர்கள் பாதுகாப்பு அமைச்சிடம் அனுமதி பெறவேண்டுமென்பதை மட்டும் அவர் ஒப்புக்கொண்டுள்ளார்.

இந்திய மீனவர் பிரச்சினை உட்பட பிரச்சினைகள் தொடர்பாக அரச தலைவர் பாதுகாப்பு அமைச்சகம் மற்றும் வெளியுறவு அமைச்சகத்திற்கு இடையிலான சந்திப்பு எதிர்வரும் 16ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக கூறப்படுகின்றது. (ஸ்ரீ-2)

## கொழும்பு மக்கள் வங்கி தலைமையகத்தில் விபத்து

(கொழும்பு)

கொழும்பு கோட்டையில் அமைந்துள்ள மக்கள் வங்கித் தலைமையகத்தின் 15ஆவது மாடியில் கொங்கிறீட் பகுதியொன்று நேற்று காலை இடிந்து விழுந்ததில் ஒருவர் படுகாயமடைந்தார் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

படுகாயமடைந்தவர் உடனடியாக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அவரது நிலை கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. இந்த விபத்துக் காரணமாக இரண்டு வாகனங்களின் கண்ணாடிகளுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## அமைச்சர் ஹக்கீம் கிர்கிஸ்தான் பயணம்

நீதியமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று முன்தினம் காலை திங்கட்கிழமை கிரிகிஸ்தான் சென்றுள்ளார். அங்கு அவர் அந்நாட்டு வெளிநாட்டு அமைச்சருடனும் உயர் அதிகாரிகளுடனும் கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளார்.

கடந்த சில நாட்களாக உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் பங்குபற்றி உரையாற்றி வந்த அமைச்சர் ஹக்கீம் நாடு திரும்பியதும் தமது பிரசார நடவடிக்கைகளை மாத்தளை, கல்முனை, நுவரெலியா, கொழும்பு, நீர்கொழும்பு உட்பட ஏனைய பிரதேசங்களிலும் மீண்டும் பிரசாரங்களைத் தொடர்வார். (ஸ்ரீ-4)

## இந்திய மீனவர்களின் ஊடுருவலை தடுப்பதற்கு அந்தமான் தீவில் பாதுகாப்பை பலப்படுத்த முடிவு

### அமைச்சர் ராஜித தெரிவிப்பு

இலங்கை கடற்பரப்புக்குள் இந்திய இழுவைப்படகு மீனவர்களின் ஊடுருவலை தடுப்பதற்கு அந்தமான் தீவுப் பகுதியில் கடற் பாதுகாப்பை பலப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக கடற்றொழில் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சர் ராஜித சேனாரத்தின தெரிவித்தார்.

பேசாலையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மீனவர் விடுதியை திறந்து வைத்து அங்கு நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இம் மாடிக் கட்டடமானது கனேடிய நிதியுதவியுடன் 100 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

மீன்பிடித்துறையை வட மாகாணத்தில் அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. டென்மார்க் அரசின் உதவியுடன் 720 கோடி ரூபா செலவில் இங்கு மீன்பிடித்துறைமுகம் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான மதிப்பீட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ் வருடத்துக்குள் இங்கு ஆழ்கடல் மீன்பிடி வசதிகள் செய்து கொடுக்கப்படும். முதலில் இவ்வசதி சங்கங்களுக்கு செய்து கொடுக்கப்படும். இதன்மூலம் இந்த மீனவ சமுதாயத்தை கட்டி எழுப்ப ஏதுவாக இருக்கும். இரண்டு வருட காலங்களுக்குள் மீன்பிடித்துறை ஐம்பது வீத வளர்ச்சியை காண வேண்டும் என்பதே எமது இலக்கு எனவும் தெரிவித்தார். (ஸ்ரீ-4)

## அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் பாடசாலை கட்டடங்கள் மீள் நிர்மாணம்




கடந்தகால யுத்தத்தினால் சேதமடைந்த மு/திருமுறிகண்டி இந்து வித்தியாலயம் கடந்த 2010ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மீளவும் ஆரம்பிக்கப்பட்டது.

இங்கு கற்கும் மாணவர்கள்இடிந்த கட்டடங்களிலும் தறப்பாள்களிலும் மிகுந்த சிரமத்தின் மத்தியில் ஒரு வருடகாலமாக தமது கல்வி நடவடிக்கைகளை தொடர்ந்தனர்.

இதனையடுத்து இவ்வாண்டின் முதலாம் தவணையில் யுனிசெப் நிறுவனத்தால் இரு கட்டடங்கள் திருத்தம் செய்யப்பட்டு வழங்கப்பட்டதுடன் தற்போது மூன்றாவது கட்டடம் சேவாலங்கா நிறுவனத்தின் உதவியுடன் திருத்தம் செய்யப்பட்டு துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் த.மேகநாதனால் கடந்த 12ஆம் திகதி திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது. அத்துடன் இவ்வருட இறுதிக்குள் பாடசாலையின் இருமாடிக் கட்டட வேலைகள் நிறைவுபெறும் என அதிபர் ஆ.சூசைநாதர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## முள்ளிக்குளம் மக்கள் நேற்று அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மன்னார் முள்ளிக்குளம் பிரதேசமக்களின் காணிகளை அரசாங்கம் பலவந்தமாக கைப்பற்றியுள்ளமைக்கு எதிராக நேற்று மன்னார் நகரில் அமைதியான ஆர்ப்பாட்டமும் சத்தியாக்கிரக போராட்டமும் நடைபெற்றது.

யுத்தம் நடைபெற்ற காலத்தில் இடம்பெயர்ந்து வேறு இடங்களில் தங்கியிருந்த முள்ளிக்குளம் மக்களை அங்கு மீண்டும் குடியேற அனுமதி வழங்காத அரசாங்கம் இலங்கை கடற்படையினருக்கு குடியிருப்புகளை அமைக்கவும் கடற்படை முகாமை ஏற்படுத்தவும் கிராமமக்களின் ஆயிரம் ஏக்கர் காணியை கையகப்படுத்தியுள்ளது.

அரசாங்கம் இராணுவத்தை பயன்படுத்தி தமது நிலங்களை கொள்ளையிட்டு வருவதாக நேற்று ஆர்ப்பாட்டதில் கலந்து கொண்ட மக்கள் தெரிவித்தனர். மன்னார் நகரில் ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டம் பேரணியாக மன்னார் மாவட்ட செயலகம் வரை சென்றது. (ஸ்ரீ-2)



தெற்கு மற்றும் மத்திய ஆசிய நடவடிக்கைகள் தொடர்பான அமெரிக்க துணை இராஜாங்கச் செயலாளர் ரொபேர்ட் ஓ பிளேக் தலைமையிலான அமெரிக்க பிரதிநிதிகள் குழுவினர் நேற்று யாழ்ப்பாணம் வருகைதந்தனர். இந்தக் குழுவினர் யாழ்ப்பாண மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் பிரதிநிதிகளை இணையத்தின் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர். இதில் ரெபோர்ட் ஓ பிளேக்கை இணையத்தின் பிரதிநிதிகள் வரவேற்பதையும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் கலந்துரையாடல் இடம்பெறுவதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:அலுவலகச் செய்தியாளர்)

வெல்லுக அறமும் மெய்ம்மையும்
பொறையும் மேக மேனியனும்.
– வில்லி பாரதம்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## கர்ணனின் உயிர் பிரிந்தது ஏன்?

செஞ்சோற்றுக் கடன் தீர்த்த கர்ணன் போர்க் களத்தில் வீழ்ந்து கிடக்கின்றான்.

அவனின் உடல் முழுவதும் அம்புகளின் துளை. சில அம்புகள் அவன் மீது அன்பு கொண்டவை போல அகல மனமின்றி இருந்தன.

போர்க் களத்தில் கிடக்கின்ற கர்ணனின் உயிர் பிரியவில்லை. அவன் செய்த கொடை – தர்மம் உயிரைக் காப்பாற்றுகிறது.

கர்ணனைக் கொல்லாமல் எதுவும் சாத்திய மாகாது என்பதை உணர்ந்த கண்ணன் திட்டம் தீட்டுகின்றான்.

போர்க் களத்தில் ஆவி அகத்தோ, புறத்தோ என்று புரியாமல் கிடக்கின்ற கர்ணனிடம் நீ செய்த புண்ணியத்தைத் தா என்று மாயக் கண்ணன் கேட்க, கர்ணன் தன் உடலைத் தைத்துக் கொண்டிருக்கும் அம்பை எடுத்து அதன் வழியே பாயும் குருதியால் தன் புண்ணியத்தை கண்ணனிடம் கொடுக்க, அந்தக் கணமே கர்ணனின் உயிர் பிரிகின்றது.

புண்ணியத்தைக் கொடுத்தால் மேலும் புண்ணியம் சேர்ந்து அது இரட்டிப்பாகி கர்ணனின் உயிரைக் காப்பாற்றியல்லவா இருக்க வேண்டும் என்று வாதிடுவோரும் உள்ளனர்.

இது தொடர்பில் ஞானபூமி என்ற சஞ்சிகையில் நீண்டதொரு விவாதம் நடந்தது.

இவ்விவாதத்தில் காஞ்சிப் பெரியவரும் கருத்துத் தெரிவித்தார்.

போர்க்களத்தில் வீழ்ந்து கிடக்கின்ற கர்ணனின் ஆத்மா முத்தி இன்பம் பெறுவதற்கு அவனின் புண்ணியம் போதாமல் இருந்தது. எனவேதான் கண்ண பரமாத்மா அவனுக்கு மோட்சம் கொடுக்க விரும்பி உயிர் பிரியும்காலை அவன் செய்த புண்ணியத்தை தானமாகப் பெற்று குறை நிலையில் இருந்த புண்ணியத்தை உயர்த்தி விட்டான். அந்தக் கணமே கர்ணனின் ஆத்மா முத்தி இன்பம் பெற்றது என்றார்.

இதனை மாணவர்களுக்குக் கூறிக்கொண்டிருந்த போது, ஒரு மாணவன் இடைமறித்து சேர், ஒரு சந்தேகம் என்றான்.

என்ன? என்றேன்.

இலங்கை செய்த போர்க் குற்றத்தை ஐ.நா. சபை விசாரணை செய்யாதற்கு காரணம் என்ன என்று கேட்டான்.

மாணவனின் கேள்வியால் அதிர்ந்து போனேன். ஆபத்தான கேள்வி என்பதால் மௌனம் சாதித்தேன்.

என்ன சேர், இது மிகவும் இலகுவானது. இலங்கைக்கு தண்டனை கிடைப்பதற்கு இன்னும் கொஞ்சப் பாவம் போதாமல் இருக்கிறது. அது விரைவில் கிடைத்ததும் விசாரணை ஆரம்பிக்கப்படும்.

அங்கு கர்ணனுக்கு புண்ணியம் போதாதது போல இங்கு இலங்கைக்கு கொஞ்சம் பாவம் போதாது.

கர்ணனின் விடயத்தை எப்படி கண்ணன் சமாளித்தானோ அது போல உரிய நேரத்தில் இலங்கைக்கும் உரியதைக் கொடுக்காமல் அந்தக் கண்ணன் விடான் என்றான் மாணவன்.

மாணவனின் இந்தப் பதிலால் சித்தம் கலங்கியது. ஓ! அதுதான் சங்கதியோ. பொறுத்திருந்து பார்ப்போம்.

# பாகிஸ்தானில் டெங்கு ஒழிப்புக்கு இலங்கையிலிருந்து நிபுணர் குழு

பாகிஸ்தானில் டெங்கு நோயினை ஒழிப்பதற்கு தேவையான உதவிகளை வழங்குதற்காக பதினொரு நிபுணர்களை கொண்ட இலங்கை குழுவொன்று நேற்று பாகிஸ்தான் புறப்பட்டது.

சுமார் 10 தொடக்கம் 15 நாட்கள் பாகிஸ்தானில் தங்கவுள்ள இக்குழுவினர் பாகிஸ்தான் அதிகாரிகளுக்கு டெங்கு நோய் ஒழிப்பு தொடர்பிலான பயிற்சிகளை வழங்கவுள்ளனர். அத்துடன் இதற்கு மேலதிகமாக டெங்கு நோய் ஒழிப்புக்கான இயந்திரங்களை பயன்படுத்துவது தொடர்பிலான பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன.

கொழும்பிலுள்ள பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயத்தின் ஊடாக பாகிஸ்தான் அரசாங்கம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்கவே இத்தூதுக் குழு பாகிஸ்தான் செல்கிறது.

இத் தூதுக் குழுவினரின் விஜயம் தொடர்பில் கொழும்பிலுள்ள பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் சீமா இலாகி பாலுச், சுகாதார அமைச்சர் மைத்திரி பால சிறிசேனவுடன் சந்திப்பொன்றை மேற்கொண்டுள்ளார். இச்சந்திப்பில் சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச் எம். பௌசியும் கலந்துகொண்டார்.

பாகிஸ்தானின் பஞ்சாப் மாநிலத்தில் டெங்கு நோய் பரவியதையடுத்தே இந்த குழுவினர் அங்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

# அவசரகாலச் சட்ட நீக்கம் இலங்கையை காப்பாற்றும் என கூறமுடியாது-சுமந்திரன்

(கொழும்பு)

சர்வதேசத்தின் அழுத்தம் காரணமாக அவசரகாலச் சட்டத்தை அரசாங்கம் நீக்கிவிட்டாலும் அது ஜெனீவா கூட்டத் தொடரிலிருந்து இலங்கையை காப்பாற்றும் என்று கூறமுடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டாலும் கூட சுமுகமானதொரு நிலை ஏற்படுவதைத் தடுக்கும் முகமாகவே பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்குள் அதன் சரத்துகள் உட்படுத்தப்பட்டுள்ளது எனவும் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பொதுஜன பாதுகாப்புச் சட்டம் என்பதன் கீழ் இரண்டாவது பகுதி நடைமுறைக்கு கொண்டுவருவதைத்தான் அவசரகாலச்சட்டம் என்கிறோம்.

அதனை நடைமுறைக்கு கொண்டுவருவதற்கு ஜனாதிபதி ஒரு பிரகடனம் செய்து அந்தப் பிரகடனம் பத்து நாட்களுக்குள் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட வேண்டும். அது ஒரு மாத காலத்துக்கு வலுவுள்ளதாக இருக்கும்.

அந்த ஒரு மாத காலத்துக்குள் ஜனாதிபதி இன்னொரு பிரகடனத்தைச் செய்ய வேண்டும். அந்த இரண்டாவது பிரகடனத்தையும் பாராளுமன்றத்தில் பத்து நாட்களுக்குள் அங்கீகரிக்க வேண்டும். அப்படியாக ஒவ்வொரு மாதமும் நீடிக்கப்படுவதால் அவசரகாலச் சட்டம் தொடர்ந்து கொண்டிருக்கும். இவ்வாறு நீடிக்கப்படாவிட்டால் பொதுஜன பாதுகாப்புச் சட்டத்தின் இரண்டாம் பகுதி வலுவற்றதாக மாறிவிடும்.

இது அமுலில் இருக்கும் காலத்தில் அதற்கு கீழ் சில சட்ட விதிகளை ஜனாதிபதி உருவாக்கலாம். இதனை உருவாக்கும் போது அந்த விதிகள் பாராளுமன்றத்தில் இயற்றப்படும் சட்டத்தைப் போலவே வலுவுள்ளதாக இருக்கும். ஆகவே இவ்வாறான சட்டவிதிகள் 2005-ம் ஆண்டிலே உருவாக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து வேறு தருணங்களில் வெவ்வேறு காரியங்களில் வேறு சட்டவிதிகளும் உருவாக்கப்பட்டது. அவை கடந்த ஆகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி வரை அமுலில் இருந்தது.

அவசரகாலச் சட்டம் நீடிக்கப்படாமல் பகுதி -2 வலுவிழக்கும் போது அதன் கீழ் செய்யப்பட்ட இந்தச் சட்டவிதிகளும் வலுவிழந்து போய்விடும். அவசரகாலச் சட்டத்தைப்போல அல்லாது பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் ஏற்கெனவே இருக்கின்ற பகுதிகளுக்கு ஓர் உருவம் கொடுப்பதற்கு தேவைப்பட்டால் விதிகளை இயற்றலாம். ஆனால் அவசரகாலச் சட்டம் வலுவிழக்கின்ற போது அந்த 27ஆம் பிரிவை உபயோகித்து அதற்கு கீழ் எந்தெந்த சட்டவிதிகள் வலுவிழக்கின்றனவோ அவற்றை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் கீழ் சட்டவிதிகளாக அறிவித்துள்ளனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இருக்கப் போகின்ற சட்டவிதிகளுடன் இந்தச் சட்டத்தை நிரந்தரமாகவே இப்போது உருவாக்கி இருக்கின்றார்கள். தடுப்புக் காவலில் இருக்கின்றவர்கள் விசாரணை இல்லாமல் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படாமல் தொடர்ச்சியாக காவலில் வைத்திருப்பதற்கு இது உதவுகின்றது. ஆகவே இது மக்களுக்கு மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தும்.

அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தை நீக்க வேண்டியநிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியது. ஏனெனில் தற்போது ஜெனிவாவில் நடக்கும் மனித உரிமைப் பேரவைக் கூட்டத்தில் நாங்கள் அவசரகாலச் சட்டத்தை நீக்கிவிட்டோம் என்பதை அறிவிக்க முனைகிறார்கள்.

ஆகையாலேயே அவசரகாலச் சட்டத்தை நீக்கியுள்ளார்கள். அதனை அங்கு சொல்லவும் போகிறார்கள். ஆனால் உண்மையாகவே அது நீக்கப்படவில்லை. இப்படியான சட்டத்தினூடாக அவர்கள் பிடித்திருக்கும் பிடியை கொஞ்சம் கூட தளரவிடாமல் இருப்பதுதான் அவர்களது நோக்கம். ஆனால் வெளியுலகுக்கு தாங்கள் அவசரகாலச் சட்டத்தை நீக்கி விட்டோம் என்று சொல்ல வேண்டிய தேவையும் உள்ளது.

சர்வதேசத்தின் பல்வேறு அழுத்தம் காரணமாகத்தான் அரசாங்கம் சில காரியங்களைச் செய்வது தெளிவாகத் தெரிகின்றது. இப்போது நடக்கும் கூட்டத் தொடரில் இலங்கையைப் பற்றிய விடயம் எடுக்கப்போகும் போது தாங்கள் செய்திருக்கும் பல கருமங்களை சொல்வதற்கு அவர்கள் தயாராகி உள்ளனர். இவ்வாறு அவர்கள் சொல்ல முயற்சிப்பது பிரயோசனமற்றதாகவே உள்ளது.

இத்தருணத்தில் இலங்கைக்கு எதிராக பலர் எதிர்பார்ப்பதுபோல் எதுவும் நடக்கும் என்று கூற முடியாது. ஆனால் இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் சம்பந்தமான பல சம்பாஷணைகள் இடம்பெறும் என நாங்கள் நினைக்கிறோம் என்றார். (ந-5)

## நீதிமன்றத்தால் அபராதம்

(கிளிநொச்சி)

மதுபோதையிலும் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றியும் மோட்டார் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதிபதி பெ.சிவகுமார் குறித்த நபர் குற்றவாளியெனக் கண்டு 8 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் இரண்டு மாத சாதாரண சிறைத் தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

---

மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பெயரில் நபரொருவர் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதிபதி பெ.சிவகுமார் குறித்த நபர் குற்றவாளியெனக் கண்டு 8 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் இரண்டு மாத சாதாரண சிறைத் தண்டனையும் வழங்கியதோடு ஒருமாத காலத்திற்கு சாரதி அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. (ஶ்ரீ-3-12-24)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

### மானிடன் தெய்வமாதல்



நேர்மையுடன் நில்லுங்கள். தைரியமாக இருங்கள். சற்றும் பிறதாழ நீதிமானாக இருங்கள். தோல்வி கண்ட இடத்தும் துவளாமல் இருங்கள். முழு வளர்ச்சிபெற்ற உள்ளத்தவர்களாக முழு மனிதனாகத் திகழுங்கள். சமயக் கொள்கைகளைப் பற்றி சற்றும் கவலையுற வேண்டியதில்லை. கோழைகளே குற்றம் இழைப்பவர்கள் தீரர்கள், ஆண்மையுடையவர்கள் என்றும் மனதளவில் கூட தவறு செய்யமாட்டார்கள். எல்லோரிடத்தும் அன்போடு பழகுங்கள். முதலில் உங்களை மனிதனாக்கிக் கொள்வீர்களாக. அதன் பின்னர் உங்கள் கவனிப்பில் இருப்போரை வீரர்களாகவும் தீரர்களாகவும் இரக்கம் உடையவர்களாகவும் மாற்ற முயலலாம். உங்களுக்கு வேண்டியது சமயமல்ல. வேண்டியதெல்லாம் ஒழுக்கமும் ஆண்மையும் தாம். கோழைத்தனம் இன்மை, பாவமின்மை, பலவீனம் இன்மை இவையே தேவை. மற்றவை தாமாகவே உங்களைத் தேடி வரும். உள்ளத்தைக் தூண்டிக் கூடிய உணர்ச்சியை எழுப்பக்கூடிய கேளிக்கை, களியாட்டங்களுக்குச் செல்ல வேண்டாம். நாடக மேடைகளை நாட வேண்டாம்.

# தேசிய மருந்துக் கொள்கை ஜனவரியில் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு 3 ஆயிரம் வகையான மருந்துப் பொருட்கள் தேவைப்படுகின்ற போதிலும் வருடந்தோறும் 10ஆயிரம் வரையான மருந்துப் பொருட்கள் தேவைக்கதிகமாக இறக்குமதி செய்யப்படுவதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது,

சர்வதேச மருந்துக் கொள்கைக்கமையவே இலங்கையில் மருந்து வகைகள் பயன்படுத்தப்படுகின்றன. இலங்கைக்கு 3 ஆயிரம் மருந்துவகைகளே தேவையாகவுள்ளன. இருப்பினும் 40ஆயிரம் வகையான மருந்துப் பொருட்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு வருடமும் 10 ஆயிரம் வகையான மருந்துப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன.

மருந்துப் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் ஒரே வகையான மருத்துவப் பெயருடைய மருந்துப் பொருட்களுக்கு வேறுபட்ட வர்த்தகப் பெயர்களை வைத்துள்ளன. இதனால் ஒரே வகையான மருந்துகள் பல்வேறு பெயர்களில் வித்தியாசமான விலைகளில் சந்தையில் விற்கப்படுவதனால் நோயாளிகளை மாத்திரமன்றி வைத்தியர்களையும் குழப்ப நிலைக்கு உள்ளாக்கியுள்ளது.



இத்தகைய வேறுபாடுகளைத் தவிர்ப்பதற்காக தேசிய மருந்துக் கொள்கையொன்று இன்னும் 4 மாதங்களில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்வதற்காக வருடந்தோறும் 12 பில்லியன் ரூபா செலவிடப்படுவதாகவும் இதன் தொகை 2012ஆம் ஆண்டில் 15 பில்லியன் ரூபாவாக அதிகரிக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-4)

## சர்வோதய நிறுவனத்தின் நிதியுதவியுடன் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் 100 அரை நிரந்தர வீடுகள் அமைப்பு

(கிளிநொச்சி)

சர்வோதய நிறுவனத்தின் நிதியுதவியுடன் கிளிநொச்சி மாவட்ட பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட புலோப்பளை கிழக்கு, புலோப்பளை மேற்கு, தம் பகாமம் ஆகிய கிராமங்களிலுள்ள 100 குடும்பங்களுக்கு அரை நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளதாக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் ரி.முகுந்தன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

மேற்குறித்த கிராமங்களில் மீளக்குடியமர்ந்து வறுமைக்கோட்டின் கீழுள்ள குடும்பங்களுக்கே இவ்வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளதோடு இன்று புதன்கிழமை இவ்வீட்டுத்திட்ட வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஏனைய வீட்டுத்திட்டங்களானது கூடிய அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கும் விதவைகளுக்கும் விசேட தேவையுடையோருக்குமே அமைத்துக் கொடுக்கப்பட்டது. இவ்வீட்டுத்திட்டம் தனித்திருப்பவர்களுக்கும் வயோதிபர்களுக்கும் முன்னுரிமை கொடுக்கப்பட்டு அமைத்துக் கொடுக்கப்படவுள்ளதென அவர் தெரிவித்தார்.

ஒரு குடும்பத்திற்கு வீடு அமைப்பதற்கு ஒரு இலட்சத்து 90 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இவ்வீடுகளில் இரண்டு அறைகள் மட்டும் பூர்த்தியாக்கப்படுமெனவும் ஏனையவை பயனாளிகளின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-3)

## தொடர்ச்சியான மின்வெட்டால் மக்கள் பெரும் சிரமம்

(கரவெட்டி)

வடமராட்சியில் முன் அறிவித்தலின்றி தொடர்ச்சியாக மின்வெட்டு இடம்பெறுவதனால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, வடமராட்சிப் பிரதேசத்தின் பல இடங்களிலும் இரவு 6 மணி தொடக்கம் இரவு 8.30 மணிக்கு இடைப்பட்ட நேரங்களில் இவ்வாறு மின்வெட்டுக்கள் இடம் பெறுவதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதனைக் கருத்திற் கொண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென மக்கள் கேட்டுக் கொள்கின்றனர். (ஸ்ரீ-12-24)

## 400 மாணவர்களுக்கு யாழ். தாதியர் பயிற்சி கல்லூரியில் பயிற்சியளிக்க நடவடிக்கை

### அமைச்சர் அங்கீகாரம் பெற முடிவு

(கொழும்பு)

அண்மையில் நடந்து முடிந்த தாதியர் மாணவர்களுக்கான பரீட்சை மற்றும் நேர்முகத் தேர்வுகளில் தகுதி பெற்ற 400 மாணவர்களுக்கு யாழ். தாதியர் கல்விக் கல்லூரியில் பயிற்சியளிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்கவுள்ளது.

சுகாதார அமைச்சில் நேற்று நடைபெற்ற உயர்மட்ட கலந்துரையாடல் ஒன்றில் இதற்கான இணக்கம் காணப்பட்டது.

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகள் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

மருத்தாளர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பில் கலந்துரையாடப்பட்ட போது ஐம்பது மருந்து கலவையாளர்களுக்கு விசேட பயிற்சி வழங்கப்பட்டு அவர்களை உள்ளக நோயாளர் பிரிவுகளிலுள்ள மருந்தகங்களில் கடமையாற்றுவதற்கு அனுமதிப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

புதிதாக உள்ளக பயிற்சி முடித்து வெளியேறும் வைத்தியர்களில் 20 வைத்தியர்களை யாழ். போதனா வைத்தியசாலைக்கும் 24 பேரை மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் திணைக்களத்திற்கு வழங்குவதற்கும் குடும்பநல சுகாதார உத்தியோகத்தர்கள் எழுபது பேருக்கு பயிற்சிகளை வழங்குவதற்கும் கதிர்படவியல் சிகிச்சை நிபுணர் மற்றும் இழைய நோயியல் சிகிச்சை நிபுணர்களை நியமிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

வடமாகாண ஆளுநர் தனக்கு கிடைக்கும் 14 அம்புலன்ஸ் வண்டிகளை தற்போதைக்கு மாற்று ஏற்பாடாக போதனா வைத்தியசாலைக்கு வழங்குவதாகத் தெரிவித்தார். வைத்தியர்கள் மற்றும் தாதியர்களுக்கான விடுதிகளை அமைப்பதற்கு 2012ஆம் ஆண்டிற்கான பாதீட்டில் முன்னுரிமை வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டது.

யாழ். போதனா வைத்தியசாலையில் கதிர் படவியல் அலகு ஒன்றை நிர்மாணிப்பதற்கு சுவீடன் நாட்டு செஞ்சிலுவை சங்கம் இணங்கியுள்ளது. இது சம்பந்தமான கோரிக்கைகளை சுகாதார அமைச்சின் ஊடாக அனுப்பி வைக்குமாறு சுகாதார பணிப்பாளரை சுகாதார அமைச்சர் கேட்டுக் கொண்டார். (ஸ்ரீ-2)

## சாரதி அனுமதிப்பத்திர பரீட்சை

கிளிநொச்சி மாவட்டச் செயலகம் ஊடாக சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பித்து கடந்த 2011ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14 ஆம் திகதிக்கு முன்னர் இடம்பெற்ற எழுத்து பரீட்சைகளில் சித்தியடைந்தவர்களுக்கான ஓட்டுநர் பரீட்சார்த்த பரீட்சை நாளை வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

அத்துடன் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை எழுத்துப் பரீட்சைக்காக விண்ணப்பித்தவர்களிற்கான பரீட்சை உரிய நேர ஒழுங்கில் இடம்பெறும் என கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

ASIAN Mega COMPUTER SCHOLARSHIP — Win 75%

G.C.E. உயர்தர பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான விசேட சிறப்புச் சலுகை

மெகா இலவச புலமைப் பரிசில் பரீட்சை கடந்த 11 ஆண்டுகளாக (Sept. 2000 ஆண்டு முதல்) ஏசியன் கொம்ப்யூட்டர்ஸால் அறிமுகப்படுத்தப்பட்டு நடாத்தப்படுகிறது. இவ்வாண்டும் தகவல் தொழில்நுட்பம், கிராபிக்ஸ் அனிமேஷன், மல்டிமீடியா, இணைய வடிவமைப்பு, டலி கணக்கியல், ஹாட்வேயார் மற்றும் ஆங்கில பேச்சுப்பயிற்சிகளுக்கான புதிய பாடநெறிகளுடன் இப்புலமைப்பரிசில் கணனி ஆர்வலர்கள் அனைவருக்கும் வழங்கப்படுகிறது.

இலவச புலமைப்பரிசில்

- பரீட்சையை தமிழ் or ஆங்கிலத்தில் எழுதலாம்
- அடிப்படைத் தகைமை G.C.E. (O/L)
- வினாத்தாள் 50 நிமிடங்கள் மட்டுமே
- பாடசாலைப் பாடத்திட்டம் & பொது அறிவு வினாக்கள்
- இலவச பாடநூல்கள் (இந்தியா & இலங்கை)
- தவணைமுறை கட்டண வசதி (Installment)
- சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள்

செப்டெம்பர் 18 ஞாயிறு

படிப்பின் முக்கியமான தருணங்களில் சிறந்ததை தெரிவு செய்யுங்கள் !

ஸ்கொலர்ஷிப் மூலம் சேர்ந்து படிப்பது, படிப்பிற்கான உங்கள் செலவைக் குறைப்பதாகும்.



இலவச அனுமதிகளுக்கு..

ASIAN COMPUTERS

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி |
|---|---|---|
| 2G ஸ்ரான்லி வீதி | கொடிகாமம் வீதி | 230- 1ம் மாடி கண்டி வீதி |
| 021-2225677 | 021-2262399 | 021-2270267 |

STUDY IN UK / POLAND / CANADA

OCT / NOV INTAKE

- SPOT ADMISSION
- 100% Visa உத்தரவாதம்
- IELTS தேவையில்லை
- O/L தகைமை போதுமானது
- Visa பெற்ற பின் College cash செலுத்தும் வசதி
- அனுமதிகளுக்கு முன் கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளுங்கள்
- நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம்
- 32 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு General Visites Visa அனுபவம்வாய்ந்த சட்டத்தரணிகளால் மேற்கொள்ளப்படும்.

மேலதிக விபரங்களுக்கு:-

ISC LANKA (PVT) LTD

NO. 533, RASAVINTHODDAM JUNCTION, JAFFNA.

தொடர்புகளுக்கு K. RAJITHA 077 3745447

HEAD OFFICE
109 - CRISTIN ROAD
BRAVILLE
MIKT 137 BP
MILTON KEYMS UK

(C-4427)

# யு.எஸ்.ஓபன் டென்னிஸ் தொடர்; முதன்முறையாக சம்பியனானார் ஸ்டோசர்



(நியூயோர்க்)

யு.எஸ். ஓபன் டென்னிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவில் அவுஸ்ரேலியாவின் சமந்தா ஸ்டோசர் முதன்முறையாக சம்பியனாகி சாதித்தார்.

அமெரிக்காவின் நியூயோர்க்கில் கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற யு.எஸ்.ஓபன் டென்னிஸ் தொடர் நடக்கிறது. இதன் பெண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டியில் மூன்று முறை யு.எஸ். ஓபனில் சம்பியனான அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ், அவுஸ்ரேலியாவின் சமந்தா ஸ்டோசரை எதிர்கொண்டார்.

இதில் அபாரமாக ஆடிய ஸ்டோசர், முதல் செட்டை 6:2 என மிகச் சுலபமாக கைப்பற்றினார். இரண்டாவது செட்டில் எழுச்சி பெறுவார் என எதிர்பார்க்கப்பட்ட செரினா 3:6 என கோட்டை விட்டார். இறுதியில் ஸ்டோசர் 6:2, 6:3 என்ற நேர் செட்டில் மிக எளிதாக வெற்றி பெற்று முதன்முறையாக சம்பியனானார்.

இது இவரது முதலாவது கிராண்ட்ஸ்லாம் பட்டம். தவிர யு.எஸ். ஓபனில் பட்டம் வென்ற இரண்டாவது அவுஸ்ரேலிய வீராங்கனை என்ற பெருமை பெற்றார். முன்னதாக மார்கரட் கோர்ட், ஐந்து முறை (1962, 65, 69, 70, 73) சம்பியன் வென்றிருந்தார்.

இது குறித்து சுமந்தா கூறுகையில்,

முதன்முறையாக கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றது மகிழ்ச்சி அளிக்கிறது. இதன் மூலம் எனது நீண்ட நாள் கனவு நனவானது. செரினாவுக்கு எதிரான இறுதிப்போட்டி சவாலானதாக இருந்தது. இருப்பினும் இந்த நாள் எனக்குரியதாக இருந்ததால் வெற்றி பெற முடிந்தது என்றார்.

**செரினா ஏமாற்றம்**

ஒற்றையர் இறுதிப் போட்டியில் தோல்வி கண்ட அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ், இந்த ஆண்டு ஒரு கிராண்ட்ஸ்லாம் பட்டம் கூட பெறவில்லை. காயம் காரணமாக அவுஸ்ரேலிய ஓபன் மற்றும் பிரெஞ்ச் ஓபனில் விளையாடாத இவர், விம்பிள்டன் தொடரில் நான்காவது சுற்றுவரை முன்னேறினார்.

இது குறித்து செரினா கூறுகையில், அரையிறுதிக்கும், இறுதிப்போட்டிக்கும் போதிய இடைவெளி இல்லாததால் மிகவும் சோர்வடைந்தேன். இருப்பினும் சமந்தா ஆட்டம் மெய்சிலிர்க்க வைத்தது. அருமையாக விளையாடிய இவர் பட்டம் வெல்ல முழுத் தகுதியுடன் காணப்பட்டார் என்றார்.

**ரேமண்ட்-ஹூபர் சம்பியன்**

பெண்கள் இரட்டையர் இறுதிப் போட்டியில் அமெரிக்காவின் லீசா ரேமண்ட், லிசல் ஹூபர் ஜோடி அமெரிக்காவின் வானியா கிங், கஜகஸ்தானின் யாரோஸ்லாவா ஷிவ்தோவா ஜோடியை சந்தித்தது. இதில் ரேமண்ட்-ஹூபர் ஜோடி 4:6,7:6,7:6 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது.

**நடுவருடன் செரினா மோதல்**

கடந்த 2009 யு.எஸ். ஓபன் தொடர் அரையிறுதியில் கோட்டு நடுவருடன் சண்டையிட்டு சர்ச்சை ஏற்படுத்தினார் செரினா. இந்நிலையில் ஸ்டோசருக்கு எதிரான இறுதிப் போட்டியின் போது நடுவருடன் வாக்கு வாதத்தில் ஈடுபட்டார். 2-வது செட்டின் ஆரம்பத்தில் செரினா அடித்த பந்து ஸ்டோசர் பக்கம் செல்லும் முன்பாக ஆக்ரோஷமாக கத்தினார். கிராண்ட்ஸ்லாம் விதிப்படி இது தவறு என்று நடுவர் இவா, செரினாவிடம் தெரிவித்துள்ளார். உடனே ஆவேசப்பட்ட செரினா வேண்டுமென்றே இப்படி செயல்படுகிறீர்கள். எனது தவறுக்கு மன்னிப்பு கேட்க மாட்டேன் என்றார்.

இந்த சம்பவம் குறித்து தொடரின் நடுவர் பிரையன் விசாரித்து வருகின்றார். இதில் செரினாவுக்கு ரூ.200 இலட்சம் அபராதம் விதிக்கப்படும் எனத் தெரிகிறது. மீண்டும் இது போல் நடந்தால் யு.எஸ். ஓபனில் பங்கேற்கவே தடைவிதிக்கப்படும் எனத் தெரிகிறது.

# ஐ.சி.சி. ஒரு நாள் அணியில் இலங்கை வீரர்கள் மூவர் தேர்வு

(லண்டன்)

உலகின் சிறந்த வீரர்கள் அடங்கிய ஐ.சி.சி. ஒருநாள் போட்டிக்கான அணியில் இலங்கையின் குமார் சங்கக்கார, திலகரட்ண டில்சான், லசித் மலிங்க ஆகிய மூவரும் தேர்வாகியுள்ளனர்.

அணித் தலைவராக மகேந்திரசிங் தோனி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஒவ்வொரு ஆண்டும் சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) சார்பில் சிறந்த வீரர்கள் அடங்கிய ஒருநாள் போட்டிக்கான அணி அறிவிக்கப்படும். இதில் உலகக் கிண்ணத்தை வென்ற இந்திய அணியில் இருந்து நான்கு, இறுதிப் போட்டிக்கு வந்த இலங்கை அணியில் இருந்து 3 வீரர்கள் தேர்வாகியுள்ளனர். அணியின் தலைவராக உலகக் கிண்ணத்தை வென்ற இந்திய அணித்தலைவர் தோனி தேர்வு செய்யப்பட்டார்.

ஆரம்ப வீரர்களாக டில்சான் (இலங்கை), சேவாக் தேர்வு பெற்றுள்ளனர். நடுத்தர வரிசையில் சங்கக்கார (இலங்கை), டி வில்லியர்ஸ் (தென்னாபிரிக்கா), வோட்சன் (அவுஸ்ரேலியா) இடம்பெற்றுள்ளனர். 6, 7 ஆவது வீரர்களாக யுவராஜ் சிங், தோனி வருகின்றனர். அடுத்த நான்கு இடங்களில் சுழற்பந்து வீச்சாளர் சுவான் (இங்கிலாந்து), வேகப்பந்து வீச்சாளர்கள் உமர் குல் (பாகிஸ்தான்), ஸ்ரையன் (தென்னாபிரிக்கா), சகீர் கான் உள்ளனர். 12 ஆவது வீரராக மலிங்க (இலங்கை) தேர்வு செய்யப்பட்டார்.

**சச்சின் இல்லை**

கடந்த ஆண்டு ஐ.சி.சி.சார்பில் ஒருநாள் போட்டிக்கான சிறந்த வீரர் விருது வென்றவர் இந்திய அணியின் நட்சத்திர வீரர் சச்சின். இந்த ஆண்டு உலகக் கிண்ண தொடரில் இவர் பெரிய அளவில் சாதிக்காததால், இந்த அணியில் தேர்வாகவில்லை.

**நான்கு வீரர்கள்**

இது குறித்து ஐ.சி.சி. விருது குழுவின் தலைவர் கிளைவ்வொயிட்ஸ் வெளியிட்ட அறிக்கையில், ஒருநாள் போட்டிக்கு இந்த ஆண்டு சிறப்பாக அமைந்தது. இந்தியாவில் நடந்த உலகக்கிண்ண தொடர் எந்தளவுக்கு விறுவிறுப்பாக இருந்தது என்பதை அனைவரும் பார்த்திருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

இந்திய அணியினர் உலகக்கிண்ணத்தை வென்றதால் ஐ.சி.சி.லெவின் அணியிலும் ஆதிக்கம் செலுத்தினர். தொடர் நாயகன் யுவராஜ்சிங், இறுதிப் போட்டியில் ஆட்ட நாயகன் விருது பெற்ற தோனி, அதிரடியாக ஆரம்பம் தந்த சேவாக், அதிக விக்கெட் வீழ்த்திய சகீர் கான் ஆகியோருடன், இலங்கையின் 3 வீரர்கள் இதில் இடம் பெற்றுள்ளனர். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# ரசிகர்களின் விருப்ப நாயகன் சங்கக்கார ஐ.சி.சியினால் விருது வழங்கி கௌரவம்

(டுபாய்)

ரசிகர்களின் விருப்ப நாயகன் ஐ.சி.சி விருதை இலங்கை அணியின் குமார் சங்கக்கார பெற்றுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) ஆண்டுதோறும் வழங்கும் வீரர்களுக்கான விருதுப் பட்டியல் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் ரசிகர்களினால் வாக்களிக்கப்பட்டு தேர்வு செய்யப்படும் ரசிகர்களின் விருப்ப நாயகன் விருதை இலங்கை அணியின் குமார் சங்கக்கார பெற்றுள்ளார்.

**கிரிக்கெட் உணர்வை வெளிப்படுத்திய தோனி**

கிரிக்கெட் உணர்வை சிறப்பான முறையில் வெளிப்படுத்தியதற்கான ஐ.சி.சி. விருதை இந்திய அணித்தலைவர் தோனி பெற்றுள்ளார்.

சமீபத்தில் நடந்த இங்கிலாந்து அணிக்கெதிரான நோர்டிங்காம் டெஸ்டில் இங்கிலாந்து வீரர் பெல் சர்ச்சைக்குரிய முறையில் ஆட்டமிழந்தார்.

பின்னர் இங்கிலாந்து அணித்தலைவர் ஸ்ரொரஸ்,பயிற்றுவிப்பாளர் அன்டிபிளவர் கேட்டதற்கு ஏற்பரன் அவுட்டைதிரும்ப பெற்றார் தோனி. இதனையடுத்து பெல் மீண்டும் துடுப்பெடுத்தாடினார்.

இப்போட்டியில் இந்திய அணி தோல்வி அடைய தோனியின் செயல் குறித்து ஒரு பக்கம் பாராட்டும், மறுபக்கம் விமர்சனங்களும் எழுந்தன.

தற்போது தோனியின் பெருந்தன்மைக்கு ஐ.சி.சி.விருது வழங்கி அங்கீகாரம் அளித்துள்ளது.

இந்த ஆண்டு முக்கிய விருது வென்றவர்கள்,

ரசிகர்களின் விருப்ப நாயகன்- சங்கக்கார (இலங்கை), சிறந்த கிரிக்கெட் உணர்வு- தோனி (இந்தியா), சிறந்த டெஸ்ட் வீரர்- குக் (இங்கிலாந்து), சிறந்த இருபது-20 வீரர்- டிம் சௌத்தி (நியூசிலாந்து), சிறந்த வளரும் வீரர் -தேவேந்திர பிசோ(மேற்கிந்திய தீவுகள்), சிறந்த நடுவர்- அலீம் தார் (பாகிஸ்தான்)

## புலமைப்...

போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

8ஆம் ஆண்டு மாணவர்களுக்கு புதிய பரீட்சை ஒன்றை நடத்துவது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார் (ந-5)

## நல்லூரில்...

உடல்வளர்ச்சிகுறைந்த மேற்படிசிறுமியைக் கடத்திச் சென்றவர்கள் நேற்று மாலை 5 மணியளவில் கோப்பாய் தெற்கு பேச்சியம்மன் கோவிலடியில் கொண்டு வந்து விட்டுச் சென்றுள்ளனர்.

மேலும் சிறுமியின் கையில் அவளது வீட்டின் விலாசத்தையும் எழுதிக் கொடுத்துள்ளனர். இந்நிலையில் அழுது கொண்டிருந்த சிறுமியை வீதியால் சென்றவர்கள் கண்டு வீட்டில் கொண்டு சென்று விட்டுள்ளனர். (ந-5)

# மனித உரிமை ஆணையத்திற்கு...

இலங்கை அரசை பெரும் நெருக்கடிக்கு உள்ளாக்கிய இவ்வறிக்கை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்திற்கு உத்தியோகபூர்வமாக அனுப்பிவைக்கப்பட்டமை இலங்கை மீதான சர்வதேச விசாரணையை மேலும் சாத்தியமாக்கும் ஒரு நகர்வு என ஏ.எவ்.பி. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் யுத்த மீறல்கள் குறித்து தன்னால் தனித்து எதுவும் செய்ய முடியாதென தெரிவித்திருந்த ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் இது தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் போன்ற அமைப்புகளே நடவடிக்கை எடுக்க முடியும் என தெரிவித்தார்.

இந் நிலையில் இவ் நிபுணர்குழுவின் அறிக்கை தற்போது ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கும் மனித உரிமைகள் ஆணையாளருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக ஐ.நா. பேச்சாளர் மார்டீன் நேசேக்கி நேற்று முன்தினம் அறிவித்தார்.

இது தொடர்பாக இலங்கை அரசாங்கத்திற்கும் அறிவிக்கப்பட்டிருப்பதாக அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

நிபுணர் குழுவின் அறிக்கை குறித்து தனது கருத்துக்களைத் தெரிவிக்குமாறு இலங்கை அரசாங்கத்திற்கு கால அவகாசம் அளிக்கப்பட்ட போதும் இலங்கைத் தரப்பு இவ் அறிக்கை குறித்து எவ்வித பதிலும் அளிக்கவில்லை. மாறாக வடக்கில் இடம்பெற்ற யுத்தம் குறித்து தனது சொந்த விசாரணை அறிக்கையொன்றை மட்டும் அனுப்பியிருந்தது.

இலங்கையின் இந்த அறிக்கையும் தற்போது நிபுணர் குழுவின் அறிக்கையுடன் இணைத்து மனித உரிமை ஆணையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக ஐ.நா.பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

மனித உரிமைகள் ஆணையத்திற்கு நிபுணர் குழுவின் அறிக்கை அனுப்பப்பட்டுள்ள போதும் இலங்கை அரசு மீது நடவடிக்கை எடுக்கும்படி கோரும் எவ்வித பரிந்துரைகளையும் செயலாளர் நாயகம் முன்வைக்கவில்லை.

இது தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து உறுப்பு நாடுகளே தீர்மானிக்க வேண்டும் என ஐ.நா. பேச்சாளர் ஏ.எவ்.பி. செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. செயலாளர் நாயகத்தால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு கடந்த ஏப்ரல் மாதம் வெளியிட்ட தனது அறிக்கையில், போரில் ஈடுபட்ட இரு பகுதியினரையும் யுத்த மீறல்கள் குற்றச்சாட்டுக்கு உள்ளாக்கியபோதும் இலங்கை அரசு ஆயிரக்கணக்கில் படுகொலைகளிலும் மனித உரிமை மீறல்களிலும் சம்பந்தப்பட்டிருந்ததை சுட்டிக்காட்டியிருந்தது.

அரச படைகளால் வன்னிப் பிராந்தியத்தில் மேற்கொள்ளப்பட்ட காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்கள் குறித்து இவ் அறிக்கை வெளிப்படுத்தியிருந்த விடயங்கள் இலங்கை அரசை கடும் சிக்கலுக்கும் கோபத்திற்கும் உள்ளாக்கியிருந்தது.

இலங்கை அரச படைகள் வைத்தியசாலைகள், ஐ.நா. நிறுவன அமைப்புகள் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க கப்பல்கள் போன்றவற்றின் மீது திட்டமிட்ட தாக்குதல்களை மேற்கொண்டமை குறித்தும் சரணடைந்த விடுதலைப்புலிகள் உறுப்பினர்கள் துப்பாக்கியால் சுட்டுக்கொன்றமை குறித்தும் பெண்கள் மீது மேற்கொள்ளப்பட்ட பாலியல் வல்லுறவு குறித்து ஐ.நா. அறிக்கை சுட்டிக்காட்டியிருந்தது.

அதேவேளை 3 இலட்சத்து 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்களை மனித கேடயங்களாக பாவித்தமை, தப்பிச்செல்ல முயன்ற மக்கள் மீது தாக்குதல் நடத்தியமை போன்ற குற்றச்சாட்டுக்களை விடுதலைப்புலிகள் மீதும் நிபுணர் குழு சுமத்தியிருந்தது.

அரச படைகளின் தாக்குதல்களால் 2009 ஜனவரி முதல் மே மாதம் வரையிலான காலப்பகுதியில் மட்டும் 10 ஆயிரம் வரையான மக்கள் கொல்லப்பட்டனர். இவர்களில் பெரும் பகுதியினர் யுத்தத்தின் இறுதி நாட்களில் இராணுவம் மேற்கொண்ட கனரக பீரங்கித் தாக்குதலால் வெளியுலகிற்கு தெரியாது கொல்லப்பட்டனர் என நிபுணர் குழு அறிக்கை தெரிவித்திருந்தது.

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை ஒரு தலைப்பட்சமானது எனத் தெரிவித்த இலங்கை அரசு, இவ்வறிக்கைக்கு எதிராக தீவிரமான சர்வதேச பிரசாரத்தையும் மேற்கொண்டது. ஆனாலும் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் இலங்கை அரசு மீதான சர்வதேச விசாரணை குறித்து அழுத்தங்களை பிரயோகித்து வருகின்றன.

மேற்குலகின் இந்த முயற்சிகள் காரணமாக அச்சமடைந்துள்ள இலங்கை தனக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தில் மேற்கொள்ளப்படக் கூடிய பிரேரணைகளை தடுப்பதற்கு தற்போது சீனா போன்ற தனது ஆசிய நண்பர்களை நாடியுள்ளது.

வன்னியில் மக்கள் பெரும் தொகையில் கொல்லப்பட்ட காலத்தில் ஐ.நா. அமைப்பு செயற்பட்ட விதம் குறித்தும் நிபுணர் குழு தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியிருந்தது. இக் காலப்பகுதியிலான ஐ.நாவின் செயற்பாடுகள் குறித்து தொரயா ஒபாய்ட் தலைமையிலான குழு தற்போது ஆராய்ந்து வருவதாக ஐ.நா. பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ந-5)

மஹாராஜா Food நிறுவனத்தின் மற்றும் ஒரு சேவை
G.T.V.யும் Aramex இணைந்து நடத்தும் உள் நாட்டு கடிதங்கள் பொதிகள் விநியோகம் செய்தல் கொழும்பு /யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு ஒப்படைத்த அடுத்த தினமே முகவரியில் ஒப்படைக்கப்படும்.
MAHARAJA FOOD PRODUCT
மேலதிக விபரங்களுக்கு:-
கொழும்பு
# 18/3 Dr.E.A coory Mawatha, Wellawathte.
T.P:-0112360926,0112259849
யாழ்ப்பாணம்
No.225, Kasturiyar Road, Jaffna
T.P.: 021 222 4338
No.272, K.K.S. Road, Jaffna.
T.P.: 021 222 4825
கொழும்புக்கான கட்டணம் ரூபா 200/= மட்டுமே
aramex delivery unlimited



உல்லாசம் உங்கள் கண்முன்னே...
TILKO JAFFNA CITY HOTEL
TILKO hotels
No.70/6, K.K.S Road, Jaffna.
Tel: 021 2225969
web:www.cityhoteljaffna.com
e-mail: info@cityhoteljaffna.com



# பிரேக்கின் வருகைக்கு...

இருந்த பல பிரதேசங்கள் தற்போது தான் விடுவிக்கப்பட்டு வருகின்றன. இன்னும் யாழ். குடாநாட்டில் 11 ஆயிரத்து 48 குடும்பங்களைச் சேர்ந்த 40 ஆயிரத்து 147 பேர் மீள்குடியேற்றப்படவில்லை.

அத்தோடு மிதிவெடிகள் அகற்றப்பட்டு உத்தரவாதம் அளிக்கப்பட்ட பகுதிகளில் மக்களை மீள்குடியேற்றுவதற்கு அப்பகுதியில் போதியளவு வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை.

குறிப்பாக வீடுகள் அமைக்கும் பணிகள் தற்போதும் இடம் பெற்றுவருகின்றன. அத்தோடு மீள்குடியேற்றப்படும் மக்களுக்கு வழங்குவதற்கு வீடுகள் போதியளவில் இல்லை. அதனாலும் மீள்குடியேற்றம் தடைப்படுகின்றது.

இது தவிர படித்த இளைஞர் யுவதிகள் வேலையின்றி அவதிப்படுகின்றனர். அவர்களிற்கு வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் யுத்தத்தின் போது அழிவடைந்த அல்லது கைவிடப்பட்ட தொழிற்சாலைகளை மீள இயங்க வைக்க வேண்டும்.

அத்தோடு படித்த பல இளைஞர் யுவதிகள் அரசாங்க வேலையை எதிர்பார்த்து உள்ளனர். மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பும் வகையில் அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

நாட்டில் இடம் பெறும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த பிரதேசங்கள், கிராமங்கள் தோறும் உயர்மட்ட அதிகாரிகளை தலைவர்களாகக் கொண்ட குழுக்கள் உருவாக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகிறது.

இதன்மூலம் குற்றச் செயல்கள் கட்டுப்படுத்தப்பட்டும் வருகிறது என தாம் தெரிவித்ததாக அவர் கூறினார். (ந-6)

இடமாற்றம்
இல. 75, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த
நியூ லலிதாஸ் ஜுவல்லரி ஸ்தாபனம்
10.09.2011 தொடக்கம் இல. 111, மின்சார நிலைய வீதியில் இயங்கி வருகின்றது என்பதை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.
தொடர்புகளுக்கு : - 021 222 4134
(சி-4418)



# மர்ம மனி...

ஆளுநர் அலுவலகம் அறிவித்துள்ளது.

இதன் பிரகாரம் காங்கேசன்துறைப் பொலிஸாருக்கு 021 320 2323, பருத்தித்துறை பொலிஸாருக்கு 021 320 2333, யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு 021 320 2343 மற்றும் சாவகச்சேரி பொலிஸாருக்கு 021 320 2353 என்ற தொலைபேசி இலக்கங்கள் மூலம் பொதுமக்களை அறிவிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

அத்துடன் அனைத்து பொலிஸ் பிரிவுகளைச் சேர்ந்தவர்களும் எந்தப் பொலிஸாருக்கு தகவலை வழங்கினாலும் நடவடிக்கை எடுப்பார்கள் எனவும் வடக்குமாகாண ஆளுநர் அலுவலகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

# மீள் குடியேற்றம் ஏன்...

தேசத்தை மீண்டும் சுடுகாடாக்க நினைத்தால் எதிர்ப்போம், விக்கிலீக்ஸ் என்ன வேதாகமமா? கொடுத்த தகவலுக்கு ஆதாரம் என்ன? விலை போகாத எங்கள் தமிழ்க் குலப் பெண்களை இழிவுபடுத்த வந்தீரோ, தமிழர்கள் விரும்புவது ஐக்கிய இலங்கைக்குள் சமாதான சமவுரிமை என்ற வாசகங்கள் எழுதப் பெற்ற பதாகைகளை கையில் ஏந்தி நிற்கின்றனர்.

அதேவேளை அப்பகுதிக்குவந்த யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேவின் பத்மதேவா உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை அப்பகுதியிலிருந்து அப்புறப்படுத்த முயற்சித்தனர்.

எனினும் அது முடியாமல் போக, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுங்கள். ஆனால் வீதிப் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தாதீர்கள் என பொலிஸார் கேட்டுக் கொண்டனர்.

இறுதியில் அமெரிக்க பிரதிநிதிகள் குழுவினர் மக்கள் பிரதிநிதிகளை அமெரிக்க தகவல் கூடத்தில் சந்திக்க மாட்டார்கள் என்பதை உறுதிப்படுத்திய பின்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கலைந்து சென்றனர். (ந-6)

# ஐ.நா.நிபு...

அமெரிக்கா ஆகியவற்றின் தூதுவர்கள் முறைசார கலந்துரையாடல் குறித்த மகிழ்ச்சி வெளியிட்டுள்ளதுடன் பாரிய மனித உரிமை மீறல்கள், மனிதாபிமானச் சட்டமீறல்கள் குறித்து பொறுப்புக் கூறப்பட வேண்டுமீ என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

நல்லிணக்கத்தை ஏற்படுத்த துரிதமான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு இலங்கை அரசை தாம் தொடர்ந்து வலியுறுத்தி வருவதாகக் கூறிய அமெரிக்கத் தூதுவர் எலீன் சம்பர்லெய்ன், இலங்கை அதனைத் தானாகவே செய்யும் என்று நம்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

நம்பகமான முறையில் அவர்கள் (இலங்கை) அதனைச் செய்யாது போனால் அனைத்துலக சமூகம் அதனைச் செய்வதற்கு நிர்ப்பந்திக்கப்படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார். (ந-5)

# தமிழ் கைதிகள் மீது...

கொழும்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் மீது கடந்த ஒரு வாரமாக பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த கைதி ஒருவர் மோதலில் ஈடுபட்டுவந்துள்ளார்.

இந்நிலையில் சிறைச்சாலை அதிகாரிகளினால் குறித்த பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த கைதி தனியான ஒரு சிறைக் கூடத்திற்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதனால் பாதாள உலகக் குழுவைச் சேர்ந்தவர்கள் சிலர் நேற்று மாலை தமிழ் அரசியல் கைதிகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதில் 3 தமிழ் அரசியல் கைதிகள் படுகாயமடைந்துள்ளனர். இச்சம்பவத்தையடுத்து தமிழ் அரசியல் கைதிகள் தனியான சிறைக் கூடங்களுக்கு சிறை அதிகாரிகளினால் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என எம்.கே.சிவாஜிலிங்கம் குறிப்பிட்டார். (ந-5)

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் திருமதி சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம்

(சுகிர்தா ரீச்சர்)



எமது பாடசாலையின் சிரேஷ்ட பழைய மாணவியும்,
கொக்குவில் இந்துக் கல்லூரியின்
முன்னாள் பிரதி அதிபருமாகிய
**திருமதி சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம்**
அவர்கள் அமரத்துவம் அடைந்த செய்தி அறிந்து ஆழ்ந்த துயரமடைகின்றோம். அவரின் இழப்பால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்
கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை, கொக்குவில் (சி-4432)

INFORMATION TECHNOLOGY PARK
Jaffna, Sri Lanka.
Under the purview of the
Ministry of Technology and Research
MPCS Building, 127, K.K.S.Road, Jaffna, Sri Lanka.
Office: 021 222 3641 Fax : 021 222 3643
அரச நிறுவனமான தகவல் தொழில் நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
Online Class
Diploma in PC Application & Office Management (MS Office syllabus included)
Workshop Classes
Internet & E-Mail
Adobe Photoshop
Diploma Classes
Diploma in MS Office
Diploma in DTP
Certificate Courses
MS Word, MS Excel
MS Access, Visual Basic
CorelDRAW, PageMaker
சகல கற்கை நெறிகளுக்குமான பதிவுக் கட்டணம் :250/=
விண்ணப்பப்படிவங்களுக்கும், பதிவுகளுக்கும் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.
வார நாள் வகுப்புகள் ஆரம்பம் - 23/09/2011
வார இறுதி வகுப்புகள் ஆரம்பம் - 25/09/2011
-Executive Officer-



Study in Jaffna ! Save your money!
இணையத்தளப்பதிவு, இணையத்தள வடிவமைப்பு, மென்பொருள் வடிவமைப்பு, கணினி வலைப்பின்னல் சேவைகளினை வழங்குவதில் பல வருட அபிமானம் பெற்ற SPEED IT NET நிறுவனத்தில் உயர் தர கணினி வகுப்புக்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றது.
வேலைவாய்ப்பினை உறுதிசெய்யும் உயர் தர கற்கைநெறிகளான
BIT (Colombo University) Degree(Semester 1-6)
Advanced Diploma in Web Development (HTML/PHP/MySQL/JavaScript/CSS/Ajax/Open Source Applications)
Diploma in Windows Networking / Hardware Engineering
Diploma in Computer Programming (Java or C# or VB.net or VB6 or C++)
மேற்படி கற்கைநெறிகளில் ஒன்றை பயிலும் மாணவர்களுக்கு
பின்வரும் பயிற்சிப்பட்டறை வகுப்புக்களில் இலவசமாக கலந்துகொள்ளும் வாய்ப்பு
# English # Tamil Computing # Pc & Internet Applications # e-Commerce
மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் மட்டும்! முன்கூட்டிய பதிவுகள் அவசியம்!
வகுப்புக்கள் அனைத்தும் ஒக்டோபர் 1 ம் திகதி முதல்
SPEED IT NET
The Quick way to Online
URL: www.speedit.lk
# Tel: 021 222 8358
0777 563 213
021 567 1058
72/28 Panikkar Lane, off Palaly Road, Thirunelvely Junction Jaffna



இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.09.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.